NH
58747

688

OFFICE ... 28 . 9 . 1911 ... MADRAS.

# DHARANI

OR

# THE CHASTE QUEEN

A TAMIL DRAMA

BY

A. SUBRAMANIYAM.

MADRAS.

உ

# கற்புள்ள இராணி

அல்லது

# தாரணி.

இந்த

தமிழ் நாடகம்

ஆ. சுப்பிரமணிய முதலியார்

அவர்களால் இயற்றப்பட்டது.

முதல் பதிப்பு.

சென்னை:

முராஹரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

Registered Copy-right.] [விலை அணா 8.

OFFICE OF THE REGISTRAR OF ... 26 JUN 1911 MADRAS.

688

II. ...

செப்பனிடுவதற்கு ... கொள்ளப்பட்ட ... மாதம் 1985 வருடம்

செப்பனிட்டு முடித்த ... மாதம் 1985 வருடம்

... கையொப்பம்.

O—,2 MSXI,K
N11

58247

# கற்புள்ள இராணி

அல்லது

# தாரணி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUN 1911
MADRAS.

## நாடக பாத்திரங்கள்.

| | |
|---|---|
| தருமசீலன் ... ... ... | உஜ்ஜயநீ நாட்டரசன். |
| அழகாநந்தன் ... ... ... | தருமசீலன் புதல்வன். |
| வசந்தன் ... ... ... | தருமசீலனுடைய சகோதரன். |
| சூரசேனன் ... ... ... | உஜ்ஜயநீ சேனாதிபதி—அழகாநந்தனுக்கு உயிர்த்தோழன். |
| சத்தியசீலன், நீலகண்டன் ... ... | தருமசீலனுடைய மந்திரிகள். |
| பிரதாபசந்திரன் ... ... ... | தாரா நகரத்தரசன். |
| சூரன், வீரன் ... ... ... | கொலையாட்கள். |
| காலபாசன் ... ... ... | கள்வர் தலைவன். |
| காலன், பல்லன், வயத்தான், தோப்ளான், டமாரபாபு, பனமரத்தான் ... ... | திருடர்கள். |
| சாரங்கன் ... ... ... | ஓர் குடியானவன், |
| சத்தியவதி ... ... ... | தருமசீலன் மனைவி. |
| தாரணி ... ... ... | பிரதாபசந்திரன் புதல்வி—அழகாநந்தன் மனைவி. |

சேனைவீரர்கள், சேவகர்கள், உஜ்ஜயிநீ நாட்டு சைனியங்கள், சோம்பேறி முதலானோர்.

கதை நிகழிடம் :—உஜ்ஜயநீ நாட்டிலும், அதன் அருகிலுள்ள தாரா நகரத்திலும், மத்தியிலுள்ள ஓர் வனத்திலும்.

# கற்புள்ள இராணி

அல்லது

# தாரணி.

## ACT 1, Scene 1:

இடம்—அரண்மனையில் தருமசீலனுடைய அறை.

தருமசீலன் மரணாவஸ்தையிலிருக்கின்றான். சத்தியவதி அவனருகில் அழுதவண்ணம் உட்கார்ந்திருக்கிறாள். அழகாநந்தன் அழுதவண்ணம் நிற்கின்றான். மந்திரி பிரதானிகள் முதலானோர் ஒரு புறமாய் நிற்கின்றனர்.

தரு. தம்பி! தம்பி!! தம்பி!!! ஏன் இன்னும் வரவில்லை?

சத். நீலகண்டரே! தாம் விரைந்துசென்று வசந்தரை பலவந்தமாக அழைத்துவாரும். போம். சீக்கிரம்.

சத்தி. ஆ! பிராணநாதா! பிராணநாதா!! ஆ! பாழும்தெய்வமே! என் குமாரன் அழகாநந்தன் பொருட்டல்லவோ நான் உயிர் தரிக்கவேண்டியவளாயிருக்கின்றேன். ஐயோ! நான் என் செய்வேன்?

அழ. அம்மா! அம்மணி! இதற்குத்தான் உம்முடைய வயிற்றில் வீணன் நான் ஒருவன் பிறந்தேனோ? ஐயோ! அம்மா! நீர் வருந்தவோ நான் பார்த்துக்கொண்டிருப்பது! நாம்கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

நீல. (பக்கமாய்) மோசம்! மோசம்! அடேபாவி! — அவனையேன் இவர் இங்கு வரவழைக்கவேண்டும்?

தரு. ஐயோ! நான் — இறப்பதன்முன் — என் தம்பியை — காணப்பெறேனாயின் — உம்! நாம் கொண்ட எண்ணங்களெல்லாம் வீணாய்ப் போயினவோ! சத்தியசீலரே நான் வரவழைக்கச் சொன்ன மந்திரி பிரதானிகள் அதிகாரிகளெல்லோரும் வந்திருக்கின்றார்களா?

சத். அரசே! ஆம்; எல்லோரும் அப்படியே வந்திருக்கின்றார்கள்.

தரு. சத்தியசீலரே, என்னை - சற்று - உட்காரும்படிசெய்யுங்கள்.

அழ. அண்ணா ! தாம் ஏன் வீணாகதேகத்திற்கு தொந்தரவு கொடுக்கின்றீர்கள். (அரசனைத் தூக்கி உட்காரவைக்கின்றான்.)

தரு. வசந்தன் இன்னும் வரவில்லையா ?

சத். இன்னும் வரவில்லை.

தரு. சத்தியசீலரே, தாராநகரத்திலிருந்து தூதன் — வந்திருப்பதாக தெரிவித்தீரே என்ன வாயிற்று ?

நில. பிரியே ! தாம் இத்தருணத்தில் உலகத்தின்மாயாவிகாரங்கள் தமது மனதைச் சலனப்படுத்தும்படி விடலாகாது.

தரு. மந்திரி - பிரதானிகளே ! — நான் இறந்தபோதிலும் தாராநகரத்தரசனை மாத்திரம் சும்மா விடாதீர்கள். தெரியுமா ! அதன்படி செய்கின்றீர்களா ?

எல்லோரும் அப்படியே மஹாராஜா.

தரு. அவனுக்கு இவ்வளவு கருவம் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை.

நில. ஆம் ! அவன் திராவிடதேசத்தைவென்றுவிட்டோமென இறுமாப்படைந்து, இவ்விராஜ்ஜியத்தையும் வென்று விடலாமென்று வீணெண்ணங்கொண்டு இத்தாராநகரத்தரசன் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்தான்போலும்.

அழ. தந்தையே ! பெருங் காட்டில் வெயிலிலுலர்ந்து போனமுட்செடிகளின் குவியில்களை ஒருசிறியதீப்பொறியன்றிக் கொளுத்துமாறு, நானொருவனாய் நின்று, நம்பகைவனையெதிர்த்துச்சென்று, அவனைக்கொன்று, அவனது சேனைகளை யுத்தத்தில் வென்று, நமதுநாட்டின் மகிழ்மையைப் புவியெங்கும் விளங்கச்செய்ய நான் சித்தமாயிருக்கின்றேன். நீர் ஏன் வருத்தப்படவேண்டும்.

தரு. அப்பா, நான் — இருந்து — உன் வீரியத்தைப் பார்த்துச்—சந்தோஷப்பட கொடுத்து வைக்காமற்போயினனே !



அழ. தந்தையே ! நீர் அப்படி ஒருகாலும் எண்ணவேண்டாம். நீர் இவ்வுலகைவிட்டு நீத்தபோதிலும் நீர் அறியாதவிஷயமன்று இது !

தரு. கண்ணே ! அழகாநந்தா ! உன் தாயாரை — பத்திரமாய் பார்த்துக்கொள்.

அழ. தந்தையே ! நீர் சொல்லவேண்டியதில்லை " என்னைப்பெற்ற தாய் தந்தையன்றி எனக்குப் பிறிதொருதெய்வமில்லை " இது சத்தியம்.

தரு. கண்ணே ! கண்ணே ! !

சத்தி. ஆ ! பிராணநாதா ! (அழுகிறாள்.)

தரு. சத்தியவதி, நீ ஏன் அழவேண்டும் ? உனக்கு யாதொரு குறைவுமில்லை.

அழ. அம்மணி ! ஏனோ இவ்வாறு வருத்தப்படுகின்றீர் ? தாங்கள் இவ்வாறு வருந்துவதைப் பார்த்து என் மனம் எப்படி பொறுக்கும் ?

தரு. வசந்தன் வந்து விட்டானோ ?

வசந்தன் வருகின்றான்.

எல்லோரும் இதோ வந்து விட்டான் !

தரு. வசந்தா !

வச. அண்ணா !

அழ. அருகில் வரும்படி சொல்லுகின்றார்.

தரு. அப்பா — உனக்கு இத்தனை காலம் பேடிதனத்தோடு வர ?

வச. அண்ணா ! இச்சமாச்சாரத்தைக் கேள்விப்பட்டவுடம் தாமதியாது விரைந்து வந்தேனே !

தரு. இதோ — நான் — இறக்க — காலம் — நெருங்கிவிட்டாற்போலிருக்கின்றது. இனி தாமதம் — செய்யலாகாது — வசந்தா ! அருகில்வா.

வச. இதோ வந்தேன் அண்ணா.

நில. [பக்கமாய்] சண்டாளன்! சண்டாளன்!!

தரு. வசந்தா! மந்திரிகளே! — பிரதானிமுதலானவர்களே! நான் சொல்வதை — கவனமாய் — கேளுங்கள். காலம் நெருங்கிவிட்டது — இப்பொழுது — எனதுயிரை — உறுதியாகப் பிடித்துக்கொண்டு — பேசுகின்றேன். உங்களையொன்று — கேட்டுக்கொள்ளுகின்றேன் — அதன்படி — செய்யவேண்டும்.

எல்லோரும் அப்படியேமஹாராஜா!

தரு. சத்தியம் — செய்யுங்கள்.

எல்லோரும் சத்தியமாக.

தரு. இப்பொழுது — நான் சந்தோஷமாய் — விடைபெற்றுக் கொள்ளுவேன் வசந்தா!

வச. அண்ணா! அப்படியே செய்கின்றேன்.

தரு. என்பிரியமுள்ள தம்பி! நான் — இன்னும் — சற்றுநேரந் தான் ஜீவித்திருப்பேன். இப்பொழுது — உன்னிடத்தில் — யான் — ஒப்புவிக்கும் — பொருளைப்பாதுகாப்பாய் — என்று — நம்புகின்ற என்னை — மண்ணாசையாலாயினும் — பொன்னாசையாலாயினும் — துரோகம் — செய்வாயாகில் — ஸர்வ கர்த்தாவாகிய — பரமேசுவரன் — உன்னைத் தண்டிப்பானென்பது — நிச்சயம். எனது — குலதீபமாகிய — அழகாநந்தனுக்காக — யான் — செய்த — தவம் — உனக்கே தெரியும். அவன் — பட்டத்துக்கு வருமுன்னமே — எனக்கு அநித்தியகாலம் — நேரிட்டு விட்டது. ஆதலால் அவனுக்கு தகுந்த ராஜக்கன்னிகையை — மணம் — புரிவித்து — நீங்கள் எல்லோரும் — சேர்ந்து — முடிசூட்டிவைப்பீரென்று — நம்புகின்றேன்! என்ன சொல்லுகின்றீர்கள்?

வச. அண்ணா! அப்படியே ஆகட்டும்.

தரு. தம்பி! சத்தியவதியை — பத்திரமாய் — பார்த்துக்கொள். நான் — விடை — பெற்றுக் கொள்ளுகிறேன்! சுகமாய் —



வாழுங்கள்! என் உயிர் — போகின்றது. கண்ணே — சத்தியவதி — அழகா — [சாகிறான்].

சத்தி. ஆ! பிராணநாதா — [சாய்ந்துவிடுகிறாள். அழகாநந்தன் தாங்கிக் கொள்ளுகிறான்]

---

## ACT 1, Scene 2.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

சத்தியவதி மஞ்சத்தின்மீது வீற்றிருக்க, அழகாநந்தன் தன்தாயார் அருகில் உட்கார்ந்திருக்கிறான். சத்தியசீலரும், நீலகண்டரும் ஒரு புறமாக நின்றுக்கொண்டு மெல்ல பேசிக்கொண்டிருக்கின்றனர். வசந்தன் ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கிறான்.

வச. அழகாநந்தா, நமது படைகளெல்லாம் தாராநாகரை நோக்கி எப்பொழுது புறப்படப்போகிறது?

அழ. இன்றைத்தினம் முப்பது நாழிகைக் கெல்லாம் புறப்பட வேண்டும்.

சத்தி. கண்ணே, இவ்வுடைவாளால் [உடைவாளை அழகாநந்தன் கையில் கொடுக்கிறாள்] உனது பகைவரை யமனுலகக்கேற்றி, உனது தந்தையின் சபதத்தை நிறைவேற்றி, உனது கீர்த்தியையும் புகழையும் நிலைபெறச்செய்து, சீக்கிரம் எனது மனம் மகிழும்படி வெற்றிவீரனைத் திரும்பிவருவாய்!

வெளியில் ஜெயகோஷம் செய்கின்றனர்.

சத். ஆமா, நற்சகுனமும் நமக்கு வாய்த்தது. இளவரசர் அப்படியே வெற்றிபெற்று வருவார் என்பதற்குத் தடையில்லை.

சத்தி. அழகாநந்தா, உன் தகப்பனார் தாராராஜ்ஜியத் தரசனுடைய பெண்ணை உனக்கு மணம் செய்து வைப்பதாக யோசித்திருந்தார். இதற்குள்ளாக இந்தசண்டை நேர்ந்து விட்டது. ஆதலால் அவளை சண்டையில் பத்திரமாய் மீட்டுக் கொண்டுவா.

அழ. அப்படியே ஆகட்டும். அம்மா, நான் விடைபெற்றுக் கொள்ளுகின்றேன்; நேரமாகின்றது. [முகத்தைப்பார்த்து] அம்மணி! அம்மணி!! ஈசானிய துணை.

சத்தி. கண்ணே! என்ன முகம் திடீரென்று வாடியது? அஞ்சுகின்றனையோ என்ன?

அழ. அம்மணீ! நானோ அஞ்சுவேன்? என்ன வார்த்தை சொன்னீர்! அதற்காக நான் வருந்தவில்லை. ஒரு வேளை யுத்த முனையில நான் இறக்கும்படி நேர்ந்தால் உமது திருமேனியை நான் மறுபடியும் எக்காலத்தில் காண்பது என்ற கியாபகம் வந்தது. அதுவே சற்று என் மனதைக் கலைத்தது வேறொன்றுமில்லை.

வச. குமாரா! அப்படி யுத்தத்தில் நீ இறந்தால் வீர சொர்க்கமடைவாய். தெய்வ கடாக்ஷத்தால் இறக்கும்படி நேர்ந்தால் மார்பிற் காயத்துடன் இறக்கவேண்டும். முதுகிற் காயத்துடனிறவாதே.

சத்தி. கண்ணே, நானும் விரைவில் உன்னைவந்து சேருவேன், எனக்கு மாத்திரம் எதாவது அடையாள மனுப்புவாய்—ஒருகால் நீ இறப்பாயாகில்.

அழ. அப்படியே செய்கின்றேன்.

சத்தி. கண்ணே! அழகாநந்தா! எனது முதாதையினுடைய சபதத்தை நிறைவேற்றவேண்டும். அத்துஷ்டன் நம்மிடமிருந்து கவர்ந்து சென்ற நாடு நகரங்களையும் மீட்கவேண்டும். கண்ணே! செய்வையா நீ இந்த ?

அழ. அம்மணீ, தாங்கள் அஞ்சவேண்டாம். ஒரு க்ஷணத்தில் முடித்துவிடுகிறேன்.

சத்தி. கண்ணே! கண்ணே!! [பெருமூச்சுவிடுகிருள்.]

அழ. உங்களுக்கு இந்த சந்தேகமெல்லாம் வேண்டியதில்லை. சீக்கிரம் விடையளித்தனுப்பும் என்னை.

சத்தி. கண்ணே, சுகமாய் போய்வா.

அழ. [வசந்தனிடம் திரும்பி] அண்ணா! நான் போய் வருகின்றேன்?

வச. ஐயோ! குமாரா! குமாரா!!

சத். நீர் இப்பொழுது கண்ணீர் விடலாமா! ஒரு குறையும் வராது. சந்தோஷமாய் வார்த்தைகூறி யனுப்புங்கள்.



அழ. அப்பா! நீர் ஏன் வருத்தப்படவேண்டும்? வேண்டாம்.

நீல. [பக்கமாய்] ஐயோ பாவம்! அதிக வருத்தம்—கேட்பானேன்.

சூரசேனன் வருகின்ருன்.

சூர. அரசே! நாழியாய் விட்டது சீக்கிரம் வரவேண்டும்.

அழ. இதோ வந்து விட்டேன்.

சூர. அம்மணீ! எனக்கும் சீக்கிரம் உத்திரவளியும் நானும் தங்களுடைய ஆசீர்வாதத்தால் உயிருடன் ஜெயம் பெற்று வரவேண்டும்.

சத்தி. அப்படியே சுகமாய் வெற்றி பெற்று வருவாய். அப்பா, அழகாநந்தனை பத்திரமாய் பார்த்துக்கொள் [யுத்த பேரிகை மறுபடியும் முழங்குகிறது.]

அழ. சத்தியசீலரே, நீல கண்டரே, நான் போய்வருகிறேன். எனது தாயாரை உங்களிடம் ஒப்புவித்துப் போகின்றேன். அவர்களுக்கு நீங்கள்தான் தேறுதல் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும்.

சத். அப்படியேசெய்கின்றோம். வெற்றிபெற்று வருவீராக.

நீல. அதற்கென்ன சந்தேகம்.

சத்தி. [அழுத வண்ணம்]. கண்ணே! போய் வருகின்றுயா?

அழ. அம்மணீ, இதுவரையில் எவ்வளவோ மனவுறுதியுடனிருந்த தாங்கள், இப்பொழுது தாமே கண்ணீர் விடுகின்றீர்களே! வேண்டாம் நான்போய் ஜெயம் பெற்றுவருகின்றேன் பயப்படாதீர். [அழகானந்தனும், சூரசேனனும் போகிருர்கள்] சத்தியவதி மஞ்சத்தின் மீது சாய்ந்து விடுகின்ருள்.

சத். அம்மா, தாங்கள் ஒன்றுக்கும் அதைரியப்படவேண்டாம் அதி வீர சூர மஹாராஜனுடைய வயிற்றிற் பிறந்த தமக்கு நான் என்ன தைரியம் செல்லப்போகின்றேன்? ஆயினும் அழகாநந்தருடைய வீர சௌரியம் தமக்குத் தெரியாது. நேரிற் கண்டிருக்கும் எனக்குத் தெரியும். அவருடைய குணத்தையும் பராக்கிரமத்தையும் அறியாதவர் யாவர்? மஹான்! என்ன வீரியம்! என்ன விநயம்! என்ன பெருமை

என்ன பொறுமை! என்ன ஜீவகாருண்யம்! என்ன கல்யாண குணம்! மஹா பராக்கிரமசாலி! ஸகலதர்மங்களை யுமறிந்தவர்! வருணன் வீரியத்தில்! கோபத்திற் காலாந்தகன்! மன்மதனும் அவருடைய அழகைக் கண்டால் வெட்கங் கொண்டோடுவான்! ஆதித்யனைப்போல் தேஜஸ்வீ! உம்— அம்மஹா புருஷனுடைய குணவிசேஷங்களை வர்ணிக்க ஆதிசேஷனாலு மாகாது. சுத்த வீரனென்று நினையும். அவருக்கு ஒரு கஷ்டமும் வராது. நாங்கள் என் வருந்த வேண்டும். அவருக்கு ஒரு கெடுதியும் நேரிடாது.

சத்தி. கடவுள்தான் கிருபைசெய்ய வேண்டும். [போகிறாள்.]

வச. நானும் விடைபெற்றுக்கொள்ளுகின்றேன்.

சத். நாங்களும் போய்வருகிறோம்

வச. அப்படியே [போவதுபோல் நடிக்கின்றான்.]

நீல. சத்தியசீலரே, வாரும். நான் சில சமாச்சாரம் தங்களைகேட்க வேண்டும் [போகிறார்கள்.]

வச. [அவர்கள் போன பிறகு] உம்— நான் அன்று மஹாராஜாவுக்கு கொடுத்தவிஷம், உடனே அதினுடைய குணத்தைக் காட்டிவிட்டது. இன்னும் நான் நினைத்த காரியங்களெல்லாம் ஜெயம் பெறுவேன் என்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் இந்த நீலகண்டன் மாத்திரம் என் மீது சந்தேகிக்கின்றான் போலும். ஆகட்டும் அவனையும் ஒழித்து விடுகின்றேன். ஒருவேளை இப்பொழுது அழகானந்தன் வெற்றி வீரனாகத் திரும்புவானாயின் இது வரையில் நான் பட்டபாடெல்லாம் வீணாகும் என்பதற்கு சந்தேகமில்லை. ஒருவேளை அவனுக்கு தீமை செய்ய நினைத்ததெல்லாம் நன்மையாய் முடியுமோ? அழகானந்தன் யுத்தத்தில் மாளட்டுமெனக்கருதி தாரா நகரத்துப் பாண்டியனைத் தூண்டிவிட்டால் இதைக் கொண்டு சத்தியவதி தன் புருஷனுடைய சபதத்தை நிறைவேற்றிவிடுவாள் போலிருக்கிறதே! நம்முடைய எண்ணம் ஒன்றும் நிறைவேறாவிட்டால் என்செய்வேன்? சும்மா இருந்தால் இவ்விராஜ்ஜியத்தை ஸ்திரப்படுத்துவது எங்ஙனம். நானும் இவ்விராஜ்ஜியத்தை அழகானந்தனுக்கே முடிசூட்டி வைப்பதாக என் தமயனிடத்



தில் சத்தியம் செய்து கொடுத்தேனே! இதற்கென்ன செய்யலாம்? நம்ம சங்கடமாயல்லவோ முடிந்துவிட்டது. [யோசித்து] இவன் சிறுவயது முதல் அதிபராக்கிரமமுடையவனா யிருக்கின்றான். ஐயோ இப்படிப்பட்ட மகன் என் வயிற்றிலுதித்திருக்கலாகாதா. உம்— இதுகளை எல்லாம் யோசித்து என்ன பலன். நடக்கவேண்டிய காரியத்தைப் பார்ப்போம். இப்பொழுது நான் என்ன செய்வது? துணிந்து ஒரு காரியத்தைத் தொடங்கினாலன்றி நாமிதுகாறும் பிழைத்த பிழைப்பெல்லாம் வீணாய்விடும். ஆதலின், எவ்வித முயற்சியினாலாவது அழகானந்தனைத் தொலைத்து விடுவதே நலம். அவனை எவ்விதம் தொலைப்பது? சீ! முயற்சியாலாகாத காரியமென்ன இருக்கின்றது? [யோசித்து] எதற்கும் நாமிப்படி செய்வோம்! ஒரு சேவகன் வருகின்றான். யார் வருவது?

பிரதாபசந்திரமகாராஜா அனுப்புனாருங்கோ. [ஓர் கடிதத்தைக்கொடுக்கின்றான்]

என்ன கடிதம் இது? [படிக்கின்றான்] ஆ! ஆ! நினைத்தேன் நினைத்தேன்!! வெற்றியடைவது கஷ்டமென்று தெரிவித்துவிட்டாரே! ஐயோ என்ன செய்வேன். [யோசித்து] ஆ! ஆ!! இதுவே சரியான யோசனை. சமாதானமாய் அழைத்துக் கொண்டுபோய் விஷம்வைத்து கொன்று விடும்படியாய் கட்டளை செய்வோம். இதுவே நல்லயோசனை [கடிதம் எழுதுகின்றான்.] அடே! இதை எடுத்துக்கொண்டுபோய் சீக்கிரம் மஹாராஜாவிடத்தில் சேர்த்து விடு. போ சீக்கிரம்! போகின்றான் [போவது போல் நடித்து] ஆஹா! இந்த மஞ்சத்தை விட்டு பிரிய மனமில்லை. இது செய்த பாக்கியமே பாக்கியம்! சத்தியவதி இதன்மீது வீற்றிருக்கும்போது எவ்வளவு அழகாயிருந்தது. இளைத்துக் கறுத்து வாடி மலிந்திருந்த போதிலும், இவளுடைய அழகை யான் என் சொல்வேன், ஆ! ஆ! இவளுடைய அபூர்வமான சௌந்தரியத்தைக்கண்டு எந்த புருஷன்தான் மயங்கான்? ஆதலின், இவளுடன் ஒருநாளாயினுங்கூடி வாழாததேகம் எதற்கு? ஐயோ! தமயன் பெண்சாதி தாய்போலல்லவோ? சீச்சீ! என்ன எண்ணம் கொண்டோம்? நான் என்ன செய்வேன்? அவளுடைய அழகு என்னைமயக்கும்படி செய்தது! இவ்வி

ராஜ்ஜியத்தை கைப்பற்றிக் கொண்டு இவளையுமெப் படியாயினும் வசப்படுத்திக் கொள்ளவேண்டும். நமது இஷ் டத்தை பூர்த்தி செய்துக் கொள்ளுவது தவிர இந்நாட்டிற் கும் நாம அரசனாய் விடலாம். [ சிறிது நேரம் போய் ] ஆயினும் இவளுடைய மனது எப்படி இருப்பது ! எதற் கும் நம்மாலான முயற்சிகளைச் செய்து பார்ப்போம். இவ் விராஜ்ஜியங் கிடைத்தது போலவே, இவளுங்கிடைக்கட்டு மே! இவளை எப்படியாவது நம்மிடத்தில் மோஹிக்கச் செய்து மணந்துக் கொள்ளவேண்டும். இது தான் தகுந்த யோசனை. சரி ; நாம் போய் நமது காரியங்களைப் பார்க்க வேண்டும். [போகின்றான்.]

---

## ACT 1. Scene 3.

இடம்—ராஜ வீதி.

அழகானந்தன், சூரசேனன் முதலியோர் யுத்த பேரிகைகள் முழங்க, சைனியங்களுடன் வருகின்றார்கள்.

சூர. அரசே ! நாம் அரண்மனையை விட்டு புறப்படும் பொழுதே நமக்கு நற்சகுனம் வாய்த்தது.

அழ. சந்தோஷம், சூரசேனா ! இனி நாம் போர் களத்திற்குச் செல்ல வேண்டியதுதான். நாம் போகுமுன் நான் நவிலுவ தைச் சற்று செவிசாய்த்துக் கேளுங்கள்.

எல்லோரும் அப்படியே மஹாராஜா ! அப்படியே !

அழ. இந்த கருவம் கொண்ட பிரதாபசந்திர மஹாராஜாவின் மீது நாம் படையெடுத்திருக்கின்றோம் இவனுடைய செருக் கைக் கருக்க நாம் யுத்தசன்னதராய்ப் புறப்பட்டிருக்கின் றோம். அதள விதள சுதள ரசாதள தலாதள மகாதள பாதா ளமெனும் எழுலகமும் கிடுகிடுத்து நடுநடுங்கி சிலிர்சிலிர்த்து ஸ்தம்பிக்கச்செய்து, அரை க்ஷணத்தில் நிர்மூலியாக்க வல்ல வீர அதிவீர மகாவீரர்களாய் விளங்குமேன்மைபொருந்திய வான்க ளாகிய நம்மையொத்தவர்களுக்கு நான் என்ன தைரியம் சொல்ல வேண்டும். ஆனாலும் ஒரு வார்த்தை கூறுகின் றேன், அதாவது எவனுக்காவது இப்பொழுது நடக்கப் போகின்ற யுத்தத்தில் ஒருவேளை இறக்கவேண்டுமேயென்று



வருத்தமிருக்குமாயின் அவனுக்கு நான் மனப்பூர்வமாய் இச் சைனியத்தை விட்டு தன் வீட்டுக்குப் போகலாமென்று உத்தரவளிக்கின்றேன்.

சூர. ஆம் ! சைனியங்களே ! என்ன சொல்லுகின்றீர்கள் ? [ மவுனம் ] அரசே அப்படி ஒருவருமில்லை. நம்முடைய தேச த்தின் பொருட்டும், அரசின் பொருட்டும், நம்முடைய சிங் கம்போன்ற ராஜாவின்பொருட்டும், நம்முடைய தர்மகுணத் தின்பொருட்டும் யுத்தத்திற்குச் செல்லுகின்ற படியால் நம் மை கடவுள் காப்பாற்றுவாரென்பது திண்ணம்.

அழ. நண்பனே ! இன்னொரு வார்த்தை ; அதாவது உங்களுடைய உயிர்களைப்போலவே என்னுடைய உயிரையும் யுத்தத்தில் விடுவதற்குச் சித்தமாயிருக்கின்றேனென்று நம்புங்கள்.

சூர. இதற்கென்ன ; ஜெயமடைந்தால் புகழ்பெறுவோம் ! இறந் தால் சுவர்க்கம் ! கடல்சூழ்ந்த உலகெங்கும் உஜ்ஜயினி நாட்டின் புகழை விளங்கச்செய்த சுத்தவீரர்களே ! சசனரு ளால் நாம் பகைவரை ஜெயிப்போமாக [ ஜெய கோஷ்டம் செய்கிறார்கள். ]

அழ. நண்பனே ! அதோ யார் யிங்கு வருவது ?

ஓர் சேவகன் வருகின்றான்.

சூர. அப்பா நீ யார் ?

சேவ. சாமிங்களா ! பிரதாபசந்திர மஹாராஜ கிட்டயிருந்து வந் தேங்கோ.

அர. என்ன சமாச்சாரம் ?

சேவ. இந்த கடிதாசியே குடுக்கச்சொன்னாருங்கோ.

அழ. [ தனக்குள் வாசிக்கின்றான். ] நண்பனே ! இதைப் படித்துப் பார்.

சூர. நினைத்தேன் ! நினைத்தேன் !! எல்லாம் அவனுடைய சூது தான் இது. [ பக்கமாய். ]

அழ. என்ன சூரசேனா ! மறைவாய் உனக்குள் ஏதோ சொல்லிக் கொள்கின்றனை ? யான் கேட்கத்தகாத ரஹஸ்யமோ?

சூர. இல்லை ; திடீரென்று இப்படிப்பட்ட கடிதம் எழுதுவானேனென்றுதான் யோசிக்கின்றேன். இது உன் சிறிய தந்தையார் வசந்த மஹாராஜா அவர்களது சூதாயிருக்க வேண்டும்.

அழ. [கோபத்துடன்] என்ன சூரசேனா ! பெரியோர்களைப்பழிக்கின்றனை.

சூர. பழித்தால், உங்களைப் பழிக்க வேண்டும் ! யான் ஒரு போதும்பெரியோரைப்பழியேன் ! அதிருக்கட்டும் இதற்கென்ன யோசனை ?

அழ. ஆம் ! எப்பொழுது அவன் சமாதானகடிதம் எழுதினனோ நாம் சமாதானமாய்தான் போகவேண்டும்.

சூர. அப்படியே ! சரி ; உங்களுடைய இஷ்டம். பட்டாலல்லவோ தெரியும்.

அழ. என்ன படுவது ! அவர் என்னை நண்பனைப் போல் பாவித்து இவ்வளவு கேட்கும்பொழுது நான் தடுப்பது முறைமையன்று ; என்ன சொல்லுகின்றாய் ? நம்மைத் தஞ்சமென்று வந்தடைந்தவர்களை மன்னிக்கவேண்டியது நம்முடைய கடமையன்றோ ?

சூர. ஆம் ! ஆம் !! வாஸ்தவம்தான். அப்படியே செய்வோம். அதெற்கென்ன ; அதோ அவர்கள் எல்லோரும்கூட வருகின்றார்கள்.

பிரதாபசந்திரன் புடைசூழ வருகின்றான்.

பிர. அழகாநந்தரே ! என்னை மன்னிக்கவேண்டும். தங்களுடைய பராக்கிரமத்தை கவனியாது தங்களுக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தேன். ஆகலால் தாங்கள் தயவுசெய்து சில தினங்கள் எங்கள் ஊருக்கு வந்திருந்து செல்லவேண்டும் ; என்வார்த்தையைத் தட்டாதீர்.

அழ. மஹாராஜா ! என்னை மன்னிக்கவேண்டும் நான் ஒரு முக்கியமான விஷயமாய் இன்றையதினமே ஊருக்குப் போகவேண்டும்.

பிர. என்ன முக்கியமான விஷயமாயிருந்தாலும் நான் விடைதரமாட்டேன். நீர் எனக்கு செய்த பேருதவிக்குத்தக்க கைம்மாறு செய்யாமல் அனுப்பிவிடுவது நியாயமன்று.



அழ. என்ன ! நான் அப்படிப்பட்ட உதவி என்ன செய்தேன்.

பிர. தங்களுடைய கோபத்தை அடக்கி என்னை மன்னித்தீரே !

அழ. தஞ்சமென்று வந்தடைந்தவர்களை மன்னிப்பது அரசர்களுடைய கடமையன்றோ ?

பிர. இருந்தாலும் தாங்கள் எப்படியும் வந்தேதான் போகவேண்டும்.

அழ. இல்லை—நான் போகவேண்டும்.

பிர. என்ன அவ்வளவு முக்கியமான விஷயம் ?

[சூரசேனன் இரகசியமாய் அழகாநந்தன் செவியில் என்னமோ சொல்லுகின்றான்]

அழ. [பக்கமாய்] இப்பொழுது நாம் சீக்கிரம் போகவேண்டிய அவசியம் ஒன்றும் இல்லையே ?

சூர. [வேண்டாமென்று சைகை செய்கின்றான்.]

அழ. இவர்கள் இவ்வளவு மன்றாடிக் கேட்கும்பொழுது நாம் போவாதது சரியன்று. [வெளியாய்] ஆம் ! தந்தை என்ன சொல்லுவாரோ ?

பிர. அவருக்கு நான் அப்பொழுதே கடிதம் எழுதி அனுப்பிவிட்டேன் அதற்காக தாங்கள் பயப்படவேண்டியதில்லை.

அழ. என்ன சொல்லுகின்றாய் சூரசேனா !

சூர. நான் என்ன சொல்லுவது—தங்களுடைய இஷ்டம்.

அழ. நண்பனே ! என்ன அப்படி கூறி விட்டனை.

சூர. உங்களுக்கு இஷ்டமானால் பிறகு நான் என்னசொல்லுவது? சேனைக—

அழ. சூரசேனா ! சேனைகள் எதற்காக ? சேனைகளையும், படைகளையும் அழைத்துக்கொண்டு நீ விரைவில் உஜ்ஜயினியைப் போயடைவாய், என்னுடைய க்ஷேமத்தைப்பற்றி என் தாயாருக்குச் சொல். நீதான் தாயாரை பத்திரமாய் பார்த்துக் கொள்ளவேண்டும். நான் இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாக திரும்பி வருவேன்.

சூர. அப்படியே நான் விடைபெற்றுக்கொள்ளுகின்றேன்.

அழ. சரி, நீ போய்வா.

பிர. நாம் போவோம் வாருங்கள்.

அழ. அப்படியே செய்வோம்.

---

## ACT 1, Scene 4.

இடம்—பிரதாபசந்திரன் அரண்மனைக்கடுத்த தோட்டம். அழகாநந்தன் தூங்கிய வண்ணமாயிருக்கின்றான். தாரணி வருகின்றாள்.

தார. என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! அயர்ந்து நித்திரை செய்கின்றார்! இவரைப்பற்றி நான் முன்பே கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆயினும் நேரிற் காணும்படி நேரிட்டது என்னுடைய அதிர்ஷ்டமே! ஆ! நான் உலகில் கிடைக்காதெனக் கருதிய பொருளைக் கிடைக்கப் பெற்றேன்! இப்பொழுது தான் மலர்ந்து வருகிற செந்தாமரை யிதழ்போல் அகன்று நீண்டு கடைப்புறம் சிவந்து கருவிழி பொருந்திய உமது திருக்கண்களினழகையும், ஆண் சிங்கம் போல் நடக்கிற உமது கம்பீரமான நடையினழகையும் சந்திரிகை போற் குளிர்ந்ததும் அமிருதம்போல் மதுரமானதுமான உமது பிரிய வசனங்களின் ஆநந்தத்தையும், அநங்கனை வென்ற அழகும், விஜயனை வென்ற வீரமும், சேடனை வென்ற சிறந்த புத்தியும், இவ்வாறு மற்றெந்த ஆடவனிடம் ஒருங்கு கூடியிருக்கப்போகின்றது! எப்படியாவது இவருடைய காதலையாவது பெறுவேன், அல்லது எனதுயிரையாவது துறப்பேன்; நான் இப்படிப்பட்ட புருஷன் வாய்த்தாலொழிய விவாகம் புரிவதில்லையென்றிருந்ததற்கு நான் எண்ணியதினும் பதின் மடங்கதிகமாக கிடைத்தது என் பூர்வ புண்ணிய வசமன்றோ? சீ! இவரையே நான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்! என்ன! எனது இடது தோள் படபடவென்று அடிக்கின்றது? எனக்கிப்பொழுது எப்படியாவது பெரும் நன்மை நேரிடும்போல் தோன்றுகின்றது! என்ன இன்னும் எழுந்திருக்கவில்லையே! நான் என்ன செய்வது? ஒரு பாட்டாவது பாடுவோம்! [பாடுகின்றாள்.]



தார. ஆ ஹா! விழித்துக் கொண்டார் [அழகாநந்தனைப் பார்த்து தலைவணங்கி நின்று கடைக்கண்ணால்நோக்கி நிற்கின்றாள்.]

அழ. ஆ ஆ! இதென்ன் காநம் என் காதலியின் இனியகுரல்போல் என் மனதைப் பரவசப்படுத்துகின்றதே! இங்கே ஒருவரையும் காணேமே! ஆ கண்ணே! அதோ நிற்கின்றாள்! ஆ! இப்பெண்மணியின் அழகானது என் மனதைப் பலாத்காரமாய்க்கட்டி இம்மாதரசியினிடமிழுத்துச் செல்கின்றனவே! இவளது முகத்தினழகை என்னென்று சொல்வேன்! செந்தாமரை மலரும், பிரம்மதேவன் உற்பத்தியான வெண்டாமரை மலரும், இவளது அழகுக்குமுன் எங்கே? ஆ ஆ! மின்னற் கொடிபோன்ற அப்பெண்மணியை யான் கண்டது முதல் என் மனது அவள் பின்னே ஓடி, மறைந்து விட்டதே! உன் அந்தரமான பார்வை யின்னுமென் புத்தியினின்றும் நீக்கவில்லையே! அடி என் கண்மணி! உன் நடையைக்கண்டு அன்னப் பக்ஷியும், மயிலும் அயர்ச்சி கொள்ளுமே! [அவளருகிற் சென்று] மாதரசே! யான் இங்கு தனியாய்ப் பரிதாபப்படுவதை நீ யறியாயோ? மரண பாதையினும் மதன பாதை மிகக் கொடியது. எவ்விதத்தில் என் காதல்நிறைவேறப் போகின்றது! ஹா! கண்ணே! கண்ணே!! நான் உன்னை உன் தந்தையின் அரண்மனையில் கண்டதுமுதல் மதனபாதை உன்னிடத்தில் நீங்காவண்ணம் பரவசப்படும்படி செய்து விட்டனவே.

தார. [பக்கமாய்] நான் இவர் மீது காதல் கொண்டிருப்பது போலவே, இவரும் என்மீது காதல் கொண்டிருக்கின்றனர்! இனி என் காரியம் ஜெயம்தான்.

அழ. தாரணி! தாரணி!!

தார. ஐயோ! என் காதலுக்கு எவ்வளவு கஷ்டத்தை யுண்டுபண்ணுகின்றேன் [பக்கமாய்.]

அழ. [அவள் கையை பிடித்துக்கொண்டு] என் கண்மணி! கண்ணே, உன்மீது நான் காதல் கொண்டுவிட்டேன். இனி என் உயிர் உடல்விட்டு நீங்கும் பொழுதன்றோ, இக்காதல் என் மனதை விட்டகலப் போகின்றது! கண்ணே!—

தார. பிராண — அரசே ! தாங்கள்—

அழ. கண்மணி ! நான் என்ன கொடுமை செய்தேன் உன் வாயால் என்னைப் பிராணநாதா வென்றழைக்கலாகாதோ ? கூற வந்தவள் திடீரென்று நிறுத்தி விட்டனையே ! எனதாருயிரே, என்ன சொல்லுகின்றனை ?

தார. பிராணநாதா, நீர் நித்திரை புரியும்போது நான் நினைந்து வருந்தியதுபோல் நீர் வருந்தியிருக்கமாட்டீர் நீர் நிற்பதைப்பார்க்க என் மனம் தாளவில்லை ; உட்காருங்கள்,

அழ கண்ணே, அப்படியே உட்காருகின்றேன், கண்மணி ! உன்னுடைய பிரிய வசனமானது எனக்கு இப்பொழுது பெருமகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. இது உன்னலன்றி வேறொரு ஸ்திரீயால் எனக்குப் பெருமகிழ்ச்சி உண்டாக்க முடியுமென்று கனவிலும் நினைக்கவேண்டாம்.

தார. பிராணநாதா ! ஆம் ; நீர் என்மீது எப்பொழுதும் காதல் கொண்டிருப்பீரென்கிற நிச்சயமென்ன ?

அழ. கண்ணே ! எனக்கு உன்மீதிருக்கின்ற காதல் இந்தஜன்மத்திலாவது வேறு ஜன்மத்திலாவது குறைந்தபோதிலும் அல்லது வேறு எந்த ஸ்திரீயையாவது நான் காதல் கொண்டாலாவது, எனது தாயாருக்கு நான் துரோகம் நினைத்தவனாவேன்.

தார. பிராணநாதா ! என்னை மன்னிக்கவும். என்னையே நீர் மணம் செய்துகொள்ளுவதாகக் கூறினீரே, அது முடியுமான காரியமோ !

அழ. கண்ணே ! என்ன காதலின் பெருமையை நீ யறியாய்போலும் ; உன்னையே மணந்துகொள்வேன். இது சத்தியம்.

தார. உமது மனதைப் பரிசோதித்ததற்காக என்னை மன்னிக்க வேண்டியது.

அழ. சந்தோஷம் ; கண்ணே ! [கணையாழியை அவள் கையில் போட்டு] உனது விரலைவிட்டு இதை எப்பொழுதும் கழற்றலாகாது.



தார. பிராணநாதா ! நீரும் இம்மோதிரத்தை யணிந்து கொண்டிரும் [விரலில் போடுகின்றாள்.]

அழ. கண்மணி ! வேறு விஷயம் பேச ஒன்று மில்லையா ?

தார. வாரும். ஏதாவது விநோதகமாகக் காலம் கழிப்போம். இந்நந்தவனத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம்.

அழ. அப்புறம்போகலாம் ; இப்பொழுது கொஞ்சம் பாடுவாய் கேட்கின்றேன்.

தார. ஆம், என் அவலட்சணமான குரலைக் கேட்பதற்கு தங்களுக்கு விருப்ப மிருக்குமோ என்னமோ ?

அழ. கண்மணி ! அப்படி யொன்றுமில்லை ; பாடு.

தார. [பாடுகின்றாள்.]

அழ. கண்ணே ! இன்னும் எனது செவி குளிரப் பாட்டைப் பாடுவாய்.

தார. [பாடுகின்றாள்.]

அழ. தாரணி ! மிகவும் நன்றாயிருக்கின்றது.

தார. ஆனால் எனக்கென்ன பரிசு கொடுக்கப் போகின்றீர்.

அழ. கண்மணி ! என்ன வேண்டும் ?

தார. பிராணநாதா ! இவ்வுலகில் எல்லாவற்றைப் பார்க்கிலும் எனக்கு மிகுந்த இன்பத்தைத் தரும்படியானதை நீர் யெனக்குக் கொடுக்கவேண்டும்.

அழ. கண்ணே ! உன் புத்திக்கு மெச்சினேன் இதோ [முத்தம் கொடுக்கின்றான்] இப்பொழுது சரிதானா ?

தார. பிராணநாதா ! உம்—

பிரதாபசந்திரன் வருகின்றான்.

பிர. தாரணி ! என்ன செய்கின்றனை இங்கு ?

தார. ஒன்றுமில்லை.

பிர. நினைத்தேன் ! நினைத்தேன் !!

[ அழகாநந்தன் ஒரு பக்கமாய் போய் விடுகின்றான். ]

எங்கே ராஜகுமாரன் ? அப்பா ! போஜனம் சித்தமாயிருக்கின்றது ! போகலாம்வா. தாரணி ! அவரையுங்கூட அழைத்துக்கொண்டுபோ ! இதோ நான் வந்துவிட்டேன்.

[ இருவரும் போகிறார்கள். ]

ஆ ஹா ! நம்முடைய குழந்தை அப்பகா வீரன்மேல் காதல் கொண்டிருக்கின்றாள். அவனே அவளுக்கு தக்கக் கணவன்: அவனது தைரியத்தையும் தேககாந்தியையும் கண்டால் யார்தான் அவன்மீது காதல் கொள்ள மாட்டார்கள். அவனை பார்க்கப் பார்க்க ஆணாகிய எனக்கே அதிகமான விருப்பமுண்டாகின்றதே பெண்பாலாகிய அவளுக்கு அச்சுந்தர புருஷனைக் கண்டு காதல் கொள்ளாதிருக்க முடியுமா ? [யோசித்து] ஐ ஐயோ ! என் செய்வேன் ! என் செய்வேன் !! ஐயோ ! அழகாநந்தனை கொல்லும்படி கட்டளை யிட்டானே ! இன்றுதானே கடிதம் வந்தது அந்த மஹா பாதகனிடத்திலிருந்து ! ஐயோ என் செய்வேன் ! நான் எவ்வளவு சொல்லியும் அச்சண்டாளன் கேட்கவில்லையே. கொலைசெய்யவேண்டுமென்று எழுதியிருக்கின்றானே. இவன் இப்பொழுது சக்கரவர்த்தியாய்விட்டான். அவனுக்கு கீழ்படிந்த நான் அவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் நடக்க அசக்தனாயிருக்கின்றேனே ! என் செய்வேன் ! அழகாநந்தனை எப்படி கொல்லுவேன்.

ஓர் சேவகன்வருகின்றான்.

சேவ. மகாராஜா ! வசந்த மகாராஜா வந்து உங்களை கூப்புடுறாங்க.

பிர. ஐயோ ! அவனே வந்து விட்டான் ! ராஜகுமாரன் பக்கத்தில் கடவுள் தான் கிருபை செய்யவேண்டும். எப்படியாவது, நமது குமாரத்தியைக்கொண்டே அவனை இந்த அரண்மனையைவிட்டு செல்லும்படி சூழ்ச்சி செய்யவேண்டும். இதுதான் தகுந்த யோசனை [ போகின்றான். ]

---



## ACT 1. Scene 5.

இடம் — பூந்தோட்டம்.

அழகாநந்தன் வருகின்றான்.

அழ. என் கண்மணி ஏன் இன்னும் வரவில்லை ? நெடுநேரமாய் விட்டதே ; நான் இவ்விடம் ஆசையுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேனென்பதை அறியாள் போலும். தெரிந்திருப்பாளாயின் இப்பொழுது வந்திருப்பாளே. அதோ வருகின்றாள் போலிருக்கின்றது !

தாரணி வருகிறாள்.

கண்ணே ! தாரணி ! என்ன இந்நேரம்.

தார. ஆ ! பிராணநாதா ! இன்னும் பிழைத்திருக்கின்றீரே !

அழ. என் கண்மணி ! என்ன ?

தார. பிராணநாதா ! தாங்கள் இவ்விடத்தில் இன்னும் சற்றுநேரமிருப்பின் பிராணனுக்கே அபாயம் நேரிடும். ஆகையால் சீக்கிரம் எழுந்து எங்கேயாயினுஞ் சென்று உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்.

அழ. கண்ணே ! இதற்கு தானோ என்னை நேசித்தனை ?

தார. பிராணநாதா ! தங்களுடைய சிற்றப்பன் இப்பொழுது கொல்லத்தேடிவருகின்றனர் ! சீக்கிரம் தப்பித்துக்கொண்டு செல்லும் !.

அழ. என் மனதைச் சோதிக்கின்றனையோ ? அப்படியிருந்தபோதிலும் உன் தகப்பனார் சம்மதிப்பாரோ ! என் சிற்றப்பன்தான் அப்படி செய்வானோ ? யானிதை ஒரு போதும் நம்பேன்.

தார. யான் உமது நன்மையை நாடி எப்படியாயினு மும்மை இப்பாவிகள் கையினின்றும் காப்பாற்றவேண்டுமென்று ஓடிவந்தேன். என் தந்தையார் மிகவும் நல்லவரே ! ஆயினும் கொடியவனை தங்களுடைய சிற்றப்பன் சொல் கேட்டு உம்மைக் கொல்லுவதாக ஒத்துக் கொண்டார். அதை யறிந்து யானிங்கு ஓடிவந்தேன். இதை விட்டு சீக்கிரம் சென்றால்தான் உயிர் தறிக்கும்.

அழ. ஆ! கண்ணே உன்னைவிட்டு யான் எப்படிப் பிரிவேன்? என் உயிர் போவதற்குமுன் யானுன்னைப்பிரிய வல்லனோ?

தார. ஆ! பிராணநாதா! நீர் இப்படித் தாமதஞ் செய்வது அழகோ?

அழ. பிரியே! இதற்கு வேறு பரிகாரமில்லையோ?

தார. பிராணநாதா! உமது பிதாயான் கொலைக்கஞ்சாப் பாதகன். தாமதஞ் செய்யவேண்டாம்! சீக்கிரம் இவ்விடத்தைவிட்டுச் செல்வீர்.

அழ. ஆ! சூரசேனா! நீ சொன்னது சரியாய் விட்டது. என் கண்ணே! உன்னைக் காணாத என் கண்கள், மழை காணாப் பயிர் போல், ஒவ்வொரு நிமிஷமும் தேடுமே! இவ்விடத்தினின்றுஞ் சென்று எப்படி யான் உன் அழகான வதனத்தைப் பாராமல் இருப்பேன்.

தார. இப்பொழுது தாமதஞ் செய்துகொண்டிருந்தால், நம்முடைய உயிருக்கு நாசம் வருமே! இப்பொழுது தப்பிப் பிழைத்தால் ஒரு வேளை எப்பொழுதாவது ஒருவரையொருவர் காணுவோம். இனிப்பெண்ணாகிய யான் என்ன சொல்லப்போகின்றேன்?

அழ. நீ செய்யும் இப்பேருதவிக்கு யானென்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்?

தார. [கண்ணீர் சொரிய] பிராணநாதா! எப்பொழுதும் என்னை மறவாதிருப்பீராயின், அதைக்காட்டிலும் சிறந்த உபகாரம் வேறொன்றுமில்லை.

அழ. என் கண்ணே! உன்னையும் மறப்பேனோ? வெகு சீக்கிரத்திலேயே கருணாநிதியான கடவுள் நம்மைச் சேர்த்துவைப்பார் [ஒரு முத்தம் கொடுத்து] என் கண்மணி இந்தஜென்மத்திலாவது அல்லது வேறு ஜென்மத்திலாவது எனக்குன்மீதிருக்கின்ற காதல் அணுவளவேனும் குறையாது.

தார. எப்பிறப்பிலும் என்னையே நீர் மணஞ்செய்துகொள்ளுவீரா?

அழ. அப்படியே செய்துகொள்ளுகின்றேன்.

தார. அது சாத்தியமான காரியமோ.



20 JU. 1911

அழ. கண்மணி! உனக்குத் தெரியாது. நம்முடைய தேகம் இரண்டாயிருந்தபோதிலும் ஆவியொன்றே. ஆதலால் நாம் இனி எப்பிறப்பிலும் பிரியோம். கண்ணே! யான் போய்வருகின்றேன்.

தார. ஐயோ! உம்மைவிட்டு யான் எப்படிப் பிரிந்திருப்பேன்? நாதா! இவ்வேழையைத் தாம் கைவிடலாகாது.

அழ. கண்ணே! உன்னை மறந்துவிட்டு யான் பிழைத்திருப்பேனோ? நீ வருந்தப்படாதே! யான் போய்வர விடையளிப்பாய்!

தார. ஐயோ! இனி எப்பொழுது தங்களை காண்பேன்! இப்படி என்னைப்போல் இரக்கமில்லாதவள் இவ்வுலகில் வேறொருத்தியிருப்பாளென்று யான் நினைக்கிலேன். என்னைப்போன்ற பேதையரும் இவ்வுலகிலிருப்பாரோ? நாதா! போய்வருகின்றீரா?

அழ. ஆ! கண்ணே! யான் என்ன செய்வேன். ஐயோ! எப்படி உன்னை பிரிந்து செல்லுவேன்?

தார. நாதா! ஏன் துக்கப்படவேண்டும். நாம் ஒருவரையொருவர் சீக்கிரம் சேருவோம்.

அழ. நமது சிநேகத்தின் முடிவு இதுதானோ?

தார. அன்று! அன்று!!

அழ. கண்ணே! ஒரு முத்தம் [முத்தம் கொடுக்கின்றான்] உன்னை நான் மறுபடியும் காண்பேனோ?

தார. நாதா காண்பீர் சந்தேகமில்லை!

அழ. உன்னை காண்பேன் என்பதில் சந்தேகமில்லையே?

தார. இல்லை, அணுவளவும் இல்லை!

அழ. சரி; நான்போய் வருகின்றேன் [போகிறான்.]

தார. [அழகாநந்தன் கண்ணுக்குத் தெரிந்த மட்டும் போவதைப்பார்த்துக் கொண்டிருந்து] ஐயோ! இனி எப்பொழுதென்னன்பனைக் காண்பேன்? ஐயோ! அவருடன் கூடவே செல்லாமலிருந்த என் புத்திஹீனத்தை யானென்னவென்று சொல்லுவேன். பெண்புத்தி பின்புத்தி என்பது உண்மையே! ஐயோ

என்னுயிர் அவரிடத்தே சென்றுவிட்டதே! இன்றுமிக்கட்டுடன் என் உயிருடனிருக்கின்றது? நான் என் செய்வேன். என் கோரிக்கை யெப்படி நிறைவேறப்போகின்றது! இனிமேல் நான் எப்படி அவரை அடைவது? அவர் திரும்புவரோ? ஐயோ! பிராணநாதா! [ மூர்ச்சித்து சாய்ந்து விடுகின்றாள். ]

பிரதாபசந்திரன் வருகின்றான்.

பிர. இவ்விடத்தில் இவ்வேளையில் தனியாய் என்ன செய்துக்கொண்டிருக்கிறாய்?

தார. [சிரித்துக்கொண்டே.] ஒன்றுமில்லை! உங்களுக்கு உதவியாக வந்து நீர் தேடிவந்த ராஜகுமாரனைக் கொல்லலாமென்று வந்தேன்!

பிர. என்ன! அழகாநந்தனையா?

தார. ஆம்! ஆம்!!

பிர. எங்கே அவன்? [ கையைத் தட்டுகின்றான் ] [ இரண்டு கொலையாட்கள் வருகின்றார்கள் ]

தார. அவர் எங்கே சென்றாரோ! எனக்கென்ன தெரியும்.

பிர. சரி; நீ இங்கிராதே போய்விடு.

வசந்தன் ஓடி வருகின்றான்.

வச. பிரதாபசந்திர ராஜனே! முடிந்து விட்டதோ?

பிர. அவர் நமது தன்மனையை விட்டு ஓடிவிட்டார். எங்கு தேடினும் அகப்படவில்லை.

வச. அப்படியா! அடே! கொலையாட்களே! நீங்கள் போங்கள். [ போகிறார்கள் ]

வச. பிரதாபசந்திர ராஜனே, நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். அவன் இங்கு வருவானேயானால் எனக்கு உடனே தெரிவிக்க வேண்டியது [ போகின்றான். ]

பிர. அப்படியே.

[பிரதாபசந்திரன் பின்தொடர்ந்து கொஞ்சதூரம் விட்டு விட்டு வந்துவிடுகிறான்.]



தார. [வெளியில்வந்து] ஐயோ! என்ன கொடுமை! என்ன கொடுமை!! இப்பொழுதே நமது தந்தைக்கு தெரிவித்து, இக்கொடுந்தொழிலை விட்டுவிடக் கேட்போம்.

பிரதாபசந்திரன் வருகின்றான்.

தந்தையே! அவ்வீரனைக் கொல்வது நியாயமோ? அவர் நமக்கென்ன அபராதஞ் செய்தனர்.

பிர. குழந்தாய்! நான் என்ன செய்வேன். அப்பாபி வசந்தராஜன் இவரைக்கொன்று ராஜ்ஜியத்தை அபகரிக்கச்செய்த சூழ்ச்சியே இது.

தார. என் தந்தையே! என்னை மன்னிக்கவேண்டும். யான் அவரை பார்த்ததுமுதல் அவரிடத்திலேயே என் மனம் சென்றுவிட்டது. நீங்கள் கூறிவந்த கோரமான சப்தத்தைக்கேட்டு, நான் இங்கேவந்து, அவரை ஓடிப்போகும்படியாய் செய்தேன்.

பிர. குழந்தாய்! இதை நான் முன்னமே அறிவேன். ஆயினும் எனது தௌர்பாக்கியம் அவரை நீ அடையாத வண்ணம் தடுத்தது. அவரெங்கே போயினர்? தெரியுமா உனக்கு?

தார. அவர் போன விடம் எனக்குத்தெரியாது.

பிர. கண்மணி! நீ வருத்தப்படவேண்டாம்! நான் உன்னை அவருக்கே மணம் புரிவிக்கின்றேன். எப்படியாவது அவரையும் உஜ்ஜியினி ராஜ்ஜியத்திற்கு மீட்டுகின்றேன்.

தார. ஒருவேளை நான் கூறிய கொடிய வார்த்தைகளைக் கேட்டுத் தற்கொலை புரிந்துகொண்டனரோ?

பிர. அவருக்கொரு கெடுதியும் நேரிடாது. நான் எப்படியாவது தேடி கண்டுபிடித்துக்கொண்டு வருகின்றேன்.

தார. தந்தையே! நானும் வருகின்றேன்.

பிர. வேண்டாம்; நான் எப்படியாவது அழைத்து வருகின்றேன் பார்! நீ உள்ளே போ!

தார. சந்தோஷம். [ போகிறார்கள். ]

---

## ACT 1, Scene 6.

இடம்.— ஓர் வீதியைச் சார்ந்த கொடிவழி.

இரண்டு கோலையாட்கள் வருகிறார்கள்.

வீரன். அடே! அண்ணே! இங்கே எங்கேயும் நம்ப ராஜாமகனை காணன்டா — இப்பொ இன்னமொ ஓசை கேட்டுச்சே யிங்கேதானே?

சூரன். அது போனுபோகுது எண்டா இந்த வசந்தராஜன் நம்ப ராஜா மகனை கொல்லச் சொன்னுனே?

வீரன். அந்த சங்கதி யெல்லாம் நமக்கு யின்னாத்துக்கு? நாட்டு வருதோ இல்லையோ? அதான் முக்கியம்! அது போவுட்டும். இப்போ மணிசத்தம் கேட்டுச்சே யிங்கே!

சூரன். அண்ணே! அதோ அந்த பிடாரி கோயிலுக்குள்ளே பூசை செஞ்சாங்கபோலிருக்குது!

வீரன். ஆ! அந்த மணியை எங்கே கட்டுவாங்க? கெங்கையம்மா கயுத்திலே கட்டுவாங்களோ?

சூரன். ஜாதிக்கிதகுந்த பேச்சி பேசுரியே அதானே இடையன்! மடையன்! சரியாபோச்சு.

வீரன். அதாண்டா நான் இடையன். நீ மடையன். சரியாபோச்சா! அது போவுட்டும் பின்னே எங்கே கட்டுவாங்கோ?

சூரன். மணியை கையிலே எடுத்துகிட்டு கிணு கிணு கிணு கிணு இன்னு அடிப்பாங்கோ!

வீரன். அந்த அம்மா அத்தே அடிச்சா முழிச்சிக்குவாங்களா?

சூரன். ஆமா! ஆமா!!

வீரன். ஆடு! மாடு! எல்லாம் பலிபோடுவாங்களே! அது எப்போடா?

சூரன். ஆடிமாசம் போடுவாங்கடா! இப்பொல்லாம் போடமாட்டாங்கோ.

வீரன். பாப்பார சாமிக்கு மாத்திரம் என்டா தட்டுலே எடுத்துகினு போய் காண்பிக்கிறுங்கோ?



சூரன். போடா தடியா! அது யில்லாட்டா, அவங்க கொயக்கட்டே, வடை, சுண்டல், பாவசம், பபம், இதெல்லாம் நேவுத்தியம் பண்ணுவாங்கோ.

வீரன். அடெடே! இப்பொதான் ஒரு சேதி மண்டையிலே வருது தம்பீ! நம்ப காலன் இருக்கிறானே ஒரு நல்ல கொயக்கட்டை கொடுத்தான். ஐயோ! என்னமாயிருந்திச்சுன்றே! பிளியாம்பயம் கெட்டுபோயிடுச்சுப்போ! அவ்வளவு ருசியாய் யிருந்தது.

சூரன். அதுக்குள்ளே நூல் வெச்சிருந்ததா?

வீரன். ஆமா! ஆமா!! இசுக்க இசுக்க நூலு நீள சும்மா வந்துச்சின்றேன்!

சூரன். பூசக் கொயக்கட்டை! குப்பையிலே யிருந்து எடுத்து குடுத்தானு! அதான! நல்லாயிருந்தாகூட கொடுப்பானு?

வீரன். இல்லெ! இல்லெ!! நல்லா யிருந்துச்சு!

சூரன். அது எப்படியானு போயிட்டுப்போவுது! இன்னுடா இந்த ராஜகுமாரனே காணுமே?

வீரன். வா! அண்ணே! அப்படி போயி தேடிப்பார்க்கலாம்.

சூரன். இருடா! காலு நோவுது இப்படிதான் உட்காரு. [உட்காருகிறார்கள்.]

வீரன். இந்த ஊருலே எத்தனே தெய்வம் இருக்குது அண்ணே?

சூரன். எத்தனையோ தெய்வம்! பினைக்கா வயக்கா! நம்ப ஒருதரம் கங்கைமா கொடைம் வெச்சாமே! அப்போ அந்தப் பாட்டெல்லாம் நல்லா கத்துக்கினேன்.

வீரன். என்ன பாட்டண்ணே அது? சொல்லு கேப்போம்.

சூரன். ஓ ஓ! சும்மா பாடுவேனு? கொடம் வாண்டாமா? ஆமா ஒருவேளை நீ கத்துக்கினையானு?

வீரன். நான் கத்துக்கிலே! பாடு அண்ணே! இது மட்டுக்கும் உன் னைப் பாடையிலே பார்க்கலே!

சூரன். ஆனு கொடங்கொண்டு வந்தையானு பார்ரேன்.

வீரன். இந்த கத்திதானென்று எண்ணிக்கோயேன். ஆனா, நானுந் தான் பாடினேன்னு எண்ணிக்கோயேன்.

வீரன். அண்ணே! அதோ யாரோ வராங்கோ! நம்ப இங்கே ஒளிச்சிக்குனு யாருனு பார்க்கலாம் வாவா!

சூரசேனன் வருகின்றான்.

வீர. ஆ! ஆ! இன்று காலையில் நமது நண்பனை கொல்லுவதற்காக இச்சண்டாளன், பிரதாபசந்திரன் அரண்மனைக்கு சென்றிருந்தனன்! அப்பாதகன் வசந்தன் என்ன பெருமோசஞ்செய்ய எண்ணினான்! அவனது புத்தியின் வல்லமையே வல்லமை! அவரின்று உயிர் பிழைப்பது இப்புவனேசுவரியின் கிருபையன்றி வேறென்ன? எல்லாம் நின் கருணாகடாக்ஷமே! இன்னும் எனது நண்பனை பட்டத்துக்குக் கொண்டுவருவது நின்பாரம்! ஆ ஆ! இதென்ன? ஏதோ ஓர் அவச்சொல் கேட்கின்றதே! பிரதாபசந்திரன் அரண்மனைக்குச் சென்ற எனது நண்பன் என்ன வாயினனோ? ஒருவேளை யப்பாபி வசந்தன் அங்கும் நம்மிளவரசருக்கு ஏதாயினுங் கேடுவிளைக்கக் கூடும்! இப்பொழுது நாமெப்படி இராஜகுமாரனைக் காண்பது! நாழிகையாய் விட்டது. இனி யானெங்கே போவது? வீட்டிற்குத்தான் செல்லவேண்டும்.

அழகாநந்தன் வருகின்றான்.

அழ. ஆஹா! கடவுளே!

வீர. ஆ ஆ! நம் அழகாநந்தனுடைய குரலைப்போலவே யிருக்கின்றதே! [பார்த்து] ஆம் என் நண்பர்தான் வருகின்றார்! ஆ! நம் நண்பன் இவ்வளவு வருத்தத்தை யடைவதற்குக் காரணமென்ன. என்ன! அரசே! இந்தராத்திரியில் எங்கு செல்லுகின்றீர்? என்ன ஒன்றும் பேசாமலிருக்கின்றீரே? இதென்ன? முத்துகள் அறுந்து சொரிவதுபோல் உமது கண்களினின்று தாரைதாரையாய்ச் சொரிகின்றதே! என்ன சமாசாரம்?

அழ. சூரசேனா! ஒன்றுமில்லை! உன்வேலையைப்பார்.

சூர. என்ன! என்னிடத்திலும் மறைக்கின்றீரே! இன்று காலையில் பிரதாபசந்திரன் அரண்மனையில் நடந்த விஷயத்தைக் குறித்து வருத்தப்படுகின்றீரோ?



அழ. ஒன்றுமில்லை! ஆ! தெய்வமே!

சூர. அரசே! இப்பொழுது தெய்வத்தை நோவதற்குக் காரணமென்ன? என்ன துன்பம் நேர்ந்தது?

அழ. சூரசேனா! நான் ஏன் இன்னும் உயிருடனிருக்கின்றேன்?

சூர. அரசே! என்ன அபாயம் நேர்ந்தது?

அழ. அதை ஏன் கேட்கின்றாய்? ஆ! தாரணி!

சூர. அரசே! ஏன் இப்படி வருந்தப்படுகின்றீர்! கண்விழித்துப்பாருங்கள்! நான் உயிரோடிருக்குமளவும், நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை! இப்பொழுது தாரணியைப்பற்றி என்ன? நீர் அவளது அரண்மனைக்குச் சென்றீரே அங்கு என்ன நேர்ந்தது?

அழ. நண்பனே! இப்பாவி வசந்தன் என்னை அங்கு வந்து கொல்லத்துணிந்தானே.

சூர. அது தெரிந்த விஷயம் பிறகு;

அழ. என் கண்மணியாகிய தாரணியல்லவோ என்னை காப்பாற்றினாள்.

சூர. அப்படியா!

அழ. நண்பனே! அவளை காண்பேனா மறுபடியும்?

சூர. அதற்கென்ன, எப்படியும் காண்பீர்.

அழ. நான் தனியாய் அகப்பட்டுக்கொண்டதினாலல்லவோ கஷ்டமாய் முடிந்தது. அதிருக்கட்டும், நீ இதை யெல்லாம் யெப்படி யறிந்தாய்?

சூர. கைப்புண்ணுக்குக் கண்ணாடியும் வேண்டுமோ?-இதென்ன! எவரோ இருவர் கையும் கத்தியுமாய் இவ்வழியே விரைந்து வருகின்றனர்!

அழ. அவர்கள் யாவரா யிருக்கக்கூடும்? இக்கொடிவழியில், இவ்வர்த்தராத்திரியில், இப்பயங்கரமான விடத்திற்கு இவர்கள் வருவதற்குக் காரணமென்ன?

சூர. ஒருவேளை அந்தவேடன் அனுப்பிய கிங்கரர்களாயிருக்கக் கூடும்; எதற்கும் நாமிங்கே யிருப்பது தகுதியன்று. எங்கே யாகிலும் செல்வோம் வா. [கொஞ்சதூரம் போகிறார்கள்.]

சூரனும் வீரனும் வருகிறார்கள்.

சூரன். ஆராமிவஙோ நம்பளை பார்த்திட்டு அப்படி ஈஈஈ நழுவ ராய்ட்டா !

வீரன். நான் ஓடிப்போயி புடிச்சிக்கிறேன்.

சூரன். ஓடிபோ ! ஓடிபோ !!

வீரன். [கொஞ்சதூரம் ஓடி] ஓடியா ! ஓடியா !! நம்ப ராசாமவன்தான்!

சூரன். [விளக்கை முகத்துக்கு நேராய் காண்பித்து] ஆம்டா ! ஆம்டா!! ஐயன்தாண்டா ! [சூரசேனனை காண்பித்து] இவரு சினெ கண்டா இவருக்கு !

வீரன். அண்ணே ! ஓடிப்போயி மடக்கண்ணே ! ஆட்டுகுட்டுங்களே !

சூரன் ஆம்டா ! [மடக்கல்.]

அழ. யார்டா நீங்கள் ?

சூரன். இல்லே ! உங்களண்டேதாம் வந்தோம்.

அழ. ஏன் ?

சூரன். மாராசாயிக்குருரெ, அவங்க உங்களேக் கூட்டிகிட்டு வரச் சொன்னாங்க ?

அழ. நான் வரமாட்டேன் போ ?

வீரன். பேசாமே வந்துடுங்கோ இல்லாப்போனா —

அழ. என்ன செய்வாய் ?

வீரன். [கையைப் பற்றுகிறான்.]

அழ. சீ ! விடு ! மூடா ! நீயோ என்னைப்பிடிக்க வல்லவன் [உதைக்கிறான்.]

சூரன். இன்னா அவனை அடிக்றீங்களே ! சுரியாவந்துடு இல்லாப்போனா மரியாதை கெட்டுபோவும். [கட்ட முயலுகிறான்]

அழ. சீ ! கழுதைகளே நம்மையாவது நீங்கள் கட்டுவதாவது ! இருவரையும் மூர்ச்சிக்கும்படி செய்கின்றான்.]



சூர. அரசே ! பாவம் இவர்கள் என்ன செய்வார்கள் ! வசந்தராஜன் செய்த சூழ்ச்சியே இது !

அழ. சரி ; இவர்கள் மூர்ச்சித்து விட்டார்கள் இனி நாமிங்கிருப்பது தகுதியன்று நாம் போகலாம் வா.

சூர. அப்படியே செய்வோம். ஆனால் தாங்கள் இப்பொழுது எவ்விடம் செல்லுகின்றீர்கள் ?

அழ. இனி இக்கொடும்பாவி சிற்றப்பன் முகத்தில் விழிக்கமாட்டேன். நான் சத்தியசீலர் வீட்டுக்கு செல்லுகின்றேன். நீ எனது தாயாரை எப்படியாவது அங்கு சேர்ப்பிக்க வேண்டும். நான் தாராநகரத்தைவிட்டு வந்து விட்டதாக எனது தாயாருக்கு தெரிவிக்க வேண்டியது. நீ எப்பொழுதும் அரண்மனையிலேயே யிருந்துக்கொண்டு இன்னும் என்ன நடக்கின்றதென்பதை பார்த்து எனக்கு தெரிவிக்க வேண்டியது. நான்போய் சத்தியசீலரை பார்க்கின்றேன். நீ போ சீக்கிரம்.

சூர. அப்படியே !

---

## ACT 2, Scene. 1.

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

வசந்தன் வருகின்றான்.

வசந்த. ஆஹா! நான் நினைத்தாற்போல் எல்லாம் ஆகப்போகின்றது. நான் சத்தியவதியை கைவசப்படுத்தி என் தமயன் ஆண்டுவந்த இவ்வரசைக் கைப்பற்ற வேண்டுமென்றிருந்தேனே ! அதை ஜெயம் பெற்றுக்கொண்டேன். எப்படியும் அழகாநந்தன் இந்நேரம் இறந்திருப்பான் ! தடையில்லை ! வெறுங்கையினை வெயிலின் நின்று ஏன் சபதத்தைக் கருதாமலிருப்பேனா ? ஆனால் யமகண்டன் சூரசேனன் இடைவிடாது நான் எங்கு சென்றபோதிலும் கொஞ்சதூரத்திலிருந்து என்னை பாதுகாப்பவனைப்போல் நடித்து பாதுகாத்துவருகின்றான். சூழ்ச்செய்து இவனைக் கொல்லவென்றாலோ அதுவும் அசாத்தியமாயிருக்கின்றது. இவன் என்ன செய்யக்கூடும் ! இவனையும் முடித்துவிடுகின்றேன் இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும் ! நான் என்ன செய்

5

வேன். சத்தியவதியை நினைக்கும் பொழுதெல்லாம் என் உடம்பில் ஓர்வித சிலர்சிலிர்ப் புண்டாகிறது. அவ்வண்ணம் நினைக்கும் பொழுதெல்லாம் என்னுள்ளத்தில் மிகவும் அந்தரங்கமாயிருக்கும் விஷயங்களை யெல்லாம் நன்றாய் ஆராய்ந்தறிவதுபோலல்லவோ இருக்கின்றது. அவள்மேலிருக்கும் ஆசையை திருப்பிவிட்டாலென்றாலோ, நாகமானது தனக்கிரையாகிய சிலப்பூச்சியைத் தன் கண்களைக்கொண்டு எப்படி அசைவற்றிருக்கச் செய்து விடுகின்றதோ அங்ஙனம் அவள் மேல்வைத்த கண் மாறாவண்ணமாய் ஸ்தம்பித்துவிடச் செய்கின்றது. எப்படியாவது அவளை அடையவேண்டும். கடவுள் எப்படியோ எனக்கிவ்வளவு சக்தியையும், புத்தியையும், யுக்தியையும் கொடுத்து மூலையில் உறங்கிக்கொண்டிரு என்றால் எப்படியிருப்பது? அவைகளுக்கு ஏதாவது ஒரு உபயோகம் வேண்டுமே! நல்வழியில் உபயோகிக்க ஈசன் வழி காண்பிக்காவிட்டால் கெட்ட வழியிலாவது உபயோகிக்க வேண்டி வருகின்றது! நான் என்ன செய்வேன்? என்மீது குற்றமென்ன?—சரி; இவைகளையெல்லாம் குறித்து இப்பொழுது யோசித்துப் பயனென்ன? ஒருகாரியத்தைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தபிறகு பின்வாங்குவதா? நான் எண்ணத்தையாவது முடிக்கவேண்டும். அல்லது என் உயிரை யாவது முடிக்கவேண்டும். எது நிறைவேறினும் எனக்கு சந்தோஷந்தான். ஐயோ! என் மனதை எப்படி திருப்புவது. அசாத்தியம்! அசாத்தியம்!! ஒருவராலும் வெல்ல முடியாதென்னை இக்காமநோயால் வெல்லப்பட்டேனே நான்! எப்படித் திருப்பினும் திரும்பும்படியான என் மனதை இக்காதலின் வலையினின்றும் மீறிக்கொள்ள சக்தியில்லாதிருக்கின்றேனே! காதலே! காதலே!! உன் மகிமையே மகிமை! உன்னைவெல்ல வல்லவர்யார்?- சரி! முடிந்தது. இந்த சத்தியவதியின்மீது நான் காதல் கொண்டுவிட்டேன். இனி என்னுயிர் உடலைவிட்டு நீங்கும் பொழுதன்றே இக்காதல் என் மனதை விட்டகலப்போகின்றது. என்னகாதல்? என்னகாதல்? ஆ! அண்ணன் பத்தினி தாயல்லவோ? நான் என்னசெய்வேன்? காமத்திற்கு கண்ணில்லை. சீ! இவைகளை யெல்லாம் பற்றி யோசிப்பானேன்? இனி செய்யவேண்டியதைப்பற்றி யோசிப்போம். நான்



என்ன செய்வதிப்பொழுது? எப்படியும் அழகாநந்தன் ஒழிந்துவிட்டான். என் காதலோ மற்றொரு பக்கம் உந்துகின்றது! சீ! சீ! என்ன! என் சுகமெல்லாம் அழிந்தாலும் அழியட்டும், என் ஆவிபோயினும் போகட்டும் சத்தியவதியை நான் எப்படியாவது அடையவேண்டும். என்ன தவறு அதில்! ஐயோ! இந்த மங்கையர்க்கரசியின் மனதைப் புண்படுத்தவேண்டி வந்ததே! என்னிலும் பாதகன் இவ்வுலகிலுளனோ! ஐயோ! சத்தியவதி! உன்னை அடையாமல் எப்படி காலத்தைக்கழிப்பேன். அவளுடைய அழகை யான் என் சொல்வேன்! ஆஹா! இவளுடைய சௌந்தரியத்தைக்கண்டு இவளை சிருஷ்டித்த பிரம்மதேவனே மோகிப்பார்! அப்படியிருக்க வேறெந்தப் புருஷன்தான் இவளுடைய அழகுக்குட்பட்டு மயங்கான்? இவளுடன் ஒருநாளாயினுங்கூடி வாழாத தேகம் எதற்கு? என்னுடைய பால்லியம் முதல் இவளையே யெப்படியாயினும் மணம்புரிய வேண்டுமென்று நினைத்திருக்க தற்செயலாய் என்தகப்பனார் என்னுடைய தமயனுக்கு மணஞ் செய்வித்தார்! இவளை யடைய என்னால் முடியாமற்போகின்றதோ பார்ப்போம்! ஆனாலும் இவளுடைய மனதை எப்படித்திருப்புவது! எதற்கும் நம்மாலான முயற்சிகளைச் செய்துபார்ப்போம் அழகாநந்தனும் தொலைந்தான் இவ்விராஜ்ஜியமும் நம் கைவசமாய்விட்டது! இவளையுமெப்படியாயினும் அடையவேண்டும். இவ்விராஜ்ஜியங் கிடைத்தது போலவே, இவளுங் கிடைக்கட்டுமே! நல்லது! இதுவே தருணம்! இவளுக்கு அழகாநந்தன் இறந்துபோன சமாசாரம் தெரிவதற்கு முன்னரே, நம்மிடத்தில் மோஹிக்கச்செய்து, எப்படியாயினும் மணந்துக்கொள்ளவேண்டும். இதுவே தகுந்தயோசனை. நாம்போய் அவளைப்பார்க்கவேண்டும். [போகின்றான்.]

## ACT 2, Scene 2.

இடம்—சத்தியவதியின் அரண்மனையில் சயனகிருகம்
சத்தியவதி உறங்குகின்றாள். வசந்தன் பிரவேசித்தல்.

வசந். அதோ என் கண்மணி உறங்குகின்றாள்! எழுப்புவோமா? தானாக எழுந்திருக்கட்டும். ஆ! சத்தியவதி! — இன்னும் சற்றுநேரம் இம்மங்கையர்க்கரசியின் மதிவதனத்தை நோக்குவேனாயின் எனக்கிப்பொழுது இருக்கும் சிறிது மனோதிடமும் போய்விடும். எழுப்பவேண்டும். ஐயோ! ஒருவேளை ஒப்பாவிட்டால் என்செய்வது. எழுப்புமுன் இன்னும் சற்று நேரம் ரூபலாவண்யத்தைச் சற்று பார்க்கிறேன். ஆஹா! என்ன அழகு? என்ன சௌந்தரியம்! இதுவரையில் நான் உன்னுடைய குணத்தையும் அழகையும் அறிந்தவனல்லன்! அவள் விழிக்குமுன் ஒரு முறை முத்தமிடுகின்றேன். [அருகில் செல்லுகின்றான்.] என்ன பயப்படுகின்றேன்.

[ஓர் அருவம் ஓடுகின்றது.]

அருவம். சண்டாளா! சீக்கிரத்தில் அழியப்போகின்றாய்! "கெடுவான் கேடு நினைப்பான்"

வச. அது என்ன! நான் காண்பது கனவோ அல்லது நினைவோ! இல்லை இல்லை! நினைவுதான். ஆ ஆ! இவளுடைய அழகு இளைத்துக் கறுத்து வாடி மலிந்திருந்தபோதிலும், இவளுடைய அழகை யான் என்சொல்வேன்! இவள் தலைமயிரை கோதி அதை பலவகை புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டால் எவ்வளவு அழகாயிருக்கும். என் கண்மணி! கண்மணி! — எழுந்திரு! எழுந்திரு! [எழுப்புகின்றான்]

சத்தி. [எழுந்து] ஆ! பிராணநாதா! கடவுளே! அப்பா! எங்கே அழகாநந்தன்? என்ன விசேஷம்? அவன் ஏன் இன்னும் வரவில்லை? தாரநாதராசனுக்கு இப்பொழுதுதான் புத்தி வந்தாற்போல் தோன்றுகின்றது.

வச. ஆம்! ஆம்!! அதிருக்கட்டும்; உமக்கு என்ன முகம் துயரப்படுவதுபோல் தோற்றுகின்றது?

சத்தி. அப்பா! என் பிராணநாதர் காலம் சென்றிருந் திருப்பாரேயானால் என் துக்கம் ஒருவாறு ஒழிந்துபோகும். அவர் விஷ



த்தினால் கொல்லப்பட்டாரென்று நமது ஜோசியர் சொல்லுகின்றாரே, அதுதான் எனக்கு வருத்தமாயிருக்கின்றது.

வச. [பக்கமாய்] இவளுடைய மனதை யான் எப்படித் திருப்புவது? எனதெண்ணம் சபலமாய் நிறைவேறுமா? ஆஹா! இவளுடைய வடிவினழகைக் கண்டும் யான் சும்மா இருப்பேனோ? எப்படியாயினும் இவளையடைவதே சரி! [பிரகாசமாய்] நீ இவ்வாறு வருத்தப்படுவதனாலெனக் கொன்றுந் தோன்றவில்லையே! இதற்காகவோ யான் உன்னை இவ்வளவு அருமையாய் பார்த்து வருகின்றேன். ஏன் இப்படி சிந்தித்துக்கொண்டிருக்கின்றனை? புருஷரை இழந்த ஸ்திரீகளெல்லாம் பதியுடன் கூடவே இறந்து விடுவார்களா? போனதைப்பற்றிச் சிந்திப்பதிற்பயனென்னை? "ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தில்"? இனி நடக்கவேண்டியதைப்பற்றி யோசிப்பாய்! நான் உயிருடனிருக்கும்வரைக்கும் உனக்கென்னகுறை? ஏன் வீணாய் தேகத்தைக் கிலேசப் படுத்திக்கொள்ளுகின்றாய்?

சத்தி. அப்பா! அவர் இறந்துவிட்ட பிறகு இத்தேகம் எதற்கு! அதிருக்கட்டும்; அழகாநந்தன் ஏன் இன்னும் வரவில்லை? அவனை சீக்கிரம் வரவழைத்துவிடு.

வச. அப்படியே. சத்தியவதி! என்னால் அதிஜாக்கிரதையாய் இரக்ஷிக்கப்பட்டு வருகிற நீ இம்மாதிரி ஏன் வருந்துவது? நீ இப்பொழுது சகல போகங்களையுமனுபவிக்கத் தக்கவளாயிருக்கின்றனை!

சத்தி. என்ன! என்ன!!

வச. கடைந்தெடுத்த திவ்விய காந்தியோடு விளங்குகிற யௌவன பாக்கியத்தையும் வீண பிடிவாதத்தால் நீ யநுபவியாமற் கெடுத்துவிடாதே! சிறந்த பொன்னாபரணங்களைத் தரியாமலும் நல்ல வஸ்திரங்களைக் கட்டாமலும், இவ்வழுக்குவஸ்திரத்தை யுடுப்பது முறையோ?

சத்தி. அந்தோ! பதியையிழந்த பாவையர்கட்கு இப்பூஷணங்களாலும் ஆடைகளாலுமுபசாரங்களாலும் என்னபிரயோசனம்? தந்தியில்லாத வீணையும், சக்கிரமில்லாத இரதமும்போலு மன்றோ பதியில்லாத ஸ்திரீகளின் வாழ்க்கை!

வச. [பக்கமாய்] இவளை நன்மொழிகளினலேயே வசப்படுத்த வேண்டும்! கண்ணே! சகல சுகங்களையுமநுபவிப்பதற்கு யோக்கியமான இவ்விளம் பருவத்தை வீணுக்கிவிடாதே! மேலான பதவியை யடைந்து இந்த உஜ்ஜயநீ தேசத்திற்கு பட்டமகிஷியாய் வாழ்ந்திரு!

சத்தி. என்ன! யான் கேட்பதும் காண்பதும் கனவோ! அல்லது நான் செய்த பாபமோ இவ்வடிவங்கொண்டு என்னை வருத்துகின்றதோ?

வச. கண்ணே! என்ன யோசிக்கின்றாய்! தயவு செய்து நீ சகல போகங்களையுமநுபவிப்பதைப்பார்.

சத்தி. என்ன சொன்னாய்? [கோபத்துடன் எழுந்திருத்தல்]

வச. இப்படியேன் வீணுய்க்கஷ்டப்படவேண்டும்? இராஜசபையில் ராஜராஜேசுவரியாய் வீற்றிருந்து என்னைக்களிக்கச்செய்வாய் என்பதே!

சத்தி. சீச்சீ! போதும்! போதும்!! நிறுத்து! யாரிடத்தில் வார்த்தையாடுகிறாய் என்பது தெரியவில்லையோ?

வச. கண்ணே! நீ கோபித்துக்கொள்வது உனது அதரபிம்பமும் மந்தமாருதத்தினலசைக்கப்பட்டு மலர்ந்து வரும் ரோஜாப் புஷ்பம்போல் அதிக காந்தியோடு விளங்குகின்றது!

சத்தி. அடே பாபீ! எனிப்படி வீணுய்க் குழறுகின்றாய்? உன்னுடைய வார்த்தைக்கு இச்சித்து உனைக் கூடும்படியும் சாமர்த்தியஸ்திரீயென்று என்னையுமெண்ணினையோ? இந்த விஷயத்தாலும் பிரிய வசனங்களாலும் என்பதிவிரதா தர்மத்தை உன்னலசைக்கலாகாது! அடே துஷ்டா! என்னை உனது தமயன் பத்தினி என்பதையும் சற்றும் யோசியாமல் என்ன அடாதவார்த்தைகளையெல்லாம் தொடுத்தனை? என்னை யாரென்று நினைத்தனை? சீ! என்முன் நில்லாமல் விரைந்துச் செல்! ஆ! குமாரா! அழகாநந்தா!

வச. உன் மீதெனக்கிருக்கும் காதலானது எனக்குண்டாகுங்கோபத்தை யடக்குகின்றது. நீ பெண்ணாயில்லாவிட்டால் உன்னை இந்நேரம் சித்திரவதை செய்திருப்பேன். என்னையொருபொருட்டாய் எண்ணாமல் கோபத்துடன் பேசுகின்றனை! இராஜராஜனாகிய யான் உன்னைக் காமுற்றனன்! நீயோ என்னை அடைய விரும்பாது கோபங்கொண்டிருக்கின்றனை! என்னை உன்னால் என்ன செய்யக் கூடுமென்று நினைக்கின்றாய்? உன்னைப் பலாத்காரமாய்த் தழுவுவது எனக்கொரு விஷயமா? வேண்டாம்! கண்ணே! எப்படியாவது எனக்கு சிருங்கார ரஸத்தை மாத்திரங்கொடுத்துவிடு. நான் சொல்வதைக்கேள் இதுதானென்னுடைய பிரார்த்தனை; என்ன சொல்லுகின்றனை?



சத்தி. அடே! சண்டாளா! என் பிராணநாதனைக் கொன்றவன் நீதான்! நன்றாய்த்தெரிகின்றது! அழகாநந்தனிருப்பதையும் மறந்து பேசுகின்றாயா என்ன? இந்த சமாசாரத்தைக் கேட்டவுடன் உன்னை வெட்டி எறிவானே! வேண்டாம் பிழைத்தோடிப்போ.

சத்தியசீலன் வருகிறான்

சத். ஆஹா! எதற்குமஞ்சானே சண்டாளன் ஏதோ ஸம்பாஷணை கேட்கின்றது! சற்று மறைந்து நின்று கேட்போம்.

சத்தி. அடே! பாபி! செய்யாத சதிகள் செய்து என் பதியைக் கொன்றது மல்லாமல் என்னையும் பெண்டாளவாடா நினைத்தாய். அடே! உனக்கு என்ன கபடம்! என்ன கபடம்!! என்னை கெடுப்பதற்கோ வெகு அன்புள்ளவன் போற் நடித்தனை?

வச. வேண்டாம்! நான் சொல்வதைக் கேள்! உன்னைப் பெண்ணென்றும் பாராமல் கண்டோர் கண்டு சிரிக்கும்படி அவமானப்படுத்துவேன்! ஜாக்கிரதை! என் மனோரதத்தைப் பூர்த்திசெய்வாய்.

சத். என்ன வஞ்சனை! என்ன வஞ்சனை!!

சத்தி. அடே பாபி தன் புருஷனைப் பலிகொடுத்தும் மற்றொருவனை சேருவது முறையோ? சீ! என்முன் நில்லாதேபோ!

வச. என் கண்ணே! சகல சாஸ்திரங்களையுமறிந்திருக்கின்ற யானும் தர்மத்திற்கு விரோதமாய் ஒருபோதும் நடவேன். என்னை மணந்துகொள்வதாகச் சொன்னேனேயன்றி திருட்டுத்தனமாக உன்னைக் கூடுவதாகச் சொல்லவில்லையே!

சத்தி. அடே ஒருவனை மணந்த பிறகு மற்றொருவனை மணக்கக் கூடாதென்று வேதங்களும் சாஸ்திரங்களும் முறையிடுகின்றனவே! இதனால் எனக்கு மாத்திரமன்று உனக்கும் மகத்தான பாதகம் சேர்ந்து விடும்! வேண்டாம்! இப்பாவியின் மீது வைத்திருக்கும் காதலை நீக்கிவிடு!

வச. உன் புருஷன் இறந்து போன பிறகு கூட அவனைப் பதியென்று கொண்டு வீணாய் காலத்தைக் கழிப்பது தகுதியன்று! சாஸ்திரங்களிற் கூட ஸ்திரீகளுக்கு ஐந்து சந்தர்ப்பங்களில் புனர் விவாகம் விதிக்கப்பட்டிருக்கின்றதே! அப்படியிருக்க நீ சஞ்சலப்படுவது அழகன்று. என் கண்மணி! சிந்தையால் வேதனைப்பட்டுக் கண்ணீர் விடுகிற இந்நிலைமையை விட்டுவிடு! என்னைப் பர்த்தாவாகக்கொள்!

சத்தி. ஐயோ! எவ்வளவு நன்மையாய் சொன்ன போதிலும் தெரியவில்லையே உனக்கு. வேண்டாம்! என்மீது உனக்குண்டாயிருக்கும் ஆசையை யொழித்து, போய் அழகாகாந்தனை அழைத்துக் கொண்டுவா.

வச. என் கண்ணே! என்னைவிட சிறந்தவன் உன் மனத்தைக் கவர்ந்துக் கொள்ள இன்னு மெவனடியிருக்கின்றான்.

சத்தி. அடே! கழுதை! என் வீணாய் அழிந்து போகின்றாய்! வழிபறித்துக் கொல்லும் கொடிய கள்ளரும் இத்தகைய செயலை புரியார்களே! வேண்டாம்!

வச. இந்த உபதேசம் யாருக்குச் செய்கின்றனை! யான் இவற்றிலெல்லாம் திருப்தியாய் விடுவேனென்று நினைக்கவேண்டாம். இப்பொழுதே குறியாய் என் அபிப்பிராயத்தைப் பூர்த்தி செய் வீணாய் மடியவேண்டாம். நான் நல்ல தனமாய்க் கேட்டால் நீ உடன்படமாட்டாய்! கள்ளரை போல் தான் உன்னைக் கட்டாயப் படுத்த வேண்டும்

சத்தி. ஐயோ! என் செய்வேன் என்னைக் காப்பாற்றுவார் இங்கொருவரும் இல்லையே! ஆ! ஈசா! நீதான் காப்பாற்ற வேண்டும்! [மூர்ச்சித்து விழுகிறாள்]

சத். [வெளியில் வந்து] அடே! வசந்தா நில்! நில்!! போகாதே! நீலகண்டர் சொன்னது சரியாய் விட்டது! நீதான் அரசனை



கொன்றாய். அடே! பாபி! ஆதரவற்ற பெண்பிள்ளையினது பதிவிரதா தர்மத்தை பலாத்காரம் செய்து கெடுக்கவா முயலுகின்றாய்! அடே பாபி! அடே சண்டாளா! எவ்வளவு பாபங்களை உன் தலையின்மீது தாங்கத் துணிவுகொண்டனை? இவ்வற்ப ராஜ்ஜியத்திற்காசை கொண்டு நிர்பராதியான அழகாகாந்தனை கொல்லப் பார்த்ததுமன்றி—

வச. என்ன! என்ன!! என்னசொல்கின்றீர் [பயத்துடன்]

சத். [யோசித்துத் தான் சொன்னதைத் திருத்திக்கொண்டு] ஆம்! இராஜ குமாரனைக் கொன்றதுமன்றி அவருடைய தாயாகிய இப்பதிவிரதா சிரோமணியையும் கெடுக்க வந்தனையே!

வச. அப்பா! [பக்கமாய்] இப்பொழுது தான் என் பிராணன் வந்தது! அடே சத்தியசீலா! என்ன சொல்லினை! இப்பொழுதே இவ்விடத்தை விட்டு அகலுவாய்! என்னுடைய ஸ்திதியென்ன! நீ என்ன! என்ன சொன்னாய்? போ வெளியே!

சத். ஆஹா!, இது என்ன அநியாயம்! என்ன கொடுமை!

வச. யார் அங்கே? [இரண்டு சேவர்கள் வருகின்றார்கள்.] அடே! இவரை வெளியில் துரத்தவேண்டும் இப்பொழுது!

சேவ. அப்படியே மகாராஜா!

வச. ஆகட்டும் சீக்கிரம்!

சத். ஆஹா! நீலகண்டர் சொன்னது சரியாய் விட்டது! சரியாய் விட்டது!!

வச. என்ன நீலகண்டன் சொன்னது அவனுடைய குணத்தை கேட்கவேண்டுமா?

சத். என்ன குணம்?

வச. என் தமயனைக் கொன்ற குணம்!

சத். சீ! பேசாதே! தருமசீலரைக் கொன்றவன் நீ தான்; நான் சத்தியஞ் செய்வேன! போதும்; அடே பாபி! அவரது பெயரை நீ வாயால் உச்சரிக்கவும் தக்கவனல்லன். இதிலொன்றில் தெரியவில்லையா? என்னை முதன்மையான மந்திரியென்றும் பாராமல் நீ சத்தியவதிக்கு தீங்கு செய்வதைச்

சொன்னால் என்னை சேவகர்கள் மூலமாய் தர்மசாஸ்திரத்தையும் பாராது என்னை துரத்துகின்றாயே ! இன்னும் என்ன பேதம் வேண்டும் ? சீ ! நீ ஒரு க்ஷத்திரியனா ?

வச. [சேவகர்களைப்பார்த்து] அடே ! என்ன சும்மாய் நிற்கின்றீர்கள் ? இவனை வெளியே தள்ளுங்கள் !

சேவ. வா சாமி ! மகாராஜா கோவிச்சிக்குருரு.

சத். யாரடா மஹாராஜன் !

வச. சீ ! போ வெளியே !

சத். அடே ! கொடிய சீக்கிரத்தில் கொல்லப்படப் போகின்றாய் ! நீ சாகும் பொழுது என்னை நினைத்துக்கொள் [சேவகர்கள் அழைத்துச் செல்லுகின்றார்கள்]

வச. சீ ! போ வெளியே ! உன்னால் என்ன முடியும் ? [சத்தியவதியைப் பார்த்து] அடிபேதாய் ! எனிப்படி வீண் கவலைப் படுகின்றாய் ! [முகத்தைப் பார்த்து] ஆஹா மூர்ச்சித்து விட்டாள் போல் தோன்றுகின்றது. சரி ; பிறகு வந்து பார்த்துக் கொள்ளலாம் இப்பொழுது நாம் இங்கிருக்கலாகாது [போகின்றான்]

---

## ACT 2, Scene 3.

இடம். — உஜ்ஜயினி: ஒரு ராஜவீதி.

காலபாசனும், காலனும் மாறுவேடம் தரித்து வருகிறார்கள்.

காலபாசன். அடே ! காலா ! இப்பொழுது அதெல்லாம் பேச நாழியில்லை. நீ சீக்கிரம் போ. செந்தலைப் புலிகள் பார்த்து விட்டால் போட்டுக் கொண்டு போய் விடுவார்கள் ! பத்திரம் ! ஜாக்கிரதை ! நீ இன்றையதினம் எவ்வளவு சம்பாரித்துக் கொண்டு வருகின்றாயோ பார்க்கவேண்டும்.

கால. அப்படியே ஆகட்டும் !

காலபா. சரி ; போ சீக்கிரம். பல்லன் எங்கே ?

கால. அவன்கூட இங்கேதான் வருவான்கோ நான்போறேன்கோ. [போகிறான்].



காலபா. அடேடே ! யாரோ வருகின்றார்கள் ! [யோகம் செய்வதுபோல் உட்கார்ந்துக் கொள்ளுகின்றான்]

சார. [சாரங்கன் வருகின்றான்] அடே ! என்னடா ! இங்கே காணேமே ! இங்கேதான் இருப்பாரென்று சொன்னாரே ! இந்தப் பக்கம் போய் பார்க்கலாம். அந்தா ஒரு சாமியார் உட்க்கார்ந்திருக்கின்றார். அவரைப் போய் கேட்ப்போம். [சாமியார்வேடந்தரித்துட்கார்ந்திருக்கும் காலபாசனிடம் சென்று]

சார. ஐயா ! இங்கேஒரு சாமியார் வந்தாரே அவர்தாங்கள் தானா ?

காலபா. சிவம் !

சார. அடே என்ன இழவு சிவம் ! தாங்கள் தானா ?

காலபா. சிவம் !

சார. சாமி ! தங்களுக்கு காது கேட்க வில்லையா என்ன ?

காலபா. சிவம் !

சார. தாங்கள் தானா என்றேன் !

காலபா. சிவம் !

சார. இவர் தான் ! இவர் தான் !! அவர் சொன்னது இவர் தான் ! சந்தேகமில்லை !

காலபா. [கண்விழித்துக் கொண்டு] உம் ! —

சார. [பயத்துடன்] சாமி ! தங்களுடைய —

காலபா. உம் —

சார. தங்களுடைய பெயர் —

காலபா. உம் —

சார. தங்களுடைய நாமதேயத்தைக் கேட்கலாமோ ?

காலபா. பன்ரெண்டி லொன்று சொல்

சார. தங்கள் பெயரென்ன வென்று கேட்டேன்.

காலபா. ஜோசியம் பார்த்தல்லவோ சொல்லவேண்டும் !

சார. நீங்கள் தான் ! நீங்கள் தான் !! சந்தேகமில்லை !

காலபா. என்ன சமாசாரம் ?

சார. தேவரீர் ! அடியேன் இம்மார்க்கமாக வரும்பொழுது ஒரு

சன்னியாசியைச் சந்தித்தேன். அவரால் தங்களுடைய பெருமைகளைத் தாம் அறிந்தேன். ஆதலால் தங்களைக் காணுதற்கே இவ்விடம் நாடியது. தாங்கள் திருவுளமகிழ்ந்து நமது வரலாற்றை எனக்கு விளப்புவீரென வேண்டுகின்றேன்

காலபா. அப்பா, இந்த கட்டையை ஏன் தேடி வந்தாய்? நான் உன்னை எங்கேயோ பார்த்திருக்கின்றாற்போலிருக்கின்றது!

சார. ஆம்! ஆம்!! முன்பு தாது வருஷத்துக் கருப்பில் நான் ஏழைகளுக்கெல்லாம் ஆயிரம் ஆயிரமாகத் தானம் கொடுத்தேனே, அப்பொழுது தாங்கள் ஒருவேளை பார்த்திருக்கலாம்.

காலபா. இருக்கலாம்! இருக்கலாம்!!

சார. அப்படித்தானிருக்கும். இப்பொழுது என்னை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. ஏனென்றால் அப்பொழுது நான் வைரக் கடுக்கன், செல்பச்சைக்கல் முருகு, முத்து மாலை, மோகனமாலை, வீரவண்டயம், தோரா, கைகாப்பு, கொலுசு, முதலியன வெல்லாம் போட்டுக் கொண்டிருந்தேன். அது இப்பொழுதில்லையே 'அப்படித்தானிருக்கும்.

காலபா. ஆமாம்! உனக்கென்ன; பிரபு!

சார. எப்படித் தெரிந்தது?

காலபா. ஜோசியம் ஒன்றிருக்கின்றதே! அதைக் கொண்டு பார்த்தேன். தெரிந்து விட்டது.

சார. இது தெரியுமோ பாருங்கள். நான் என் சிறுவிரலில் நாற்பதினாயிரத்து நானூற்று எழுபத்து மூன்று வராகன் பெரும்படியான ஒரு வைரமோதிரம் போட்டுக் கொண்டிருந்தேனே தங்களுக்குக் கியாபகமிருக்கின்றதா?

காலபா. ஆம்! ஆம்!! கியாபகமிருக்கின்றது.

சார. அதை ஒரு நாள் இரவு ஒருவரு மறியாதபடி இந்த மஹாராஜா யிருக்கின்றாரே! — அவர் தான் — அவர் பெயரென்ன — வசந்தர்! வசந்தர்!! அவர் என் வீட்டிற்கு வந்து மிகவும் வேண்டிக் கேட்டார் அதை அவருக்கு தானமாகக் கொடுத்து விட்டேன்.



காலபா. அதான் சரி; அப்படி யல்லவோ யிருக்கவேண்டும். உம் —

சார. என்ன யோசிக்கின்றீர்? கையில், போட்டுக் கொண்டிருந்த காப்பும், கொலுசும் பார்க்கின்றீரா?, அதைச் சென்ற வாரம் என்னுடைய வண்ணானுக்குக் கொடுத்து விட்டேன்.

காலபா. அப்படித் தான் செய்யவேண்டும்; தமக்கென்ன குறைவு?

சார. அது போகட்டும். தங்களை நான் ஒரு ஜோசியம் கேட்கவேண்டும். ஒரு ஜோசியன் எனக்கு பொன் புதைகள் கிடைக்குமென்று கூறினான். இதைச் சொன்னதற்காக அவனுக்கு நான் என் தோராவை கொடுத்துவிட்டேன். அந்தப் புதை எப்பொழுது கிடைக்குமென்று தாங்கள் ஜோசியம் பார்த்துச் சொல்ல வேண்டும். உமக்கும் ஏதாவது தருகின்றேன் வேண்டுமென்பதை.

காலபா. இது ஒரு கஷ்டமா! வெள்ளியைப்பொன்னாக்கும் சக்தியை உடையவனுக்கு!

சார. என்ன! என்ன!! வெள்ளியை பொன்னாக்குவதோ? எப்படி முடியும.

காலபா. எல்லாம் முடியும்.

சார. [காலில்விழுந்து] அதையும் எனக்குச் செய்துதரவேண்டும்.

காலபா. உம்! - வேண்டாம்! வேண்டாம்!! அது மிகவும் கஷ்டமானவேலை!

சார. [வேண்டிக்கொண்டு] இல்லை! இல்லை!! எப்படியும் செய்தே தரவேண்டும்,

காலபா. எல்லாம் பார்க்கலாம். உம் - இப்பொழுது ஜோசியத்திற்கு காணிக்கைவைக்கவேண்டும்! அதுதான் முறை! அது என் குருவுக்கு சேருகிற வழக்கம்.

சார. ஆ ஆ! அப்படியே ஆகட்டும்! அதற்கென்ன தாங்கள் என் மாளிகைக்கு வந்துவிட்டால் நன்றாயிருக்கும். பக்கத்துவீதி வாசற்படி இடிந்த வீடு. என்ன பாருங்கள் நாம் எத்தனை முறை அதைச் செரிப்படுத்தியும் தினம் அநேக பிச்சைக்காரர்கள் நுழைவதினால் எல்லாம் இடிந்து போகின்றது. தாங்கள் வரலாம்.

காலபா. வேண்டாம்! வேண்டாம்!! இந்த காயிக்கு மாளிகை கூடவா!

சார. சரி; ஆனல் நான் மாத்திரம் போய் வருகின்றேன். [போகின்றான்]

காலபா. இன்றைக்கு நமக்கு நல்ல லாபம் கிடைக்கும் போற் தோன்றுகின்றது. இப்படியும் ஒரு பைத்தியமிருக்குமா! [சுற்றிப்பார்த்து] அதோ ஓடி வருகின்றான். [யோகம் செய்வதுபோற் நடித்தல்] [சாரங்கன் ஓடி வருகின்றான்]

சார. யோகத்திலிருக்கின்றார்! அவர் தவத்திற்கு யாதொரு இடையூரும் செய்யாதிருக்கவேண்டும். ஆஹா! நாமோ இவ்வெள்ளிக்காப்பை எவ்வளவோ கஷ்டப்பட்டு நம் மனைவிக்கு ஓர் அணிகலமாக கையிற் போட்டோம்! எவ்விதத்திலாவது இம்மஹானிடமிருந்து இவ்வெள்ளிக்காப்பை பொன்னுக்கிக் கொள்ளவேண்டும்.

காலபா. [விழித்துக்கொண்டு] அப்பா! வா! உட்கார். [மணலின் பேரிற் சக்கரம் போடுகின்றான்] அப்பா! அந்த காணிக்கையை வை.

சார. இதோ வைத்தேன்! [வைக்கின்றான்]

காலபா. உம் — குரு பதினோராம் வீட்டிலிருக்கின்றார் —

சார. நான் கேட்டதை மாத்திரம் கூறிவிடுங்கள் போதும்.

காலபா. உம் - புதன் மூன்றும் வீட்டிலிருந்தால், நான் என்ன செய்வது?

சார. என்ன செய்வதா!

காலபா. இல்லை! இல்லை!! இப்பொழுது உங்களுக்கு எட்டாவது வீட்டில் சனி!

சார. சனியா! ஐ ஐயோ! நல்ல ஜோசியம்!

காலபா. ஜோசியம் தப்புமா?

சார. ஐயோ! அரைரூபாய் வைத்தேனே!

காலபா. பயப்படாதீர். ஜன்மத்திலே ராகு. முடியா—

சார. என்ன! முடியாதா! அப்போ புதை கிடைக்காதோ!

காலபா. சனியன் செய்கை! உம் -



சார. உமக்கு ஜோஸ்யம் தெரியாது ஆனல்.

காலபா. ஓ! ஓ!! ஓ!!! இப்பொழுதுதான் சரிபட்டது. நீங்கள் பயப்படாதீர்களையா! இப்பொழுது புதன் மூன்று -

சார. மூன்று புதைகள் கிடைக்குமா?

காலபா. ஐந்திலிருந்தால் இன்னும் மேலாகும்.

சார. வாரிக் கொடுப்பாரா பாருங்கள்?

காலபா. குரு கொடுக்கிறார், சுக்கிரன் பதினொன்று -

சார. சொல்லுங்கள் அவனை!

காலபா. ஓ! ஓ!! சுக்கிரதெசை வந்துவிட்டதோ? ஐயா! உங்கள் பாடு ஜெயம்தான்!

சார. ஜெயம்தானே? ஆனல் இந்த அரைரூபாயையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

காலபா. சந்தோஷம்!

சார. புதை எப்பொழுது கிடைக்கும்?

காலபா. இன்னும் ஒருமாதத்திற்குள் கிடைத்துவிடும்.

சார. சரி; இதோ இந்த வெள்ளிக்காப்பையும் என்மீது தயைக்கூர்ந்து எப்படியாவது பொன்னுக்கித்தரவேண்டும்.

காலபா. அப்படியே ஆகட்டும். ஆனல் இதை சீக்கிரத்திற் செய்துக் கொடுக்க முடியாது.

சார. அப்படியானல் நாளை வந்து வாங்கிக்கொண்டு போகிறேன்.

காலபா. சரி; நாளைபதினம் காலை இங்குவந்தால் செய்து கொடுக்கின்றேன்.

சார. அப்படியே நாளை வரட்டுமா?

காலபா. அப்படியே போய்வாருங்கள்.

சார. [திரும்பி பார்த்துக்கொண்டே சந்தேகத்துடன் போகின்றான்]

காலாப. என்ன! சந்தேகப்படுகின்றாயா என்ன? அப்படியானல் இதை எடுத்துக்கொண்டு போ.

சார. என்ன! என்ன!! இது ஒரு பெரிய காரியமா! உம்மை பரிசோதிப்பதற்காகவே இந்த வெள்ளி துண்டுகளை கொடுத்தேன். சரி; நான் போய் வருகின்றேன் [போகிறான்]

[ பல்லன் வருகின்றான் ]

பல். அம்மா ! பலுக்கவே ! பலுக்கு ! பலுக்கு !! தெற்குமூலே வடக்கு தெசையிலே ஜெயம் வருது ! ஜெயம் வருது !! அம்மா ராவே ! பலுக்கவே அம்மா !!

காலபா. அடே ! பல்லா ! எல்லாம் தெரியும் வா இப்படி.

பல். எஜமானே ! நீங்க இங்கெயா யிருக்கிறீங்கோ !

காலபா. அடே ! இப்படிவா ! இந்த அரை ரூபாய்க்கு நல்ல ஆட்டு மூளையாபார்த்து வாங்கிக்கொண்டு சீக்கிரம்வந்து சேர் நமது குகைக்கு.

பல். அப்படியே.

---

## ACT 2, Scene 4.

வயத்தான், தேப்ளான், டமாரபாபு, பனமரத்தான், வருகிறார்கள்.

வய. அடே ! என்னடா ! போடா ! எவனுவது ஆப்புட்டானு?

தோப். அடே ! வயத்தா ! போடாபோ ! இன்னிக்கி எவன் மூஞ்சி யிலே முழிச்சமோ, காலமே முதல்கொண்டு ஒரு ஆசாமி கூட ஆப்படலே !

டமார். பின்னே என்னடா வயித்தெரிச்சல் ! [ கப்பாண்டத்தை நோக்கி ] இது இராத பூட்டாக்கா, நமப சத்துதாண்டா பூடுவோம.

பன. வயத்தெரிச்சலா ? பின்னேயும் வயித்தெரிச்சலா !

வய. அடே பனமரத்தான் ! நீதான் பனமரமாச்சே, கொஞ்ச கள்ளுகுடேன்.

டமார். அடே ! தொப்ளான் ! இந்தாடா கள்ளுகொஞ்சம் குடிடா !

தோப். என் தொப்புலண்டை கூட நிறையாது ! நீதான் குடி !

டமார். அடே ! வய்தான் !! ஏண்டா !!! உனக்கு ஒனுமா வானுமா?

வய. இதோ இப்படி கொடு. [ குடிக்கிறான் ]

பன. [ கஞ்சாவை கொஞ்சமுட்கொண்டு ] பலே ! கஞ்சா ! அச்சா கெஞ்சா! அடே! கஞ்சாவுக்கு சமானம் என்னடாயிருக்குது.



வய. அடே ! கள்ளு நல்லாயில்லே ! புளிச்சகுனு இருக்குது.

தோப். இந்தா ! வங்காயம் கடிச்சிக் கினேயானு நல்லா யிருக்கும். [ கொடுக்கிறான். ]

வய. ஆமாண்டா ! என்னமா யிருக்கு தான்றே ? [ தலையை ஆட்டி ] நல்ல சோக் [ ஆடிக்கொண்டு ] அண்ணே ! நம் பல்லாம் எங்கே யிருக்கோம் தெரியுமா ?

டமார. மானத்திலே யிருக்கோமடா ?

பன. [ குடிக்கிறான் ] போடா ! கயிலாசத்திலே இக்குறோம்டா !

வய. எ எ என்னு சொல்றே ! சூ சூ சூரியன் கி கி கிட்ட யிருக்கிறோமா ?

தோப். அடே ! வயத்தான்! யிமாதேடா நில்லாதில். அடே குடி யா ! குடியா !!

வய. யார்ரா குடியன் ? நா நானு குடியன் ! உ உ உதை ஒனு மா ? [ பிடிக்கப்போய் விழுதல். ]

தோப். அடே ! வயத்தான் ! குரியா போய் படுத்துக்கோ.

டமார. அடே ! நம்பல்லாம் கொஞ்சமா குடிச்சேமே —

பன. அவன் அப்படியே கெட்டுட்டான் எல்லாத்தையும் ! நானு கஞ்சா அட்சேனே எனக்கு மயக்கம் வருதா ? இன்னு ஜோக்க நிக்குறேன் பாரு !

வய. அடே ! மாமா இது ! மர்ர்ர்ர் மாயிது ? இங்கேபடுத்து கிறேன் [ தொப்பளான் காலண்டை விழுகிறான். ]

தோப். [ உதைத்துத் தள்ளுகிறான் ] போடா !

டமார. [ தொப்பாளானை அடித்து ] புத்தியில்லே ! கயிதே ! பாவம் எப்படிடா ஒதைக்கிறது.

வய. டேய் ! தொப்பளான் ! பூட்டே ! குலோச் ! கூறு போரேன் ! ஏண்டா ! கொழுப்போ ! நம்பளே என்னுன்னு பார்த்தே ! ஒ ஒ ஒ ஒரு குத்து ! குலோச் !

தோப். டேய் ! என்டா எல்லாரும் சேந்துகுனு என்னை அடிச் சிங்களே ! ஐயா வரட்டும் சொல்றேன்,

பன. போடா ! போய் சொல்லுபோ பயமோ !

டமார. அடே! என்னடா என்நேரமும் சலப்டே போட்டுகுனுயிருக்குறீங்கோ! குடுவே எங்கேடா? ஏதாவது யிருக்குதா? கொஞ்சம் கூட யில்லே! இந்த தடியன் வயத்தான் குடிச்சட்டான்டா!

பன. தொப்பளான்! சமாதானம்! ஐயா கிட்ட சொல்லாதே! கொஞ்சம் கஞ்சாதாரேன்! டமாவ்கு அடிச்சேன் இதெல்லாம் சொல்லலாமா!

வய. [ எழுந்து ] அடே! எல்லாரும் சமாதானம்! சண்டெவாணும் [ கீழே விழுகிறான். ]

தோப். இன்னுடா! கீழே விழுரியே! இதோ பார் ஒரு மந்திரம் செய்ரேன்! இந்தா இத்தெ சப்பு பார்க்கலாம். [ ஒரு இலையை வயத்தான் வாயில் பிழிந்து ] நல்லா சப்பு!

டமார. என்னடா அது?

பன. எனக்கு கூட அப்படி பூமியெல்லாம் சக்கரம் போலசுத்துது கொஞ்சம் இலெ குடு நானுகூட சப்புரேன்.

வய. அடே; தொப்பளான்! என்னடா வாந்தி வருது [ வாந்தி எடுக்கின்றான். ]

தோப். அடே! இப்போ எழுந்திரு சரியா பூடுவே.

டமார. அடே! தொப்ளான் உனக்கு எப்படிடா தெரியும் இந்த மூலிக்கே?

பன. அவனே தொப்பளானுச்சே, அவனுக்கா தெரியாது.

வய. இப்போ கொஞ்சம் வருது சரியா! பலே சோக் அம்மாயி! அம்மாயி!!

தோப். இது தாண்டா நல்ல மருந்து!

டமார. ஆத்தாடி! ஆத்தாடி!!

பன. அப்பாடி! அப்பாடி!!

வய. அம்மாயி! அம்மாயி!! அம்மாயி!!! பலே சோக்! அம்மாயி! அம்மாயி!! அம்மாயி!!!

தோப். என்னடா! அம்மாயியை கினேச்சிக் கிட்டையோ! நேத்து ராத்திரி சாப்பாடு ரொம்ப மனுப்பு தானே?



டமார. நானு பார்ரேன்! அம்மாயி! அம்மாயி!! கெண்ணயம்மா! தாயே! தாயே!! பூ! பூ!! பூ!!! பூம்! பூம்!! [ எச்சில் தெரிக்குப்படி. ]

பன. டமாரா! எச்சே உழுதுடா மேலே!

காலன், பல்லன் வருகிறார்கள்.

பல். அண்ணே! அந்த பசங்கல்லாம் எங்கே?

கால. திருட்டு பசங்களுக்கு சாராக் கடை யிருக்குதோ இல்லேயோ! அங்கே தான் இருப்பாங்கோ!

பல். அங்கேதான் போயிருப்பாங்கோ! அதிலேயும் அந்தபையன் இருக்குறானே— வயத்தான், மொடா குடியன்! அப்பா!

கால. அடே! பல்லா! அதோ யிருக்குறாங்கோ! அவுங்க தாண்டா! இங்கே குடிச்சிட்டு சண்டை போர்ராங்கோ!

பல். அடே! பசங்கோ! என்னடா பண்றீங்கோ!

வய. அடே! பல்லா! அடே காலா! எங்கேடா? எப்போடா வந்திங்கோ? ஐயா எங்கே!

பல். அதோ வராரு நம்ப எஜமான்!

தோப். அது போறுபோது என்னடா உன் கையிலே?

பல். ஆட்டு மூலேடா! ஆட்டு மூலே!

டமார. நம்பளுக்கா?

கால. போடா கயிதே! எஜமானுக்குடா!

பன. எங்கெங்கே போயி தேட்டம் போட்டிங்கோ?

பல். ஐயா வ்ரட்டும் சொல்றேன்.

பன. என்னடா இது கூட வாடா தப்பு.

காலபாசன் வருகிறான்.

காலபா. கழுதைகளே! என்னடா செய்கின்றீர்கள்? சமையலாய்விட்டதோ?

பல். இப்போதானே வந்தோம், இதுகுள்ளே எப்படி சமையல் செய்ரது.

55747

காலபா. அடே ! டில்லன் ! காலன் !! நீங்களிருவரும் சென்று சமையல் வேலையைப்பாருங்கள் ! இதோ நான் வருகிறேன். போங்கள் ! [ இருவரும் போகிறார்கள். ]

எல்லோரும். [ பயத்துடன் ] சாமி !

காலபா. நீங்களெல்லோரும் இங்கேயே யிருங்கள். யாராவது வந்தால் என்னிடம் அழைத்து வாருங்கள் [ போகின்றான். ]

வய. அடே ! பசங்களா ! எப்பொ பார்த்தாலும் இந்த காலனும் டில்லனும் தாண்டா நம்ப எஜமான் கூட யிருக்குறாங்கோ. நம்பளே கூப்பிட மாட்டேனின்றாரு.

தோப். அடே ! அதோபார் ! யாரோ வராப்போலே யிருக்குது.

டமார. இந்த காட்லே யாருடா வருவாங்கோ ?

பன. அதோ என்னமோ செகப்பா தெரியலே ?

வய. ஆ ! ஆ !! ஆ !!! [ நகைக்கிறு ] தடிபசங்களா ! இது தெரியாதா ! இந்த காட்டிலே யிருக்கிற இரத்தக் காட்டேரி !

தோப். அதுவாதாண்டா யிருக்கும்.

பன. அதுவாயிருந்தா நம்ப குலேசு தாண்டா.

வய. இல்லெடா ! இப்பொ பாரு ஒரு பொம்பளாட்டி யாட்டம் இருக்குது. ஐயோ ! அம்மாயி ! அம்மாயி !!

தோப். எவளோ வந்துட்டா வழி தப்பி ! அம்மாயி ! அம்மாயி ! [ எல்லோரும் ஆடுகிறார்கள். ]

வய. அடே ! நீங்கோ அவகிட்ட போனுக்கா காலை ஒடிச்சுடுவேன் ! ஐயோ ! அம்மாயி ! அம்மாயி !! அம்மாயி !!!

பன. அடேடே ! ஒரு உத்தி யின்னு — நம்பளெல்லாம் போயி ஒளிச்சிக்கினு இவ யாருனு பார்க்கலாம் !

வய. ஆமாண்டா ! [ குதித்துக் கொண்டே ] ஐயோ ! அம்மாயி ! எனக்கு தாண்டா அவ.

தோப். சரிதான் வாடா.

பன. சீ போ ! அதோ வந்துட்டா.

வய. [ விழுந்துக் கொண்டும் ஆடிக்கொண்டும் ] அம்மாயி ! அம்மாயி !! அம்மாயி !!! [ ஒளிந்துக் கொள்ளுகிறார்கள் ]



பிரதாபசந்திரன் வருகின்றான்.

பிர. ஐயோ ! என் செய்வேன் ! எங்கு தேடியும் அழகானந்தனைக் காணேனே ? இக்காட்டில், பனியால் நனைந்து, மெய்சோர்ந்து மெலிந்துபோதல் நின் கருணைக்கழகோ ? தெய்வமே ! காலைமுதலி துவரையிலும் இக்கொடுங்காட்டிலலைந்து திரிகின்றேன். நான் அழகானந்தனை அழைத்துக் கொண்டு போகாவிடில், என்னருமை புதல்வி தாரணி உயிர் விடுவாள். அது சத்தியம் தாரணி ! தாரணி !! என் செய்வேன். அச்சண்டாளன் வசந்தன் வார்த்தையைக் கேட்டு கெட்டேனே. ஐயோ ! எங்கு தேடுவேன். மிகவும் பயங்கரமான இருள் வந்து விட்டது ! ஐயோ ! இப்பயங்கரமான காட்டில் யாரைக்காண்பேன் ? இந்த சமயத்தில் யாரெனக் குதவி பண்ணுவார்கள் ஐயோ யான் என் செய்வேன் ? எவ்விடஞ் செல்வேன் ? ஒன்றும் தெரியவில்லையே ! ஈசா ! உன்னைத் தவிர எனக்கு வேறுகதி யுமுண்டோ ? நீ தான் இவ்வேழையை இத்தருணம் காப்பாற்றவேண்டும்.

வய. [ மேலே விழுந்து ] என்னடா ! இன்னு சமாசாரம் ?

பிர. இதென்ன ! யார் நீங்கள் ? எங்கிருந்து வருகின்றீர்கள் ? ஏனிப்படி மேலே விழுகின்றீர்கள் ?

[ திருடர்கள் வெளியில் ஆடிக்கொண்டு வருகிறார்கள். ]

வய. என்னடா ! நான் தெரியலே ! என்னைபாரு ! என் அழகைப் பாரு !

பிர. என்ன குடித்தவன்போல் மேலே விழுகின்றாய் ! தூரத்தில நில்லடா !

தோப். என் பெஞ்சாதி ! என் அம்மாயி ! நான் அப்பவே சொல்லலே ?

பிர. அடே ! கழுதைகளே ! ஸ்திரீ என்றும் புருஷனென்றும் தெரியவில்லையா ? சீ ! குடிகாரப் பயல்களே ! [ உதைத்து ] விலகி நில்லுங்கள் !

வய. ஆமாண்டா ! குரலைப்பார்த்தால் புருஷன்போலதாண்டா யிருக்குது ? மலப்பா உழுதுடாதே !

தோப். கொழுத்த ஆசாமி !

பன. அடே ! அப்படியானு நீ மெள்ளப்போய் பிடிச்சுக்கோடா ! நானும் கூடவரேன்.

டமார. அடே! அவன்மேலே யிருக்கிற நகைங்கோ பலபல யின்னு துடா! நம்பாடு கொண்டாட்டம் தாண்டா!

பிர. இவர்கள் திருடர்கள் போலிருக்கின்றனர்! ஏதாயினும் கொள்ளை யடிப்பதற்கு வந்திருக்கலாம். இவர்களிடத்தி லிருந்து மெதுவாய்த் தப்பித்துக்கொண்டு செல்வதே நலம்! [போகிறான்.]

வய. அப்பேன்! எங்கே பொலாமுனு பாக்கரே?

பிர. நான் அவசரமாய்ப் போகவேண்டி யிருக்கிறது. மறிக்காமல் வழியைவிட்டுச் செல்! [போகப் பார்த்தல்.]

வய. நானுந்தானப்பேன் அவசரமா போவணும்! சத்தே பொறுங்கோ! [தடுத்தல்.]

[எல்லோருஞ்சேர்ந்து காலையும் கைகளையும் சேர்த்துக்கட்டுதல்.]

பிர. அடே! கழுதைகளே! பேசாமல் இப்பொழுதே என்னை விட்டு விட்டோடுங்கள்! வீணாய் மடிவீர்கள். [வயந்தானை யும், தொப்பளானையும் குத்தி கீழே தள்ளுகின்றான்.]

டமார. [தாரையை ஊதுகின்றான். காலபாசன், காலன், டல்லன் ஓடிவருகின்றார்கள். எல்லோரும் சேர்ந்து பிரதாபசந்திரனைக் கட்டி விடுகிறார்கள்.] புடிச்சுக்குங்கோ! நம்பாடு பலந்தான் இன்னக்கி.

---

## ACT 2, Scene 5.

இடம்—சத்தியசீலரின் வீட்டைச்சார்ந்த ஓர் நந்தவனம்.

சத்தியசீலர் உட்கார்ந்திருக்கின்றார்.

சத். ஆஹா! ஸுந்தல மஹாராஜர் இறந்து போகும்பொழுது என்ன சொன்னார்! "ஒருவேளை என்தம்பி இராஜ்ஜியத்துக் காசைப்பட்டுப் பாலகனான அழகானந்தனை கொன்று விட்டாலும் விடுவன், ஆகையால் அழகானந்தனுக்கு இராஜ்ஜியம் கிடைக்காமற் போனாலும் போகட்டும். அவனை உயிருடன் காப்பாற்றுவது உன் கடமை" - ஐயோ! அவர் இப்படி யுரைத்திருக்க, இச்சண்டாளன் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டதுமன்றி, அழகானந்தனுக்கு கேடு நினைக்



கின்றானே! எப்படியிருப்பினும் அழகானந்தனுடைய உயிரைக் காப்பாற்றுவது என்னுடைய முக்கிய கடமையா யிருக்கின்றது. அதோ வருகின்றார்!

அழகானந்தன் வருகின்றான்.

அழ. சத்தியசீலரே! இன்றிரவு அது மறுபடியும் தோன்றியதோ?

சத். அரசே! வாரும் உட்காரும்! நான் ஒன்றும் பார்க்கவில்லை.

அழ. நாம் கண்ட இப்பயங்கரமான தோற்றத்தை என்னவென்று நினைக்கின்றீர்? ஏதோ கெடுதி நமது இராஜ்ஜியத்திற்கு உண்டாகப்போகின்றது! ஆகவே இன்றிரவு, நமது கண் கொட்டாது கவனிக்கவேண்டும்.

சத். அது தோன்றுது இன்றைய தினம். நாம்போய் நித்திரை செய்வோம் வாரும்.

அருவம் தோற்றுகின்றது.

அழ. ஆஹா! சத்தியசீலரே! எனக்கு பயித்தியம் பிடித்துவிட்டது. அதோ பாரும் மறுபடியும் வருகின்றது!

சத். ஆம்! ஆம்!! அரசே! கண்டேன்! கண்டேன்!! அவ்வுருவம் நமது மரித்த மஹாராஜாவின் சாயையாய் யிருக்கின்றது.

அழ. நான் சென்று அதை வெட்டுகின்றேன்

சத். வேண்டாம்! அதனுடன் பேசிப்பார்ப்போம்.

அழ. எனது தந்தையைப் போலவே இல்லையா? உற்றுப்பாரும்!

சத். ஆம்! ஆம்!! உம்மை அழைக்கின்றது! போய்பேசிப்பாரும்!

அழ. என்னருமை தந்தையே! இறந்து புதைக்கப்பட்ட தாங்கள் இந் நள்ளிரவில் காணப்பட்டதேன்? என்ன சொல்லுகின்றீர்?

சத். அரசே! அது கோபத்துடன் நிற்கின்றது!

அழ. சத்தியசீலரே! அது போகின்றது! பேசு! பேசு!! ஆஹா! [அருவம் போகின்றது] போய்விட்டது! என்ன சத்திய சீலரே! பயந்தீரா! உமது உடல் நடுக்கின்றது முகம்

வெளுத்துக்காட்டுகின்றது. இப்பொழுது இதைப்பற்றி என்னநினைக்கின்றீர்?

சத். கடவுளே என்னெதிரில் வந்து கூறியபோதிலும், இதை நான் உண்மையாக என் கண்ணாற் கண்டிராவிட்டால் நம்பியிருக்கமாட்டேன்.

அழ. அது என் தந்தையைப் போலில்லையா? அவர் புருவநெரித்து நோக்கிய நோக்கம், என்ன ஆச்சரியம்! இம்மாதிரி இதற்குமுன் இரண்டு முறை, சரியாய் நள்ளிரவில் இந்நேரத்திற் கெல்லாம், போர்க் கோலத்துடன் கடந்து சென்றாரல்லவா?

சத். அரசே, இதைக் குறித்து என்னவென்று நினைப்பது; யோசிக்குமிடத்து, அநேகமாய் நமது நாட்டிற்கு நேரிடப் போகின்ற ஓர் பெருந் தீங்கினைக்குறிக்கின்றது. பின் வரும் கெடுதியை முன் உணர்த்துஞ் சகுனமாக விருக்கின்றது. ஆஹா! அதோபாரும்! அது மறுபடியும் வருகின்றது!

அருவம் வருகின்றது.

அழ. நான் எதிரிற் சென்று கேட்டுப்பார்க்கின்றேன். என்னைக் கொன்றாலும் சரி! ஏ! அருவமே! வாய் திறந்துபேசு. என்ன வேண்டும் உனக்கு? அல்லது ஏதேனும் பூமியிற் புதைத்து வைத்த பொருளின் பொருட்டு இவ்விதம் அலைகின்றனையா? சொல் சீக்கிரம்! நின்று கூறிவிட்டுப்போ! ஆஹா! போகின்றது! என் வாளால் அதை வீசுவதா?

சத். வீசுவீர்! அது பேசாவிட்டால்.

அழ. இதோ! மறைந்து விட்டது! அது பேச வாய் திறந்தும் பேசாமற் சென்றது!

சத். அது ஸகஜம்தானே!

சூரசேனன் வருகின்றான்.

சூர. இளவரசே! நமஸ்காரம்.

அழ. நண்பனே! மிகவும் சந்தோஷம் வருவாய், என் தந்தையைக் கண்டேனின்று.

சூர. யாரை?

சத். தருமசீலரைக் கண்டோம்!



சூர. இறந்த மஹாராஜாவையா கண்டீர்! சொல்லுங்கள் சீக்கிரம் நான் கேட்க வேண்டும்.

அழ. என் தந்தையைப் போன்ற ஓர் அருவம்.

சத். எங்களருகாமையில் கம்பீர நடையுடன் நடந்துசென்றது.

சூர. எங்கே இதெல்லாம் நேரிட்டது?

அழ. இவ்விடத்திலேயே!

சூர. நீர் அதனுடன் பேசவில்லையா?

அழ. சூரசேனா! நான் பேசினேன். ஆனால் அது அதற்குப் பதிலொன்றும் கூறவில்லை, ஆயினும் ஒருமுறை தலைதூக்கி வாய் அசைத்துப் பேச முயன்றதுபோல் தோன்றிற்று. ஆனாலும் அது பேசாமல் சென்றுவிட்டது.

சூர. என்ன ஆச்சரியமாயிருக்கிறது! முகத்தைப் பார்க்கவில்லை நீங்கள்?

அழ. நன்றாய்ப் பார்த்தோம்!

சூர. எப்படியிருந்தது? கோபத்துடனா நோக்கினர்?

அழ. கோபத்துடன் தான்!

சத். துக்கமே அதிகமாய் விளங்கியது.

சூர. முகம் வெளுத்திருந்ததோ?

சத். ஆம், மிகவும் வெளுத்திருந்தது.

சூர. நான் இங்கிருந் திருப்பேனாயின் எனக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைத்திருக்கும். அதிக நாழிகை தங்கியதோ?

அழ. ஐந்து நிமிஷம் தானிருக்கும்.

சூர. நினைத்தேன்! நினைத்தேன்!! நண்பனே! நான் அப்பொழுதே சொல்லவில்லையா! இதிலேதோ விருக்கின்றது! ஏதோ வஞ்சகம் நடந்திருக்கவேண்டும்! சத்தியசீலரே! நாழிகை என்னவிருக்கும்?

சத். பதினைந்து நாழிகைக்குச் சற்று குறையுமென்று நினைக்கின்றேன்.

சூர. சத்தியசீலரே! அதென்ன சப்தம்?

அழ. ஆஹா! சூரசேனா! மறுபடியும் வருகிறது. அதோபார் அது வருகின்றது! ஆஹா! தந்தையே இக்கோலத்தில் உம்மைக்கண்டபின் உம்முடன் பேசியேதீரவேண்டும் நான். ஐயோ! தந்தையே பூமியில் புதைக்கப்பட்ட உமது உடல் அதைப் பிளந்துக்கொண்டு ஏன் வந்தீர்? மடிந்த உமது உடல், ஏன் மறுபடியும் நள்ளிருளில் கண்டோர் நடுங்கும் படி நடமாடுவானேன்? பேதை மாந்தர்களாகிய நாங்கள் மருட்சியடைவானேன்? தங்களுக்கு என்ன செய்யவேண்டும் நாங்கள்? [அருவம் அழகாநந்தனை அழைக்கின்றது] சத்தியசீலரே, சூரசேனா, என் தந்தை என்னை அழைக்கின்றார். நான் போகவேண்டும் [போகிறான். அருவம் சத்திய சீலரையும் சூரசேனனையும் அழைக்கின்றது.]

சத். அரசே? எங்களிருவரையும் கூட அழைக்கின்றது. நாங்களும் வருகின்றோம்.

சூர. சத்தியசீலரே, ஒரு வேளை இவ்வுருவைமாற்றி கோரமான வேறொரு ரூபம் கொண்டு நமது மதியை மயக்கினால் என்ன செய்வது?

அழ. எல்லோரையும் அழைக்கின்றது. வருவீர்கள் பின்பாக!

சத். அரசே! நாம் போகக் கூடாது.

அழ. என்ன செய்யக்கூடும்? வாரும் போய் பார்க்கலாம். அது என்னமோ பேசுகின்றது. கேளும் அதை!

சத். கவனித்துக் கேளுங்கள்.

அழ. அப்படியே!

தரு,அ. நான் போகவேண்டிய காலம் வந்துவிட்டது!

அழ. ஐந்தோ! என்னருமை தந்தையே!

தரு,அ. கவனித்துக் கேட்பீர்களாக.

எல்லோரும் அப்படியே கேட்கின்றோம்.

தரு,அ. கேட்டபின் பழி தீர்க்கக்கடவீர்!

அழ. என்ன?

தரு,அ. நான் உன் தந்தையல்லவோ?

அழ. ஆம். அது எனக்குத் தெரியும். சீக்கிரம் சொல்.



தரு,அ. என்னை அதர்மமாய்க் கொன்ற கொலைக்காக பழி வாங்குவாய்!

சத். நீலகண்டர் சொன்னது சரியாய் விட்டது!

தரு,அ. ஆம், சத்தியசீலரே!

அழ. தந்தையே! கூறுமதனை. இப்பொழுதே சென்று பழிவாங்குகின்றேன் நான்.

தரு,அ நான் காலம் சென்று இறந்ததாக வல்லவோ வெளியில் வார்த்தை வழங்கப்படுகிறது; அன்று! அன்று!! அழகாநந்தா! என்னைக் கொன்றவன் உன்சிறிய தந்தையே!

அழ. நினைத்தேன்! நினைத்தேன்!! எப்படி?

தரு,அ. கவலையன்றி நித்திரை செய்யும்பொழுது, உன் சிற்றப்பன் ஒருவருமறியாதபடி வந்து, விஷத்தை ஒரு பிண்ணத்திற் கொணர்ந்து, என் வாயில் வார்க்க, விஷமானது என் உடல் முழுதும் பரவி நானிழைத்த பாபங்களெல்லாம் பரிஹரித்துப் போகும் வழிக்கு, புண்ணிய கருமங்கள் செய்து முடிக்குமுன் என் அரசுக்கு ஆசைப்பட்டு பரலோக மனுப்பப் பட்டேன் பாவியால், இதனைப் பொறுத்திராதே!

அழ. தந்தையே! அவன் சிம்மாசனத்திலிருக்கும் பொழுதே அவனை பழிவாங்குகின்றேன். இது சத்தியம்.

தரு,அ. சத்தியசீலரே! சூரசேனா! இன்றிரவு கண்டதையும் நான் கூறினதையும் என்றும் வெளியிடாதீர்.

சத்,சூர அப்படியே.

தரு,அ. சத்தியம் செய்யுங்கள்!

சத்,சூர. அப்படியே சத்தியமாக ஒருவருடனும் கூறுவதில்லை.

தரு,அ. சரி; வாருங்கள் என் பின்னால்.

அழ. இன்னும் எங்கே அழைத்துச் செல்கிறீர்? கூறுமதை.

தரு,அ. வாருங்கள் கூறுகின்றேன். [எல்லோரும் போகிறார்கள்.]

———

## ACT 2, Scene 6.

இடம்— காடு.

வயத்தான் தூங்கிக்கொண்டிருக்கின்றான்.

தோப்ளான், டாமாரபாபு, பனமரத்தான் வருகிறார்கள்.

டமார. அடே! இதோ படுத்துக்குனு உறங்குறாண்டா!

தோப். அடேய்! எழுப்புடா அவனே, டேய் கழுதே இன்னாடா தூக்கம் எயிந்திருடா!

பன. தூக்கமா அவனுக்கு! குடிடா குடி! நல்ல குடிச்சுட்டு மயக்கமா படுத்துக்குனு யிருக்குறாண்டா!

டமார. அடேய்! எயிந்திருடா! எயிந்திரு!! பொழுது விடிஞ்சிப் போச்சிடா.

வய. அடேய்! போங்கடா! நான் தூங்குகிறேன்.

தோப். அடே எயந்திர்டா இன்னு! சீக்கிரம்போயி வேட்டையாடி எஜமானுக்கு நின்றத்துக்கு குடுத்துட்டு, நம்ப ஜோக்க போயி குடிச்சுட்டு ஆடலாம் வாடா. எயிந்திருடா!

வய. அடேசத்! நான் தூங்குரேன் எயிப்பாதிங்கோ!

பன. இவனுக்கு ஒருவழி பண்றேன்பார்! அடே? இன்னு போங்கடா நம்ப புறாகறி மயில்கறி தின்னுமே என்ன நல்ல இக்குச்சி! அடே உன் கையிலே பன்னிகறியா வெச்சிக்னு இக்கிறே! நல்லாக்கும்டா அது.

வய. [எழுந்து] எங்கேடா கறி?

பன:- பாத்திங்களா நான் சொன்னது செரியா போச்சி.

டமார. ஆமாண்டா!

வய. அடே! பையா! பனமரத்தான்! பொய்யா பேசினே? எனக்கு தூக்கம் வருதுபோ!

தோப். அடேசத்! "இன்னுமடா தூக்கம் வாடா போலாம் வேட்டைக்கி. இன்னிக்கு எப்படினு மான்கறி தின்னணும் வேட்டையாடி.



வய. [எழுந்து] சரி; நானு எயிந்தகினே! எனக்குமெத்த மான் கறி கொடுக்கிறீங்களா!

தோப். எல்லாம் ஆகட்டும்.

வய. [போய் மரத்தடியில் பார்த்து கள்குடுவையில்லாததைக் கண்டு] அடே! பூட்டுது! பூட்டுது!!

தோப். இன்னுடா பூட்டுது!

வய. ஐ ஐயோ! பூட்டுது! பூட்டுது!!

டமார எதுடா இன்னு?

வய. அதான்! அதான்!! பூட்டுது.

பன. கள்ளு குடுவையா பூட்டுது!

வய. வருது! வருது!!.

தோப். இன்னுடா!

வய. அதான்! அதுப்பேரின்னு? அதான்!

பன. எதான்?

வய. அதான்!

பன. சொல்டானு!

வய. பயித்தியம்! பயித்தியம்!! பயித்தியம்!!!

தோப். இவனுக்கு பயித்தியம் பு?ச்சிக்கிச்சிடா!

வய. ஆமாண்டா இன்னு! மயக்கம்! மயக்கம்!! அடே! உங்களுக்கு சலாம்பண்ரேன் என் கள்ளு குடிவியே கொடுத்துடுங்கோ! மெத்த புண்ணியம்.

டமார. அடேடே! எங்களுக்கு தெரியாதுடா! நாங்க எடுக்குலேடா இன்னு!

வய. அடேடே! அத்தே குடுத்தாக்கா வரேன் இல்லாபோனு வரமாட்டேன். ஐயோ! என் கள்ளு குடுவையே! ஏமாந்து பூட்டேனே! எப்போ வருவியோ என் கள்ளு குடுவையே! என் உயிர் போவுது இப்போ மரியாதியா குடுத்துடுங்கோ! இல்லாபோனு கல்லா [?] இட்டுவேன்.

தோப். ஏதோ இட்டு பாக்கலாம்.

பன. அடே வவுத்தா! நானு கஞ்சா தரேன் அத்தே குடிடா நல்லது.

வய. சரி; அதையாவது குடடா பாக்கலாம். சானு எனக்கு விட்டு நல்ல அப்பட்ட கள்ளு யாத்தானுன். அதே யாரோ திருடிக்கினிங்களே! சாமிதான் கூலி குடுக்கும். கொண்டா கஞ்சாவே! [வாயில் வைத்துக்கொண்டு] இதுகூட ரோக்கு தான் ஆனுக்கா கள்ளு குடிக்கிற சுகம் வராது! உம்பெலே கஞ்சா! அச்சா கஞ்சா! இது தாண்டா கைலாசம் கயிலாச னுட்டு சொல்றுங்களே இப்படி தாண்டா யிருக்கும்.

தோப். போடா தடியா! நாஙளாம் குடிக்கிலே உன்னே போலே முழு குடியன் யாரும் யிருக்கமாட்டாங்கடா.

டமார. ஆமா! [ஓர் கள்ளுகுடுவையை எடுத்துவருகின்றான்] இதோ பாத்தியா! அடே வவுத்தா! [குடிக்கிறான்].

வய. அடேடே! வானு! வானு!! என் குடுவே இது மரியாதியா குடுத்துவிடு கெட்டு போவாதே!

டமார. என் பின்னலேயே வந்தா வேட்டைக்கி, இத்தே குடிக்கு ரேன்.

வய. செரிதான்! ஆனுக்கா அந்த கள்ளு குடுவே என் பெண் டாட்டி போல தெரியுமா! பத்திரம்! எடுத்துக்குனு போனுக்கா குலோச்!

டமார. என் பின்னலேயே வா குடுக்கிறேன்.
வய. அப்படி தான் ஆவுட்டும்.
தோப். அது இன்னடா பச்சல்.
பன. அடேடே! நம்ப எஜமா வராரு.

டமார. அடேடே! சண்டே போட்டுகினு வராங்கடா.

காலபாசன், பல்லன், காலன், பிரதாபசந்திரன், எல்லோரும் வருகிறார்கள்.

காலபா. அடே! கொல்லுங்கள் இவனை.

பிர. அடே! கள்வர்களோ என்னை ஏன் அடிக்கின்றீர்கள்? என் மேலிருந்த ஆபரணங்களை எல்லாம் கொடுத்துவிட்டேனே!

காலபா. ஆம், இக்கடிதத்தில் கையொப்பமிடு.



பிர. அது நான் செய்யமாட்டேன்.

காலபா. அடேய்.

எல்லோரும். சாமி.

காலபா. இவனை இந்த ஸ்தம்பத்தில் கட்டிவிடுங்கள் இவன் இக்கடி தத்தில் கையொப்பமிடுவரையிலும். நான் மறுபடியும் வரு கின்றேன்.

எல்லோரும். அப்படியே ஆகுட்டுங்கோ! [கட்டிவிடுகின்றார்கள்].

காலன். மரியாதியா கை எழுத்து போட்டுடு, இல்லாபோனு செத்து பூடுவே.

பிர. நான் இறந்தாலும் செரி; நான் அதை செய்யமாட்டேன்.

பன. அடே காலா! இன்னாத்துக்குடா கை எழுத்து!

கால. உனக்கு தெரியாதாடா! இவன் கை எழுத்து போட்டா, இத்தே எடுத்துகினு போயி இவன் பொண்ணுக்கிட்ட காண் பிச்சா அவ வந்துடுவாளாம் இங்கே.

பன. இதிலே இன்னா எழுதி யிருக்கிறது?.

கால. போடா; எத்தனைவாட்டி சொல்றது. இவன் கை எழுத்து போட்டா அவ வந்துடுவா!

பன. எப்படி?

பல். "நானு இங்கே யிருக்கிறேன். நீ இந்த கடிதாசியே பார்த்த உடனே இந்த கடிதாசி எடுத்துக்குனு வாரவன்கூட வர னும்" இன்னு எழுதியிருக்குது.

பன. தெரியிதடா! தெரியுது!

வய. ராஜா பொண்ணுங்கோ நல்லாயிருப்பாங்கோ யில்லா!

தோப். ஆமா! ஆமா!

வய. ஆனுக்கா, நல்லா ஒதைச்சா தவிர கொடுக்கமாட்டாண்டா அவன்! ஒதெயுங்கடா! ஒதெயுங்கடா!! [அடிக்கிறார்கள்.]

பிர. ஐ ஐயோ! அப்பா என்னிடம் உள்ளதையெல்லாம் கொடுத்து விட்டேனே என்னை ஏன் அடிக்கின்றீர்கள்?

பல். கை எழுத்து போடு.

பிர. அது செய்யமாட்டேன், ஐயோ! நான் அரண்மனையை விட்டு புறப்படும்போழுதே ஒரு கள் பானை எதிரில் வந்தது.

வய. அடேடே! ஒதெங்கடா! ஒதெங்கடா!! இன்னு! சொன்னே! கள்ளு பானையா வந்தது! எங்கே அந்த கள்ளு பானே!

பல். இன்னு! மக எழுந்து பண்ணமாட்டே!

பிர. என்னுயிர் போனாலும் சரி, நான் செய்யமாட்டேன், ஐயோ தெய்வமே! நான் என் செய்வேன்.

பல். ஆனக்கா நீ இதிலேயே சாவு.

பிர. ஐயோ! இக்கதியனுபவிப்பதற்கோ நான் நாட்டை விட்டு அழகாநந்தனை தேடி வந்தேன்! ஐயோ! இக்கொடிய பாதகர்கள் கையிற் படுமுன் என் னுயிரையாவது மாய்த்துக்கொண்டிருக்கலாகாதா நான்! ஐயோ பாதகர்களே! சண்டாளர்களே! என்னை சீக்கிரம் கொன்று விடுங்கள்! எத்தனை நேரம் நானிவ்வேதனையை சகிப்பேன்! என் ஐம்பொறிகளும் கலங்குகின்றனவே? ஆ! யார் விதி யாரை விட்டது! கடவுளே! கடவுளே!! என்னைக் கைவிட்டீரோ! ஓ! ஈசன் ஒருவனிருக்கின்றானோ? இருந்தால் ஏன் நான் இக்கதிக்கு ஆளாக்கப் பட்டிருக்க வேண்டும்? நான் புத்தி அறிந்தது முதல் பிறருக்கு ஒரு தீங்கும் செய்ததுமில்லை, நினைத்ததுமில்லை.—ஆ! ஆ! செய்தேன்! செய்தேன்? அச்சண்டாளன் வசந்தன் வார்த்தையைக் கேட்டு அழகாநந்தனைக் கொல்லப் பார்த்தேன்? என் புத்திரியாகிய தாரணியல்லவோ அவனை காப்பாற்றினள். அவனை துரோகம் நினைத்த காரணம் தான் நான் இக்கெதி அனுபவிக்கின்றேன். ஐயோ? என் மனமும் ஒரு வழியில்லாது பெருஞ்சுழல் மத்தியிலகப்பட்ட துரும்பைப் போல் தத்தளிக்கின்றதே.

டமார. அடே? அவன் பேசுறது பெரிய ஒலக்கடமாயிருக்குதே.

பல். அவன் அழுவுறாண்டா.

பண. ஆமாம் பாவம்.

பிர. தாரணி நான் இன்னும் ஏன் வரவில்லை யென்று தேடுவாள். என்ன செய்வேன். நான் இக்கதிக்கு வரவேண்டுமோ? ஐயோ? இதைவிட கேடான கெதி ஒருவனுக்கு வாய்க்கப் போகின்றதோ? இதெல்லாம் முன் வினைப்பயனோ? அடே



பாவிகளே! யமகிங்கரர்களே! என்னை கொன்று விடுங்கள்! என் கண்மணியே! என்னை மேம்படுத்த வந்த என்னருஞ் செல்வமே! தாரணி! நான் இறக்க வேண்டியதாயிருக்கின்றதே! என் கண்ணே! நான் இறந்த பின் யாரை அப்பாவென்றழைக்கப் போகின்றாய்? நான் இறந்ததை யறிந்தால் நீயும் இறப்பா யென்பது நிச்சயம். ஐயோ! என் மனம் குழல்கின்றது! ஒன்றும் தோற்ற வில்லையே! என் கண் பஞ்சடைகின்றதே! ஆ! கண்ணே தாரணி!

அருவம், அழகாநந்தன், சத்தியசீலர், சூரசேனன் வருகிறார்கள்.

அழ. அந்தோ பேதை அருவமே! இன்னும் எங்கே அழைத்துச் செல்கிறாய்?

சத். இது ஓர் அடர்ந்த பயங்கரமான காடு!

சூர. கண்பரே! நில்லுங்கள்! [அருவம் மறைகின்றது]

அழ. அருவம் மறைந்தது! [பிரதாப சந்திரனைப் பார்த்து] ஆ ஹா! இதென்ன! இதற்காகத்தான் அழைத்து வந்தது போலும். ஐயோ! இதென்ன கொடுமை! என்ன கண்களை மூடிக்கொண்டிருக்கின்றான்? இறந்து விட்டானோ என்ன? இல்லை, மெய் மறந்தான் போலும்! இவனை நாம் எங்கேயோ பார்த்தகியாபக மாயிருக்கின்றது— ஓ! இவர் பிரதாப சந்திர மகாராஜா வாயிற்றே! சத்தியசீலரே! எல்லோரும் வாருங்கள் [விடுவிக்கின்றார்கள்.]

வய. அடே! கொழுத்த ஆசாமிங்கடா!

தோப். ஆமா! ஆமா!!

டமார. சட்டி, கத்தி யெல்லாம் யிருக்குதா?

பண. டேய்பல்லா! போய் எடுத்துகினு வாடா!

பல். [தாரை ஊதுகிறான்] எஜமான்கோ வரட்டும்.

கால. அதோ வாராரு அவரு கூட.

வய. மூணு பேரும் நல்ல கொழுத்த ஆசாமிங்கோ தான்! நம்ப சண்டே போட முடியுமா [காலபாசன் வருகிறான்.]

கால்பா. அடேய்! எல்லோரும் ஒதுங்கி நடப்பதை கேட்டிருங்கள்.

பிர. ஓ ஓ ! இறக்கும் காலம் வந்து விட்டது ! அடேய் ! கள்வர்களே ! என்னை இம்சியாது ஒரே வெட்டாய் வெட்டி விடுங்கள். உங்களை நான் மிகவும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

அழ. ஐயோ பாவம் ! நாம் அவரைக் கொல்ல வந்திருக்கின்றதாக எண்ணிக் கூறுகின்றார் போலும். பிரதாபசந்திர ராஜனே ! நான் உம்மை கொல்ல வரவில்லை, கண் விழித்துப் பாரும்.

பிர. ஆ ! உம்மைத் தேடி வந்து அனுபவிக்கின்றேன் இக்கதியை ! [ மூர்ச்சிக்கின்றார். ]

அழகாநந்தனை கள்வர்கள் சூழ்ந்துக் கொள்ளுகிறார்கள். [அழகாநந்தன் காலபாசனை மூர்ச்சிக்கும்படி செய்கின்றான்]

வய. அடேடே வந்துடுங்கடா ! வந்துடுங்கடா !! இன்னும் இங்கேயிருந்தா சத்துப் பூடுவோம். நம்ப எஜமான்கோ கூட விழுந்துட்டாரு.

காலபா. [ மெதுவாய்எழுந்து ] அடே பசங்களா ! எங்கே ஓடுகின்றீர்கள் ? நில்லுங்கள் ! நில்லுங்கள் !! அடே கழுதைகளே ! வெட்கமில்லையா உங்களுக்கு ஓடிப்போக ? ஆற்லேயும் சாவு நாற்லேயும் சாவு ! அவர்களை பிடித்துக் கொல்லுங்கள்.

தோப். ஆமா ! ஆமா !! ஒரு கை பார்ப்போம்டா ! உடாதே அந்தப் பசங்களே ! [ சண்டை செய்கிறார்கள். ]

[ சூரசேனன், சத்தியசீலர், அழகாநந்தன் எல்லோரும் சேர்ந்துதிருடர்களை அடிக்கிறார்கள். ]

பன. அடேடே ! நம்ப எஜமான் குலோசாய் பூட்டாரு.

பல். ஓடி வந்துடுங்கடா ! நம்பளாலே முடியாது !

[ வயத்தான் தவிர எல்லோரும் ஓடி விடுகிறார்கள் ]

சூர. சத்தியசீலரே ! இவன் வயற்றைப் பாருங்கள் !

வய. சாமிகளே ! என்னெ உட்டுடுங்கோ ! என்னெ கொல்றதாயிருந்தா, செத்து போறத்துக்கு முன்னே, ஒரு குடுவே கள்ளுவாங்கி குடுங்கோ அதே குடிச்சுட்டு சேத்து போறேன்,



அழ. சூரசேனா ! அவனை விட்டு விடு.

[ பிரதாபசந்திரன் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கின்றான் ]

பிரதாபசந்திரமகாராஜா ! இங்கு எப்படி வந்தீர்கள்.

பிர. அப்பா ! நாம் அரண்மனைக்குச் சென்ற பிறகு எல்லாவற்றையும் தெரிவிக்கின்றேன். வாருங்கள் போகலாம்.

---

## ACT 3, Scene 1.

இடம் — அந்தப்புறத்தில் சத்தியவதியின் அறை.

வசந்தன் வருகிறான்.

வச. ஹா ! இன்னொரு முறை ஒரு கை பார்ப்போம் ! இதிலேயும் முடியா விட்டால் வேறு ஏதாவது யோசனை செய்வோம். இந்த சத்தியசீலன் மாத்திரம் என்னை ஏதோ சந்தேகிக்கின்றான் போலும். சீச்சீ ! இவனெனக்கு எம்மாத்திரம் ? இவனையும் என் தமயனைப்போல் எப்படி யாவது முடித்து விட வேண்டும். வசந்தனுடைய வல்லமை அளவற்றதென்று உலகம் புகழும்படி செய்யாவிட்டால் என் பெயர் வசந்தனன்று. இனி நான் அரைக்ஷணம் சும்மாயிருக்கலாகாது நடக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி யோசிக்க வேண்டும். எப்பொழுது இந்த இராஜ்யம் என்னுடைய கைக்குட்பட்டு விட்டதோ, அப்பொழுதே அவளெனக்கு அடிமையாய் விட்டாளன்றோ ? அது ஏன் அவளுக்கு தெரியாமலிருக்கின்றது. அவள் இங்கு வந்தவுடன் இன்னொரு தடவை நயமாய் கேட்டுப் பார்ப்போம் என்ன சொல்லுகின்றாளென்று. அதோ வருகின்றாள்.

சத்தியவதி வருகின்றாள்.

சத்தியவதி ! நான் விவாகம் செய்துகொள்வதாக தீர்மானித்து விட்டேனே அது உனக்கு தெரியுமா ?

சத்தி. அப்பா, மிகவும் சந்தோஷம். என் அழகாநந்தன் இன்னும் வரவில்லை ?

வச. எல்லாம் வந்து விடுவான். என்னுடைய விவாகத்தைப்பற்றி உனக்கொன்றும் தெரியாதா ?

சத்தி. நீ சொன்ன பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

வச. நீ எனக்கு அனேக உதவிகள் செய்ய வேண்டும்.

சத்தி. என்ன அப்படி யுரைக்கின்றாய் ? என்னாலான உதவி செய்யமாட்டேனா உனக்கு ?

வச. உன் உதவியின்றி நான் எப்படி விவாகம் செய்துக் கொள்ள முடியும். எப்படியாவது உன்னிடமே விவாகஞ் செய்துக் கொள்ளப் போகிறேன். அதற்குச் சந்தேக மில்லை.

சத்தி. அப்பா, உனக்கு நடக்கும் நற்காரியத்தை என் கண்ணால் பாராமல் யிருப்பேனோ ? - அதிருக்கட்டும், யாருடைய பெண் ? அவள் பெயரென்ன ?

வச. உனக்கு சமானமாய் இருப்பவள் — உம் - அதிருக்கட்டும் — அந்த பெண்மணியின் பெயரை யல்லவோ கேட்டாய் ? அவளுடைய பெயரும் உன்னுடைய பெயரே ! உன்னைப் பார்த்தால் அவளைப் பார்க்கவேண்டியதே இல்லை. ஒரு சமயம் யாராவது அக்கன்னிகையைப் பார் பார்களாகில் நீ யென்றே சொல்லுவார்கள்.

சத்தி. அப்படியா ! ஆனால் அவள் எங்கிருக்கின்றாள் ? நான் அவளைப் பார்க்கலாமோ ?

வச. மின்னல் கொடியைப் போற் இந்த அறையிற் இப்பொழுது இருக்கின்றாளே — எனக்கு முன்பாக — அவள் தான்.

சத்தி [திகைத்து] என்ன அடேமூடா ! முன்னொரு தடவை புத்தி வரும்படி செய்தது போதாதா ! சீ ! சண்டாளா ! என் முன் நில்லாதே. ஆ ! அழகாநந்தா ! எங்கிருக்கின்றாய் ? அடே பாபி நீ தான் ஏதோ சூது செய்திருக்கின்றாய். எனக்குத் தெரியும். ஐயோ ! சத்தியசீலரும் இங்கு வருவதில்லை, என் செய்வேன்!

வச. சத்தியவதி, நான் சொல்லியதில் தவறொன்று மில்லையே. சிறுவயது முதல் உன்மீது நான் காதல் கொண்டிருக்கின்றது உனக்கு தெரியாதா ? தற்செயலாய் என் அண்ணனை மணந்தாய், அவனும் இறந்தான். இனி உனக்கென்ன தடை?



சத்தி. அடே பாவி இந்த வார்த்தை உனக்குத் தகுமோ ? சகோதரன் மனைவியை கைப்பற்ற நினைப்பது தர்மமா ? இந்தஎண்ணத்தை விட்டு விடு.

வச. நீ அவ்வாறு சொல்லாதே. எவ்விஷயத்திலும் உனக்குச் சமானமானவன் நான் தான். உன் வயதை பாழாக்காதே வீணில். நான் சொல்வதைக் கேள். எனக்கு வாழ்க்கை படுவதாக ஒரு வார்த்தை சொல்.

சத்தி. சீ ! உன் முகத்தைப் பார்த்தலும் தவறு.

வச. [போக பிரயத்தனிக்க அவளை தடுத்து] கண்ணே ! என்னைத் தனியாய் விட்டுச் செல்வது உனக்குத் தர்மமா ? பாவிமாரன் என்னை மிகவும் வருத்துகின்றான் ? எனதுயிர் உன்னிட மிருக்கின்றது. நீ தான் என்னை ஈடேற்ற வேண்டும். கண்மணி, பெண்பாக்கிய மில்லாத நான் இப்புவியில் இருந்தென்ன பயன் ? எப்படியும் இறக்க வேண்டியது தான் ; கண்மணி, நான் இறப்பேனாகில் அப்பழி யாரைச் சேரும் ? உன்னை யன்றோ சேரும்.

சத்தி. அடே சண்டாளா ! உன் தர்ம சாஸ்திரங்களை என்னிடம் படிக்க வேண்டாம்.

வச. கண்ணே, என் மனதை இவ்வாறு வருத்துவது உனக்கு நியாயமோ ? சித்தஜன் என்னைப் பகைத்து, புஷ்ப பாணங்களால் என் ஆகத்தை யெல்லாம் சல்லடைக் கண்களாகத் துளைக்கின்றான். பகைவன் இப்படி என்னை வருத்தும்பொழுது நீ சும்மா விருப்பது நியாயமோ ! இன்னும் சற்றுநேரம் சும்மா இருப்பாயே யானால் மதன் என்னுயிரைக் கொண்டு போவான், காதற் கிளியே, இனித் தாமதிக்கலாகாது, கண்மணி ! என்னசொல்லுகின்றாய் ?

சத்தி. அடாபாபி ! இந்த வார்த்தைகளை என் காதில்போடுவது உனக்கு தர்மநீதியோ ! அடே சண்டாளா ! என்ன கெட்ட எண்ணமுள்ளவன் நீ ? நான் தனியாய் அகப்பட்டுக் கொண்டேனென்று என்னை நிர்ப்பந்திக்கின்றாயோ ? வேண்டாம். ஜாக்கிரதை !

வச. என் கண்மணி, இன்று நீ என்னாசையைப் பூர்த்தி செய்தாலொழிய உன்னை நான் விடப்போகிறதில்லை. இனி தாள

மாட்டேன். கண்ணே! சத்தியவதி! ஏன் யோசிக்கின்றாய்? கருணை செய்யலாகாதா!

சத்தி. சீச்சீ! துரோகி! போ என்முன் நில்லாதே.

வச. என் கனிரசமே! நான் உன்னை விடப்போகிறதில்லை என் னாசை தீர ஒருமுத்தம் கொடுக்கமாட்டாயா? [முத்தமிட அருகில் செல்லுகின்றான்.]

சத்தி. சீ! சண்டாளா! தூர நில் - ஐயோ! சத்தியசீலரே! அழகாநந்தா! தெய்வமே! நான் ஏன் இவ்விடத்திற்கு வந்தேன். அடா துரோகி! வேண்டாம் மரியாதை தவறுகிறது! வழி விடுகின்றாயா இல்லையா? அடே பாவி உன்னை சிறைபிடிக்கும்படி செய்வேன். ஜாக்கிரதை.

வச. சத்தியவதி! என்ன சொல்லினை! என்ன சொல்லினை!! என்னையோ சிறையிடப் போகின்றாய் நீ? உன்னுடைய அகங்காரத்தை யெல்லாம் அரைக்ஷணத்தில் அடக்குகிறேன் பார்! - நீ யிருக்கும் ஸ்திதியைப் பார்த்து நான் பரிதாபப்பட்டு உன்னை காதலிக்க, உனக்கு இவ்வளவு கர்வம் எங்கிருந்து வந்ததென்று அறிகிலேன். உன்னை அடக்கும் விதத்திலடக்குகின்றேன்! இந்தக்ஷணமே உன்னைச்சிறையிடுகின்றேன் பார்! உன்னு கர்வத்தை யடக்கி உன்னை நான் சிவாகஞ்செய்து கொள்ளாவிட்டால் என் பெயர் வசந்தனன்று [திரும்பி] அடே யாரங்கே! [இரண்டு வீரர்கள் வருகிறார்கள்] வீரர்களே! ஜாக்கிரதையாய் ஒருவரும் அறியா தப்படி இவளைக் கொண்டுபோய் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட காராக்கிருஹத்தில் அடைத்து வையுங்கள். தெரிந்ததா? இவ்விஷயம் யாருக்காவது தெரியப்போகின்றது. தெரிந்தால் உங்கள் தலை உங்கள் உடலில் இருக்கமாட்டாதென்றறியுங்கள். சரி, போங்கள்.

சே.வி. அம்மணி, வாருங்கள் போவோம்.

சத்தி. அடே! என்ன இது? என்னை யாரென்று அறியீர்களா?

வச. சீ! இனி ஒரு வார்த்தை பேசுவாயாகில் உன் உயிர் போய்விடும். ஜாக்கிரதை! பேசாமல் நட -

சத்தி. ஆ! விதியே! விதியே!! [அழைத்து செல்கிறார்கள்.]



வச. சீச்சீ - என்ன கொடியவன் யான்! - என்ன மதியற்றவனாயிருக்கின்றேன். — இப்பொழுது பச்சாத் தாபப் படலாகாது. இனி கஷ்டமில்லாமல் இவளை வசப் படுத்திக் கொள்ளலாம். இனி நடக்கவேண்டிய விஷயத்தை குறித்து யோசிப்போம். [போகின்றான்.]

---

## ACT 3, Scene 2.

இடம் — சிறைச்சாலை.

சத்தியவதி அழுதவண்ணமாயிருக்கிறாள்.

சத்தி. ஐயோ! ஆஹா! தெய்வமே இந்த அநியாயம் எங்கே நடக்கும். ஐயோ என் கண்மணி அழகாநந்தனில்லாமல் இவ்வரண்மனை பாழாய்ப் போயினவே! இச் சண்டாளன் என்னை இக்கெதிக்குகொண்டு வந்து விட்டானே. அடா பாவி! என் பிராணநாதர் இறக்கும் பொழுது என்ன நேரிடினும் அழகாநந்தனை ஒரு பொழுதும் கை விடேனென்று வாக்களித்து, என்னையும் பெண்டாள பார்த்தானே. ஐயோ! அழகாநந்தனை அப்பொழுதே சண்டைக்கு செல்லவேண்டாமென்று கட்டாயப்படுத்தாமற் போய்விட்டேனே! ஒரு வேளை என் குமாரனை கொன்றானோ? நிச்சயமாய் அப்பாதகன் அவனைக் கொன்றுதான் இருக்கவேண்டும் இல்லா விட்டால் என்னை இக்கெதிக்கு கொண்டு வருவானோ? அப்படித் தான் இருக்கும். ஐயோ! தெய்வமே! நான் ஒருவருக்கும் ஒரு விதமான உபத்திரவம் இதுவரையில் நான் செய்யவில்லையே! எங்களை இப்படி பங்கப்படுத்த எண்ணங் கொண்ட துஷ்டர்களை சிக்ஷிக்க மாட்டாயோ! ஐயோ! எங்களைப் போன்ற துர்பாக்யமுள்ளவரிருக்கிறார்களோ இவ்வுலகில்! என்னைப் பார்த்தும் பரிதாபப் படுகிறவர்கள் கூட ஒருவருமில்லையே! நான் எவருடன் என் குறைகளைச் சொல்வது? இந்த சத்திய சீலர் எங்கு சென்றாரோ தெரியவில்லை? ஒரு வேளை அழகாநந்தன் இறந்ததைப் பற்றி என்னிடங் கூறினால் நான் மறிப்பேனென்று வராமலிருக் கின்றாரோ?

தெய்வமே ! தெய்வமே !! என் நெஞ்சம் எரிகின்றதே ! ஆ ! தெய்வமே ! எங்களுக்கேன் இந்தவிதி விதித்தாய் ? அடா பாதகா ! என்னையும் கொன்று விட்டிருக்கலாகாதா ? ஐயோ ! இந்தச் சிறையிற் கிடந்து ஊண் உறக்கம் ஒன்றும் இல்லாமல் சோருகின்றேனே, ஆ ! தெய்வமே ! என்ன செய்வேன். [ மூர்ச்சையடைகின்ருள். ]

நீலகண்டர், சூரசேனன், இரண்டு வீரர்கள் பேசியவண்ணம் வருகிருர்கள்.

1.வீரன். என்ன நீலகண்டரே ! நம்ப அரண்மனையில் என்ன விசேஷம் ?

நீல. ஐயோ ! கஷ்டகாலம் ! ஒரு பெரிய வேடிக்கை நடந்திருக்கின்றது.

2.வீரன். கஷ்டகாலமா ? அதிருக்கட்டும், என்ன வேடிக்கை ? ஐயா நீலகண்டரே ! தாம் உரைப்பது எங்களுக்கொன்றும் புலப்பட வில்லையே ! தம்முடைய முகத்தையும் சேனாதிபதி அவர்களுடையமுகத்தையுங் காணும்பொழுதே ஏதோ பெரும் பிரமாதமொன்று நேரிட்டிருப்பதாய் விளங்குகின்றது !

சூர. ஆஹா ! என் பிரியநேசனே ! என் செய்வேன் ! [ தனக்குள் ] உம் — சத்தியசீலர் வந்தபிறகு தான் உண்மைத்தெரிந்துக் கொள்ளக் கூடும்.

சத்தி. [ மூர்ச்சை தெளிந்து எழுந்து ] என் கண்மணி !, அழகானந்தா ! ஆஹா இதோ யாரோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஆ ! நீலகண்டரே ! சூரசேனா ! என்நெஞ்சம் எரிகின்றதே !

எல்லோரும். [ திரும்பிப் பார்த்து ] எப்படி ! எப்படி !!

சூர. ஆஹா ! அம்மணி ! என்ன ! என்ன !! எப்படி ! என்ன கொடுமை ! என்ன கொடுமை !! நீலகண்டரே ! என்ன அநியாயம் !

நீல. என்ன சூரசேனரே ! உமக்கு இப்பொழுது தான் தெரியுமோ ? அதற்காகதான் உங்களை யிங்குஅழைத்துக்கொண்டு வந்தது.

1,வீரன். என்ன ஆச்சரியம் !

2வீரன். என்ன கொடுமை!



சூர. நீலகண்டரே ! நேற்று நீர் சொல்லிய காரணம் தானா ?

நீல. ஆம் ! ஆம் !! — அம்மணி ! அம்மணி ! !

சத்தி. அப்பா சூரசேனா ! எங்கே அழகானந்தன் ?

சூர. அம்மணி —

சத்தி. ஏன் மயங்குகின்றீர்கள் ? ஹா புத்திரா ! உன்னைப் பறிகொடுத்தும் யான் உயிருடனிருக்கின்றேனே !

சூர. அம்மணி ! பயப்படவேண்டாம் ! சத்தியசீலர் வந்த பிறகு தான் உண்மையைத் தெரிந்துக் கொள்ளக்கூடும், பயப்படாதீர்.

சத்தி. ஆஹா ! சண்டாளன் என்ன செய்தானே என் குமாரனை ? என்னையும் இச்சிறைச்சாலையிலடைக்கத் துணிந்தானே பாதகன். [ மூர்ச்சையாகிருள். ]

சூர. ஐயோ ! தர்மமென்பதே போய்விட்டதே ! இனி இருள்மூடிவிடும் ! உலகம் அழிந்து விடும் ! இப்படிப்பட்ட உத்தமிக்கே இக்கெதி நேரிடில் ஹா ! — [ பெருமூச்செறிதல் ] நீலகண்டரே ! என்ன விந்தை ! என்ன அநியாயம் ! — நம் மிளவரசருக்கும், தேவியாருக்கும் தீங்கிழைத்தவனை நான் இக்கணமே அவனைக் கொன்று பழி தீர்க்கின்றேன். அன்றேன் என் உயிரை மாய்த்துக் கொண்டு அவருக்குத் துணையாய் விண்ணுலகம் செல்கின்றேன்.

நீல. அவசரப்படுகின்றீர்களே ! இது பற்றியே யான் தனியாயிருக்கவேண்டுமென்பது.

1 வீர. எதற்கும் நாம் அஞ்சலாகாது ! இப்படிப்பட்ட காரியத்தைச் செய்த கொலைபாதகனை நாங்கள் துண்டம் துண்டமாய் வெட்டி விட்டுத்தான் வீட்டிற்குட் செல்வோம்.

நீல. ஐயோ ! பேதையர்காள் ! ஏனிந்த வீண்சபலம் ? பொல்லா தராஜாஞ்யைக் குள்ளாவீர்கள் ! சத்தியசீலர் வந்த பிறகு எல்லாவற்றையும் யோசிப்போம்.

2வீர. அப்படிபட்ட இளவரசரே சாகும்பொழுது ராஜாஞ்யை எங்களை என்ன செய்யும் ?

1 வீர.. அதிருக்கட்டும் ; இத்தீய தொழில்களை எல்லாம் யார்செய்தது ?

2 வீர. நம்து மஹாராஜாதான். பிறகு யார் செய்யக்கூடும்.

சூர. நண்பர்காள்! இதுவே நம்முடைய முதற் கடமை. இப்பழியை தீர்த்தால் தான் நாம் உஜ்ஜியனி மஹாராஜருடைய ருணத்தைத் தீர்த்துக் கொள்ளலாம். அவர் உயிருடனிருக்கும் பொழுது நமக்குச் செய்த நன்மைகள் நம்மால் கணக்கிடமுடியுமா! இத்துரோகி துராங்காரமாய் ராஜ்ஜியத்திற்கு வந்ததும் நியாயமே போய் விட்டது! களவும், கொலையும், கலவியுமே எங்கும் நிறைந்தன. ஆயினும் அதர்மம் இப்பொழுது விருத்தி யடைந்த போதிலும், அதற்கும் ஒரு காலத்தில் க்ஷீண தசைவரும்! ஆயினும் பொறுமையுடன் எதையுஞ் செய்யவேண்டும்.

2 வீர. இனியும் பொறுப்பதோ? இப்பொழுதே அப்பாதகனைக் கொன்று வருவோம். இக்கட்கத்தினால் அப்பாவியை இக்கணமே கண்டதுண்டஞ் செய்யவேண்டும்!

நீல. நண்பர்காள்! இது சரியன்று! சரியன்று!! வீணாய் நாங்களது பிராணனைத் துறக்கவேண்டிவரும்! எல்லாம் பொறுத்துச் செய்யுங்கள்!

சூர. எப்படி நாம் பொறுப்பது! இளவரசர் போயும் நாம் பிழைத்திருக்க வேண்டுமோ?

நீல. அதைப்பற்றி யான் சிந்திக்கவில்லையா? என் பிராணனைக் கொடுக்க நானும் சர்வசித்தனாயிருக்கின்றேன்! ஆயினும் சத்தியசீலர்வந்து எல்லா சமாசாரத்தையும் தெரிவித்த பிறகு பிரவேசிக்கவேண்டும்.

சூர. அடடா! பாவி! [சத்தியவதியை பார்த்து] என்ன கொடுஞ் செயலைப் புரிந்தாயடா? இன்னும் உன் தலை பூமியின் மீது விழவில்லையே!

நீல. பொறுங்கள்! பொறுங்கள்!! அதிருக்கட்டும், நமக்கெப்படி நிச்சயமாய்த் தெரியும் அழகாகந்தர் கொலையுண்டிறந்தாரென்று! இறந்திருப்பினும், அவரைக் கொன்றவன் இன்னானென்று நிச்சயித்தீர்களா? அவசரப்படுவதிற் பயனென்ன? இவையெல்லாம் முற்றிலுந் தெரிந்து கொண்டாலல்லவோ இவ்வித காரியத்திற் பிரவேசிக்க வேண்டும். இவற்றையெல்லாம் கண்ணாற் கண்டவர் இங்கு எவராயினு



முளரோ? வெளியிற் போகிறவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு நாம் ஆத்திரப்படலாமோ? எல்லாம் சத்தியசீலர் வரட்டும்.

சூர. சத்தியவதியம்மாளை இக்கோலங்கண்ட படுபாவிதான் அதையும் செய்திருப்பான்.

நீல. பொறுங்கள், எல்லாம் பார்ப்போம்.

சத்தி. ஆ! சூரசேனா? சத்தியசீலர் வந்தனரோ?

நீல. இன்னும் வரவில்லை அம்மணி!—நண்பரே! எதைச் செய்தாலும் நிதானித்துச் செய்யவேண்டும்! எது எவ்வழியாய்ச் செய்தாற் பயன்படுமோ அதையறிந்து செய்வதன்றோ நன்மையை விளைக்கும்!

சூர. உடனே செய்தாலன்றோ எதுவும் பயன்படும்?

நீல. அதோ பார்! அங்கே யார் வருவது?

சத்தியசீலர் வருகின்றார்.

சூர. சத்தியசீலர்தான் வருகின்றார்.

சத். இளவரசர் சுகமாய் யிருக்கின்றார், சூரசேனரே! இளவரசருக்கு வந்த இரண்டாவது கண்டத்தையும் ஈசன் செயலால் தப்பிப் பிழைத்தார்.

சூர. சத்தியசீலரே! நீங்கள் தான் இத்தருணம் தேவியாரைக் காப்பாற்ற வேண்டும்.

சத். [சிறைச்சாலையைப் பார்த்து] ஆஹா! இதென்ன பரிதாபம்! நான் நினைத்தது போலவே செய்தான் பாவி! தெரியும் எனக்கு.

சத்தி. [எழுந்து] ஆ! சத்தியசீலரே! ஐயோ உமக்கு இப்பொழுது தான் இரக்கம் வந்ததோ! நான் ஆகாரமின்றி அச்சண்டாளன் செய்த வஞ்சனையினால் இச்சிறை யிலிருக்கின்றேனே. என் பிராணநாதர் இறக்கும் பொழுது என்குமாரனை உமது கையிற் ஒப்பிவித்து சென்றாரே! அதையும் மறந்தீரா? எங்கே அழகாகந்தன்?

சத். அம்மணி! அதைப்பற்றித் தான் சொல்வதற்குத் தங்களிடம் வந்தேன். தாங்கள் இக்கதியிலிருக்க இப்பாழும் கண்கள் இதைப்பார்க்க என்ன பாபம் செய்தனவோ! — ஒரு

நான் நமது இளவரசர் தாராநகரத்தை சுற்றிவரும்பொழுது அங்கே இரண்டு கிங்கரர்கள்! வசந்தமஹாராஜாவினுடைய உத்தரவைக் காட்டி நம்மிளவரசரைப் பிடித்துக்கொண்டு செல்ல வந்தனராம்—

சத்தி. பிறகு கொண்டுபோய் கொன்றுவிட்டனரோ?

சத். அம்மணி! ஏனிப்படி அமங்கலமான வார்த்தைகளை யுரைக்கின்றீர்கள்! இளவரசர் க்ஷேமமா யிருக்கின்றனர். யாதொரு பயமுமில்லை.

சத்தி. அப்பா! என் வயிற்றில் பாலை வார்த்தனை! பிறகு என்ன நடந்தது?

சத். அக்கிங்கரர்களை அடித்து துரத்திவிட்டனராம். இப்பொழுது மிகவும் க்ஷேமமாய் யிருக்கிறாரென்று கேள்விப்பட்டேன்.

சத்தி. ஆனால் நீர் நேராய் பார்க்கவில்லையா?

சத். இல்லை; தாரா நகரத்து சேவகனால் கேள்விப்பட்டேன்.

1 வீர. அதிருக்கட்டும்; இப்பொழுது தேவியாருடைய கதி என்ன.

சத். கதியாவது! நாம் உடனே சென்று இளவரசருடன் தெரிவிக்கவேண்டும் இந்த சமாச்சாரத்தைக் குறித்து.

சூர. சரி; வாரும் போகலாம்.

சத்தி. ஐயோ! எல்லோரும் செல்லுகின்றீரா? இன்றிரவு என்னை மானபங்கம் செய்வதாகச் சொல்லிச் சென்றானே பாதகன்.

சூர. அம்மணீ! நீர் பயப்படாதீர்! இதோ இந்த இரண்டு வீரர்களும் இங்கிருப்பார்கள். நாங்கள் போய் இளவரசரை உடனே அழைத்து வருகின்றோம்.

சத்தி. நீங்கள்தான் என் செல்வனைக் காப்பாற்ற வேண்டும்.

சத். அம்மணி! அவருக்கு யாதொரு குறையுமில்லை இனி விட்டு விடுங்கள் கவலையை!

சத்தி. இப்பேருதவிக்கு யான் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்?



சூர. இது என்னுடைய கடமை! தாங்களிதைப் பற்றிச் சிறிதேனும் கவலைப்பட வேண்டியதில்லை. இன்னும் இரண்டொரு நாழிகைகளுள் அவனை விடுதலை செய்வது எங்கள் பாரம்.

சத். அம்மணி, நாங்கள் விடைபெற்றுக்கொள்ளுகின்றோம்.
[ இரண்டு வீரர்கள் தவிர எல்லோரும் போகிறார்கள். ]

1 வீர. அந்த பாவி இங்கு வந்தால் அப்பொழுது ஒரே அடியில் அவன் உயிரை மாய்க்கவேண்டும்.

2. வீர. அவனை குத்தி அவன் ரத்தத்தை ஊரெங்கும் தெளிக்கவேண்டும்.

1. வீர. அப்படிதான் செய்யவேண்டும்.

---

## ACT 3, Scene 3.

இடம்—ராஜவீதி

சாரங்கன் வருகின்றான்.

சார. போச்சி! போச்சி!! பூட்டுது! பூட்டுது!! சந்தேகமில்லை!

ஒரு சோம்பேறி வருகிறான்

சோம். சந்தேகமில்லை!

சார. கொஞ்சம் கூட சந்தேகமில்லை!

சோம். சந்தேகமில்லையா இன்னு!

சார. கொஞ்சம்கூட சந்தேகமே யில்லை! பூட்டுது! பூட்டுது!!

சோம். ஆமாமையா, சந்தேகமே யில்லை! புடிச்சுக்கோ! புடிச்சுக்கோ!! [ பிடித்துக்கொண்டு சாரங்கன் மடியைத் தடவிப்பார்க்கின்றான்.

சார. எதற்காக சந்தேகமில்லை?

சோம். ஆ! ஆ!! அத்தெ தான் உங்களெக் கேக்கணு மின்னு இருந்தேன் என்னத்துக்குச் சந்தேகமில்லை?

சார. நீ எதற்கு என் மடியை தடவிப் பார்க்கின்றாய்?

சோம். இன்னமோ பூட்டுறது சொன்னிங்களே, அதைத்தான் தேடிப்பார்த்தேன்.

சார. உலகங் கெட்டுப் போச்சையா இன்றேன்!

சோம். கேட்கணுமா! அப்போவே உலகம் கெட்டு போச்சி நீயும் கெட்டுப்பூட்டே!

சார. ஐயா, ஒருசயாச்சாரம் செல்றேன், உலகம் கெட்டுப்போச்சு! கெட்டுப்போச்சு!! உலகம்; போச்சுது உலகம் கெட்டு! பூட்டுது! பூட்டுது!! பூட்டுது!!!

சோம். பூட்டுது! பூட்டுது!! பூட்டுது!!! அதோ வருது! வருது!! வருது!!!

சார. ஐயோ! வெள்ளிக்காப்பு! — ஒரு சயாச்சாரம்; தாங்கள் யார்? இருப்பிடம் எங்கே!

சோம். அடடா! நீங்களா? அண்ணு! அண்ணு!! அண்ணு!!! [அவனைத் தழுவிக் கட்டிக்கொண்டு] இத்தனை நாழி தெரியாதே போச்சே! என்னை மறைந்துப் பூட்டையா என்ன! அண்ணு! எல்லோரும் வீட்டிலே க்ஷேமந்தானே? அண்ணியம்மா என்னமாயிருக்குறுங்கோ? [படியில் கையைப் போட்டு துட்டுகளை எடுத்துக்கொள்ளுகின்றான்.]

சார. அப்பா! என்னை விட்டுவிடு! எனக்குத் தம்பி ஒருவனுமில்லையே!

சோம். இதுகுள்ளேவா மறந்து பூட்டிங்கோ? ஐ ஐயோ! நான் உன் தம்பியாச்சே!

சார. என்ன தம்பி! எப்படி எனக் குறவு? தெரியிலேயே! [யோசித்து] ஓ ஓ ஓ! தெரியுது! தெரியுது!!

சோம். உம் — அப்படி சொல்லுங்களண்ணே!

சார. ஒருவேளை முன்பு அட்சய வருஷத்துக்கருப்பில் எளியவர்க்கெல்லாம் ஆயிரம் ஆயிரமாகத் தானம் கொடுத்தேனே, அப்பொழுது எளியவர்களெல்லாம என்னை அண்ணு அண்ணு வென்று கூப்பிடுவது வழக்கம். இப்பொழுது என்னை அடையாளம் கண்டுபிடிக்க கஷ்டமாயில்லை?



சோம். ஆமாம் அண்ணே! [பக்கமாய்] சரி; வந்த வேலை முடிச்சிகினேன். நேரா கள்ளுக்கடைக்கு தான் போவணும்.

சார. அப்பா! இப்படி வா! எவனாவது ஒரு ஜோசியன் இங்கேயிருந்தா கூப்பிட்டுக்கொண்டு வாயேன்.

சோம். இன்னுத்துக்கு அண்ணே?

சார. இல்லை, ஒரு ஜோசியம் கேட்கவேண்டும்; பத்து வருடங்களுக்கு முன் ஒரு ஜோசியர் சீக்கிரம் எனக்கு எண்பதுகோடி பொன் புதையில் கிடைக்குமென்று கூறிவிட்டுப் போனார். இன்னும் கிடைக்கவில்லை. அத்துடன் ஓர் சந்நியாசியினிடத்தில் வெள்ளிக்காப்பு ஒன்று கொடுத்தேன். அதை அவர் பொன்னுக்கிக் கொண்டு வருகிறேனென்று சொல்லிச் சென்றார். அவரும் திரும்பி வரவில்லை. இதையெல்லாம் கேட்க வேண்டும்.

சோம். அப்படியே கேளுங்களண்ணே. நான் போயி விட்டேனு, திரும்பியும் வராதே போரேன்.

சூரசேனன், சத்தியசீலர், நீலகண்டன் வருகின்றார்கள்.

சத். — சூரசேனரே! இச்சண்டாளன் ஏவிய கொலையாட்கள், தாம் வசந்தனுக்கு வாக்குக்கொடுத்தபடி ஒரு கிருத்திமத்தலையை இளவரசருடைய தென்று காட்டிவிட்டு, இளவரசரைக் கொன்றுவிட்டதாகவே இராஜனுக்கு மெய்ப்பித்து விட்டனன்! வசந்தனும் அதை மெய்யென்று நினைத்து இவ்விராஜ்யம் தனக்கு நிஷ்கண்டகமாய்க் கிடைத்து விட்டதென்று பெருமை பாராட்டி வருகின்றான்! இராஜகுமாரரென்னவோ க்ஷேமமாயிருக்கின்றார்!

சூர. இவையெல்லாம் பிரதாபசந்திரமஹாராஜாவிடம் தெரிவித்து எப்படியாயினும் இப்பாதகன் வசந்தன்மீது படையெடுத்து வரும்படி செய்ய வேண்டும்! அழகாகந்தர் வந்தபிறகு; நானும் இவ்விடத்திலிருந்து தகுந்த ஏற்பாடுகள் செய்து பிரஜைகளையெல்லாம் வசந்தனுக்கு விரோதமாய் எதிர்த்தெழும்படி செய்விக்கின்றேன்! இனியொரு நிமிஷமேனும் தாமதித் திருக்கலாகாது நாம் சீக்கிரம் செல்லவேண்டும்.

[போகிறார்கள்]

சார. ராஜாங்கத்தில் பெரிய கலகமா யிருக்கின்றது. என்னம்மா தெரியவில்லை. நான் சீக்கிரம் சொல்லவேண்டும் புதைகளைத் தேட. [மடியைத்தடவி பார்க்கின்றான்] அடடே! ரூபாயே காணோமே! இப்பொழுது வந்த திருட்டு, சோம்பேறி, தடிப்பயல் அடிகதுக் கொண்டுபோய்விட்டான்! பூட்டுது! பூட்டுது!! உலகம் கெட்டுப் போச்சு! [போகிறான்.]

---

## ACT 3, Scene 4.

இடம் — நந்தவனம்.

அழகானந்தன் மஞ்சத்தின்மீது சாய்ந்திருக்க,

தாரணி பக்கத்திலுட்கார்ந்து வெற்றிலை மடித்துக் கொடுக்கிறாள்.

தார. — பிராணநாதா, உங்களுக்குப் பேதையாகிய யான் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்.

அழ. எதற்காக என் கண்மணி ?

தார. என் தந்தையை திருடர்களிடமிருந்து காப்பாற்றினதற்கு!

அழ. அதற்காக என்ன கொடுக்கப்போகின்றாய் எனக்கு ?

தார. என்ன வேண்டும் உமக்கு ?

அழ. என்ன தருகின்றாய் எனக்கு ?

தார. [தன் முகத்தை மூடிக்கொண்டு] ஒரு முத்தம் தருவேன்!

அழ. அப்பா! உன் வாய்முத்தம் அவ்வளவு விலை உயர்ந்ததோ ?

தார. இல்லையோ, பிராணநாதா ?

அழ. ஆம்! ஆம்!! நீ கோபித்துக்கொள்ளாதே அம்மட்டும்.

தார. பிராணநாதா, வாரும் போய் விளையாடுவோம்.

அழ. எங்கே போய் விளையாடுவது.

தார. பிராணநாதா, தென்றலும் சுகந்தமும் மெல்லென வீசும் இவ் வழகிய பூஞ்சோலையில் — பிராணநாதா, இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு தனியாயிருக்க என்மனம் ஒப்புமா ? வாரும் போய் விளையாடலாம். அதோ பாரும், ஆங்



காங்கு புறாக்களும் இன்னும் அநேகவிதமான பறவைகளும் காதலருடன் நீர் நிரம்பிய தடாகங்களின் கரையோரங்களிலிருக்கும் செடிகளின்மீது குதித்து குதித்து விளையாடிக் கொண்டிருக்கின்றது. அதுகளைப் பார்த்தால் எனக்கு பொறுமையாயிருக்கின்றது.

அழ. என் கண்மணி! என்மனம் ஏதோ ஒரு மாதிரியாக இருக்கின்றது. இப்பொழுது விநோதத்தின் மீது செல்லவில்லை.

தார. ஆம்! நான் எப்பொழுது அழைத்தாலும் இப்படிதானே சொல்லுகின்றீர். ஆனால் சதுரங்கம் ஆடுவோம் வருகின்றீரா ? நீர் எத்தனையோ வீரர்களை ஜெயித்திருக்கின்றீரே என்னை ஜெயிங்கள் பார்ப்போம்.

அழ. கண்மணி உண்மை தான்! — ஆயினும் எனக்கிப் பொழுது அதன்மீது மனஞ் செல்லவில்லை.

தார. ஆனால் சஞ்சலத்தைப் போக்க சங்கீதத்திலும் பெரிதொன்றில்லை; நான் பாடுகின்றேன் கேட்கின்றீரா ?

அழ. இப்பொழுதுனக்கேன் இந்த கஷ்டம் ? இத்தனை நாழி சந்தோஷித்த என் மனமே இப்பொழுதேன் ஒரு வாறாயிருக்கின்றது ?

தார. ஆமாம் என் அவலக்ஷணமான குரலைக் கேட்பதற்கு இஷ்டமில்லை போலும். அதைச் சொல்லுவது தானே.

அழ. கண்ணே! அப்படி யொன்றுமில்லை; பாடுவாய் கேட்கின்றேன்.

தார. [பாடுகிறாள்.]

அழ. [முத்தம் கொடுத்து] கண்ணே! மிகவும் நன்றாயிருக்கின்றது. இதுவரையில் இவ்வாறு உற்சாகத்துடன் நீ என்றும் பாடியதில்லை!

தார. எப்படியாவது உமது மனம் சந்தோஷமடைந்தால் போதுமெனக்கு. சந்தோஷந்தானா ?

அழ. கேட்கவும் வேண்டுமா ?

தார. எனக்கென்ன பரிசு கொடுக்கின்றீர் ஆனால் !

அழ. பரிசா? என்னவேண்டு முனக்கு?

தார. எனக்கு வேண்டியதை கொடுக்க உம்மாலாகுமா என்னவோ?

அழ. ஆஹா! [முத்தம் கொடுத்து] இந்த பரிசுதானே வேண்டும்?

தார. [வெட்கமாய்] அதைத் தான் கேட்டேன்.

அழ. சந்தோஷம்.

தார. அதிருக்கட்டும்; என் தகப்பனாரும் நேற்று நகர்வலம் சுற்றிவர போய் வந்தீரே என்னசமாசாரம் நடந்தது? எல்லாம் சொன்னீரா என்னிடம்?

அழ. கண்ணே? உன்னிடம் என்ன சமாசாரம் சொல்வது? உனக்கென்ன தெரியும்.

தார. எனக்கொன்றும் தெரியாதோ? எல்லாம் தெரியும். என்னிடம் சொல்ல இஷ்டமில்லையென்று சொல்லுவதுதானே?

அழ. கண்ணே, உனக்கு என்னவேண்டு மென்றாலும் சொல்லுகிறேன். என்னவேண்டும்? நகர்வலம் வரும்பொழுது இரண்டு வீரர்களைக்கொன்றதைப்பற்றி சொல்லவா, அல்லது —

தார. அதுதான் எனக்குத்தெரியுமே. எப்பொழுது பார்த்தாலும் உங்களுக்குக் கொல்லுகிறதும் வெட்டுகிறதுந்தான். தூங்கும்பொழுது கூட யுத்தத்தைப் பற்றியே கனவு காண்கிறீர்கள், என்னைப்பற்றி எப்பொழுதாவது கனவு காண்கிறீர்களா? உம்! உம்!

அழ. என் கண்மணி! என்ன அறியாதவள் போற் பேசுகின்றாய்? உன்னை எப்பொழுதும் என் கண் முன்னே கண்டுக்கொண்டிருக்கின்றேனே போதாதா?

தார. அதிருக்கட்டும், அங்கெல்லாம் போயிருந்தீரே, அங்கு பெண்கள் ஏதாவது நூதனமாக ஆடையாபரணங்கள் அணிந்துக் கொண்டிருந்தார்களா? என்ன என்ன அணிந்திருந்தார்கள்? சொல்லும்.

அழ. கண்மணி, இது தானா எனக்கு வேலை? இவைகளைப் பார்க்கவோ நாங்கள் போயிருந்தோம்? வேறேதாவது கேட்கலா



காதா? கண்ணே, வேறெதையாவது கேள். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?

தார. ஆனால், போயிருந்தீரே எனக்கென்ன கொண்டு வந்தீர்கள்?

அழ. கொண்டு வந்ததை நான் சொன்னால் என்ன தருகின்றாய் எனக்கு?

தார. முன்பு சொன்னதே தான்.

அழ. முத்தம் கொடுப்பாயோ?

தார. ஆம் பிராணநாதா.

அழ. நான் என்ன கொண்டு வந்தேன்! உனக்காக என்னைத்தான் கொண்டு வந்தேன்!

தார. இவ்வளவு தானா, பிராணநாதா? [முகத்தை திருப்பிக்கொண்டு.]

அழ. கண்மணி உனக்கு என்னைப் பார்க்கிலும் வேறென்ன வேண்டும்? என் சிற்றப்பன் ஏவின துஷ்டர்கள் ஒருகால் என்னை கொன்றிருந்தால்?

தார. ஆம்! ஆம்!! உண்மையே [முத்தம் கொடுத்து] பிராணநாதா! இன்றிரவு என்ன ரம்மியமாயிருக்கின்றது கண்டீரா? ஐயோ, இன்று பூரணசந்திரனாயிருந்தால் இன்னும் எவ்வளவழகாயிருக்கும்.

அழ. கண்மணி, எனக்கு இதுதான் அழகாயிருக்கின்றது உன்னைக் காட்டிலும் பிரகாசமாய் இந்த நந்தனவனத்தில் பிரகாசிக்கும் வேறொரு மதியும் உண்டோ? கண்ணே! — [முத்தமிடுகின்றான்.]

பிரதாபசந்திரன் வருகின்றான்.

பிர. தாரணி! தாரணி!!

தார. பிராணநாதா! தந்தை அழைக்கின்றார் என்னை.

பிர. அப்பா! நான் இந்த சமயத்தில் இங்கு வந்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

அழ. அது வொன்றுங் குற்றமில்லை. நீங்கள் வந்தா லென்ன? என் முகம் ஒருவாறு யிருக்கின்றது.

பிர. என் முகம் வேறுபட்ட காரணத்தை உனக்கு அறிவிக்கவே இங்கு வந்தேன்! அடே யாரங்கே? [சேவகன் வருகின்றான்.] போய் அழைத்து வா அவர்களை!

அழ. இதெல்லாம் என்ன?

சூரசேனன், சத்தியசீலர், நீலகண்டர் வருகிறார்கள்.

சூர. ஆ! அரசே! [கண்ணீர் விடுகின்றான்.]

அழ. சூரசேனா! என்ன கண்ணீர் விடுகின்றாய்?

சூர. அரசே! நாவெழவில்லையே எனக்கு —

அழ. என்ன சமாசாரம்? — ஆஹா எதோ தீங்கு நேர்ந்திருக்கின்றது!

நீல. அரசே! என்ன தீங்கு? உமது தாயார் —

அழ. ஐயோ! தாயாருக்கு என்ன நேர்ந்தது?

நீல. ஆவசரப்படாதீர்; இரண்டு தினங்களாக ஆகாரமின்றி உமது தாயார் அப்பாவி வசந்தன் வஞ்சனையால் சிறையிலிருக்கின்றார்கள்.

அழ. என்ன! என்ன!! என்ன செய்தான்! ஆ! அடே பாவி! [மூர்ச்சையாக சூரசேனன் தாங்கிக் கொள்ளுகின்றான்].

பிர. என்ன ஆச்சரியம்! யாது காரணத்தால் இவ்வாறு கட்டளையிட்டான்?

நீல. என்ன காரணம்! பெண்டுக்கழைத்த காரணந்தான்.

அழ. ஆஹா! பெண்டுக்கு அழைத்தான்! சண்டாளா! சண்டாளா!! அடே! பழி வாங்குகின்றேன்! இதோ வந்துவிட்டேன்.

தார. தந்தையே! அந்த வசந்தன் செய்ததால்தானல்லவா! ப்ரோணநாதருக்கும், என் மாமியாருக்கும் என்ன என்ன தீங்குகள் செய்தான் பாவி!



அழ. நான் போய்வருகின்றேன், நீங்களெல்லோரும் கூட சீக்கிரம் வந்து சேரவேண்டும்.

சத். அரசே! நாளையதினம் சபைகூடுவதாக நேற்றியதினம் உத்தரவளித்திருக்கின்றான். ஆதலால் நாங்கள் சீக்கிரம் போய் அங்கு யிருந்தால்தான் நன்மை.

அழ. சரி; போய்வாருங்கள். இதோ நான் உங்களுக்கு முன்பாக அரண்மனையிற் சென்று என் வீரத்தை காட்டுகின்றேன். [எல்லோரும் போகிறார்கள்.]

---

## ACT 4, Scene 1.

இடம் — சிறைச்சாலை.

சத்தி. ஐயோ! தெய்வமே! எப்பொழுது காண்பேன் என் குமாரனை? அழகாநந்தா! அழகாநந்தா!! உம் - [யோசித்து] இவ்வுலகில் நடக்கும் விந்தையிலே விந்தைகள்! ஐயோ! இச்சிறையிலிருந்து எவ்வளவு தான் பொறுப்பது! ஹா! என் ஜென்மமே ஜென்மம்! இதற்கும் ஓர் அளவில்லையா! — ஆயினும் நான் என் பொருட்டு வருந்தவில்லை, என் விதி எனக்குச் சகஜமாய்விட்டது. ஐயோ! இதை அழகாநந்தன் கேள்வியுற்றால் என்ன வருந்துவானோ? அதைத் தான் பொறுக்கமுடியவில்லை. இன்று அப்பாதகன் வசந்தன் சிம்மாசனத்தின் மீது உட்காரப் போகின்றானாமே! ஐயோ! என் குமாரன் உட்காரவேண்டிய ஸ்தானத்தில், அச்சண்டாளன் உட்காரப்போகிறதை கேட்ட என் மனம் கலங்குகின்றதே! உம் - நாம் செய்தபாபம் அது! ஏன் இவர்கள் இன்னும் வரவில்லை! சுத்த வீரனாகிய அழகாநந்தன் இந்த அவமானத்தைக் கேட்டு பொறுக்கமாட்டானே! ஐயோ! எனக்கு வந்த அவமானத்தை அவன் நேரிற் கண்டால் அவன் மனம் எப்படியிருக்கும். அடே என் கண்ணே இதைக் கேட்டு கண்ணீர் விட்டனையோ! ஏன் இன்னும் வரவில்லை! பழிவாங்க ஏதாவது வகை தேடிக்கொண்டிருக்கிறானோ, — என் அநுமதியின்றி அவ்வண்ணம் ஒன்றும் செய்யான் —

கண்ணே! அழகானந்தா! ஈசனே! ஈசனே!! நான் எவ்வளவு தான் பொறுப்பேன்? —

இரண்டு காவற்காரர்கள் வருகிறார்கள்.

1. காவ. ஆமே! மாராஜா சொன்ன பிரகாரம் ஜாக்கிரதையா பாத்துக் கொண்ணிருக்கிறோம். அதோ மாராஜா கூட வாராங்கோ.

வசந்தன் வருகின்றான்.

வச. சத்தியவதி! இப்பொழுது சிறையிலிருப்பது யார்? என்ன சும்மா இருக்கின்றாய்? உம் — பெண் புத்தி பின் புத்திதானே? இந்தக் கஷ்டம் வேண்டாம், என்னை காதலிப்பதாக ஒரு வார்த்தை சொல்லிவிடு நீ இது வரையிலும் இருந்த ஸ்திதியைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமான உயர்ந்த பதவியில் உன்னை வைக்கின்றேன். — கண்ணே! உன் மீதுள்ள ஆசையோ இக் கொடுந் தொழிலைச் செய்யும்படி ஏவியது. ஒரு வார்த்தை சொல்லிவிடு, இந்த க்ஷணமே சிறையினின்று வெளியே விடுகிறேன். என்ன சொல்லுகின்றாய்?

சத்தி. அடா பாவி! மறுபடியும் வந்தாயா? அடா பாதகா! சண்டாளா! உனக்கு இரக்கமென்பதில்லையா?

வச. பெண்ணாய்ப் பிறந்த உனக்கே இல்லையே; எனக்கு எப்படி உண்டாகும்.

சத்தி. என் நெஞ்சம் பற்றியெரிகிறதே! பாதகா! போ; என் முன் நில்லாதே!

வச. அப்படியா? நல்லதிருக்கட்டும்! அடே காவற்காரா! சிறைச்சாலை கதவுகளை எல்லாம் செவ்வையாய் பூட்டிருக்கிறதா?

2. காவ. ஆ, நல்லா பூட்டிருக்கேன் மஹாராஜா!

வச. அடி! சத்தியவதி! என் வார்த்தையை நீ கேட்கவில்லையல்லவா? நல்லது இன்றிரவு பார்த்துக் கொள்வோம். — அடே! காவற்காரர்களே ஜாக்கிரதையாயிருங்கள் [போகின்றான்.]

1. கா. அப்படியே மஹாராஜா!



சத்தி. ஐயோ! தெய்வமே! இன்றிரவு பார்த்துக் கொள்வோமென்று சொல்லிச் சென்றானே என்ன செய்வானோ தெரியவில்லையே! ஆ! தெய்வமே!

1. காவ. அண்ணே, என்ன அநியாயம் பாத்தையடா? மகாராணியம்மாவையே இப்படிச் செய்திருக்காங்களே பாவிங்க — இப்பொ ராஜகுமாரனிருந்தா, இந்த ராஜாவை குலோச்சு பண்ணிட்டு யிருப்பாரு நல்லகாலம்.

2 காவ. பாவம்; அவருதான் செத்துப் பூட்டாரே! அவருயிருந்தா தெரியும். உம் — மொட்டப் பயங்கோ தலே விரிச்சுகினு ஆடுறாங்கோ! நமக்கென்ன அதெல்லாம்? — அண்ணே எனக்கு நேத்தெல்லாம் கூட தூக்கமே யில்லே. இன்னைக்குங் கூட அப்படித்தான் யிருக்குமாம் போலயிருக்குது — எனக்கு தூக்கம் வருது, நான் கொஞ்சநேரம் படுத்துகிறேன். [படுத்துக் கொள்ளுகிறான்.]

1. காவ. அப்படித்தான் செய்வேன், எனக்கு காலெல்லாம் கூட நோவுது. நான் கொஞ்சம் குந்திக்கினிருக்கிறேன்.

சத்தி ஆஹா! இவர்கள் கூட அழகானந்தன் இறந்ததாகவே யுரைக்கின்றனரே! ஐயோ! ஐயோ!! என்செய்வேன்! என்செய்வேன்!! ஆ! அழகானந்தா! அழகானந்தா!!

அழகானந்தன் ஓடி வருகிறான்.

அழ. அம்மணீ! வந்தேன்! வந்தேன்!! எங்கே அப்பாதகன்? [சிறையின் அருகாமையில் சென்று பூட்டிருப்பதை பார்த்து] என்னடா! சும்மா நிற்கின்றீர்கள்? கதவைத்திறவுங்கள் உடனே!

1. காவ. — எங்கொ கிட்டசாவி யில்லே.

சத்தி. ஆ! குமாரா! குமாரா!! உயிருடன் காணப்பெற்றேனே! அப்பா! மோசம்! மோசம்!!

அழ. [காலால் சிறையின் கதவை உதைத்துத் தள்ள, சத்தியவதி வெளியே வருகிறாள்] அம்மணீ! நீர் பத்து மாதம் சுமந்து பெற்ற மகன் யானிருக்கும் பொழுது, நீர் ஏன் வருந்த வேண்டு

சூரசேனன் வருகின்றான்.

அழ. சூரசேனா! எங்கே சத்தியசீலர்?

சூர. நம்பெருமானே! இன்றையதினம் சபைக்கூட போகிறார்களாம், அதற்காக அவ்விடம் சென்றிருக்கின்றார்.

அழ. எங்கே அவர்களெல்லாம்?

சூர. இதோ வருகிறார்கள்.

பிரதாபசந்திரன் தாரணி வருகின்றார்கள்.

அழ. அம்மா! இவர்தான் பிரதாபசந்திர மஹாராஜா. இதோ இவள்தான் அவருடைய புத்திரி தாரணி என்பவள்.

சத்தி. அப்பா சந்தோஷம்.

பிர. அம்மா! கொலைபாவங்களுக் கஞ்சாதவனான வசந்தன் வார்த்தையைக் கேட்டு, நான் படை எடுத்து வந்ததைக் குறித்து என்னை மன்னிக்க வேண்டும்.

சத்தி. கடவுளுடைய செயல் அப்படி யிருந்தால் நாம் என்ன செய்யக் கூடும்.

அழ. அம்மணி, என் தந்தையின் உத்திரவுபடி நான் போய் பழி வாங்க வேண்டும். என்ன சொல்லுகின்றீர்?

சத்தி. கண்ணே நான் சொல்வதைக்கேள். நீ இப்பொழுதே நேரிற் சென்று அப்படுபாவியைக் கண்டு நியாயங் கேட்டுப்பார்.

அழ. நியாயம் — ஆ! நான் இன்னும் சும்மா யிருக்கின்றேன்! அடே! சண்டாளா! இதோ வருகின்றேன்!! என் தாயாரை இக்கோலத்தில் கண்ட உன்னை பழிவாங்க! சூரசேனா! வா என்னுடன்! — தாரணி! என் தாயாருடன் இரு. இதோ வந்து விட்டேன் [ அழகானந்தனும், தாரணியும் போகிறார்கள். ]

பிர. இன்னும் இவர் கோபத்தை தணிக்க யாராலும் ஆகாது!

தார. மாமி! நாம் கூட போவோமா அங்கு?



சத்தி. கண்ணே! இப்பொழுது போகலாகாது சுத்த வீரனாகிய உன் கணவனுக்கு ஒன்றும் வாராது. வா போவோம் அந்தப் புரத்திற்கு. [ போகிறார்கள். ]

---

## ACT 4 Scene 2.

இடம் — அரண்மனை.

வசந்தன் சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றான்.

மந்திரிகள், பிரதானிகள் முதலானோர் புடைசூழ்ந்திருக் கின்றார்கள். சத்தியசீலர், நீலகண்டர் ஒருபுறம் உட்கார்ந்திருக்கின்றனர்.

ஒருசேவகன் வருகின்றான்.

சேவ. மஹாராஜா! சேனாதிபதியவர்கள் அரண்மனை வாயலில் காத்துக் கொண்டிருக்கின்றார்.

வச. சரி; வரச்சொல்.

சூரசேனன் வருகின்றான்.

சேவ. மஹாராஜா! இளவரசர் அதிகக் கோபத்துடன் வந்திருக்கின்றார். தங்களைப் பார்க்கவேண்டும்.

வச. இளவரசன் யார்?

சூர. அழகானந்தர்!

வச. என்ன அழகானந்தனா! எனக்கு ஆச்சரியமா யிருக்கின்றது அவனாவது! வருவதாவது!

ஓர் சேவகன் வருகின்றான்.

சே. மஹாராஜா! இளவரசர் அடங்காக் கோபங் கொண்டிருக்கின்றார். தங்களுடைய உத்தரவுக்காக காத்துக்கொண்டிருக்கின்றார்.

வச. அவன் கோபங்கொண்டிருந்தால் என்னை என்ன செய்யக் கூடும். சூரசேனா, எதற்காக அவன் என்னைப் பார்க்க வேண்டுமாம்?

சூர. அது அவர் வந்தபிறகு அவரைக் கேட்டால் தெரியவரும். என்னைக்கேட்டால் எனக்கென்ன தெரியும். எப்படியாவது சீக்கிரம் காவலாளிகளை உள்ளேவிடும்படிக்கட்டளைசெய்யும், இல்லாவிடின் அவர் இவர்களையெல்லாம் மீறிக்கொண்டு வருவார் அவ்வளவு தான்.

வச. அடே நீ சென்று கொலையாட்களை வரும்படி நான் சொன்னதாகபோய் விசிரில் !

சேவ. அப்படியே மஹாராஜா.

வச. சூரசேனா ! அப்படி அழகாநந்தன் என்னைக் காணவேண்டுமென்றால் நமது அரண்மனைச் சேவகர்களைக் கொண்டு இரும்புச் சங்கிலிகளால் கட்டிக்கொண்டு வரும்படி நான் சொன்னதாக சொல்லி அழைத்துக்கொண்டுவா ; போ.

சூர. அழகாநந்தரையா இரும்புச்சங்கிலிகளாற் கட்டிக் கொண்டு வரும்படி கூறுகின்றீர் ! என்ன யுக்தி ? என்ன புத்தி ? மஹாராஜா, அவரைக் கட்ட யாராலாகும் ? அழகாநந்தரை இன்னாரென்று மறந்தீரோ ?

இரண்டு காவற்காரர்கள் வருகின்றார்கள்.

1.காவ. மஹாராஜா ! பயம் — பயம் — பயம் — பயம் —

வச. என்னடா சமாசாரம் ?

1.காவ. பயம் — பயம் — பயம் — பயம் — பயம்மா—

வச. ஏன் பயப்படுகின்றாய் ? சொல் சீக்கிரம்.

காவ. பயம்—பயம்—

வச. [இரண்டாவது காவற்காரனைப் பார்த்து] அடே ! நீ சொல் சீக்கிரம்.

2.காவ. சின்ன ராஜா ! சின்ன ராஜா—

வச. பயப்படாதே ! சொல் சீக்கிரம்.

காவ. சொல்றேனுங்கோ ! சிறைக்கதவே உடைச்சுட்டு தேவியம்மாளே இட்டுகினு பூட்டாருங்கோ.

வச. ஆமா ! என்ன செய்தான் அவன் ? [கொலையாட்கள் வருகின்றார்கள்.] அப்படியா ! ஏ கொலையாட்களே ! நான் சிறையிலடைத்த சத்தியவதியை என் உத்தரவின்றி துராத்காரமாய்



வெளிப்படுத்தின அச்சிறுவனை இப்பொழுது இரும்புச்சங்கிலிகளால் இங்கே கட்டி என் முன் கொண்டுவரப் போகின்றார்கள். அது சமயம் நீங்கள் அவன் மீது பாய்ந்து கொன்று விடுங்கள்.

கொலை. அப்படியே ; மகாராஜா ! கட்டிருந்தா கொன்னுடுவோம் ; இல்லாபோனா எங்க அண்ணேமாரு கதிதான் எங்களுக்குக் கூட.

சூர. மஹாராஜா ! இப்பொழுது தாங்களிட்ட கட்டளையை இளவரசர் கேட்டிருந்தால் எல்லோரையும் அந்த க்ஷணத்தில் அதமாக்கியிருப்பார். அது போகட்டும் இப்பொழுது என்னசொல்லுகின்றீர் ?

வச. சூரசேனா ! இவையெல்லாம் நீ எனக்குக் கூறவேண்டியதில்லை. அவன் என்னைப் பார்க்கவேண்டுமென்றால் அவ்விதம் வந்தாலொழிய நான் பாரேனென்று சொல், போ !

சூர. உத்தரவுபடி, நான் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன். பிறகு தங்களுடைய இஷ்டம். [போகிறான்.]

சத். மஹாராஜா ! சத்தியவதியம்மாள் என்ன குற்றஞ் செய்தார்களென்று சிறைச்சாலையிற் அடைத்தீர்கள்? அதை நாங்களெல்லோரும் அறிய விரும்புகின்றோம். இப்பொழுது என்ன காரணம் பற்றி அழகாநந்தரைக் கொல்ல கட்டளையிடும்படி நேரிட்டதோ அதையும் நாங்கள் தெரிந்துக் கொள்ளும்படி அனுக்கிரகிக்க வேண்டும்.

வச. அக்காரணத்தை உங்களுக்குக் கூற எனக் கிஷ்டமில்லை.

நீல. மஹாராஜா ! அவ்வாறே அழகாநந்தர் பெருங் குற்றஞ் செய்ததாயிருந்தபோதிலும், கருணைக் கடலாகியதாம் அதை மன்னித்து எங்களெல்லோரையும் சந்தோஷிப்பீர்களென்று மிகவும் பிரார்த்திக்கின்றோம். தமயன் குமாரராயிருந்தாலென்ன ! தங்களுடைய குமாரரா யிருந்தாலென்ன ! அவருடைய குமாரர் உம்முடைய குமாரரன்றோ ? ஆகலால் இவைகளையெல்லாம் யோசித்து அவரைப்போய் சமாதானமாய் அழைத்துக் கொண்டுவாரும். இல்லாவிட்டால் சூரசேனர் கூறியபடி அவரைக் கொல்பவர் யாரிருக்கின்றனர் ?

அவர் முனிந்தால் இம் மூவுலகமும் பொடியாய் விடுமே ! நமது ஜனங்களெல்லாம் அவர் மீது அன்பு மிகுந்து, அவரைத் தெய்வம் போல்தொழுது வருகின்றனர். இப்பொழுது இவைகளை யெல்லாம்கேட்பினும் ஜனங்களெல்லோரும் கலகஞ் செய்வார்கள் !

ஓர் சேவகன் வருகின்றான்.

சேவ. மஹாராஜா ! இளவரசர் முதல்வாயிலைக் கடந்து உள்ளே வந்து கொண்டிருக்கின்றார். இங்குநாங்கள் கொலுமண்டபத்துள் விடுவதோ, அல்லது எப்படியோ உத்திரவு.

வச. வேண்டாம், ஏ ! கொலையாட்களே ! நீங்கள் சென்று உங்கள் வேலையைப் பார்த்து விடுங்கள்.

1. கோலை.மகாராஜா ! எங்களுக்கு பயமாயிருக்குது. அவர் முனிந்தா நாங்க எப்படி தப்புவது.

வச. பயப்படாதீர்கள், போங்கள் ! விலங்கில் பூட்டியிருக்கும் பொழுது பயமென்ன ?

ஒருமந்திரி. மஹாராஜா ! அவரிதனாலெல்லாம் தடைப்படுவாரோ ! வேண்டாம் ! வேண்டாம் ! !

சூரசேனன் வருகின்றான்.

சூர. மஹாராஜா ! அழகாநந்தர் அடங்காக் கோபங்கொண்டிருக்கின்றார். இப்பொழுது இன்னும் சற்று நேரம் தாம் இம்மையாயிருப்பீராயின், உஜ்ஜியினி நாடெல்லாம் அழிந்து போகும்! முன்பு அவர் விலங்கின்றக் கட்டுண்டு வந்தாலொழிய பாரேனென்பதற்கே இப்பட்டண முழுவதையும் பொடிப்படுத்தி விடுகிறேனெனக் கூறினர் ! நாங்கள் அருகிலிருந்து கோபத்தை சற்று தணிக்க, தானாகத் தனது கையினால் தளைகளை யெடுத்துப் பூட்டிக் கொண்டார். அப்படியிருக்கமது படியும் இங்கு உள்ளே வரலாகாதெனக் கட்டளை யிட்டீராமே: வேண்டாம் ! வேண்டாம் !! மிஞ்சிவிடும் ! உமது உயிருக் கேசேதந்தான் ! உடனே சேவகர்களுக்கு அவரை உள்ளே விடக்கட்டளை செய்யும்.

எல்லோரும். ஆம் ! ஆம் !! மஹாராஜா ! உடனே கட்டளை யிடும் !



அழ. [உள்ளேயிருந்து] ஆஹா ! யார் அவன் என்னை உள்ளே விடேன் என்கிறது ?

எல்லோரும். வந்து விட்டார் ! வந்து விட்டார் !! [கொலுவில் குழப்பமுண்டாகின்றது. இரும்புச் சங்கிலிகளால் தன்னைக் கட்டிப் பிடித்திருக்கும் எட்டு சேவகர்களையும் அப்படியே யிழுத்துக்கொண்டு அழகாநந்தன் கோலாகலமாய் விரைந்து நுழைகின்றான்.]

அழ. அடே ! சண்டாளா ! வசந்தா ! நான் விலங்கிற் பூட்டப்பட்டாலன்றி என்னைக் காணமாட்டேனென்றது உண்மைதானா ?. இப்பொழுது இங்கிருக்கும் காவலாளர்களுக்கு என்னை உள்ளே விடலாகாது என்று நீ கட்டளையிட்டது உண்மைதானா ? அடே ! சண்டாளா ! துரோகி ! என்ன காரணம்பற்றி என் தாயாரை சிறையிலிட்டனை ? என்னகுற்றம் செய்தார்கள் ? என்னடா நான் கேட்பதற்கு வாளாயிருக்கின்றனை ! அடே ! தமயன் பத்தினியை பெண்டுக்கழைத்தசண்டாளா ! இதுவரையில் என் தயாருக்கும் எனக்கும் செய்து வந்த தீமைகளை யெல்லாம் எவ்வளவோ பொறுத்தேன் ! இனி நான் பொறுக்க மாட்டேன் ! இதற்கு நியாயம் எடுத்துரைக்கின்றாயா என்ன ? என் தந்தையை விஷம் வைத்துக் கொன்ற படுபாவி ! என்ன நியாயங் கூறுகின்றாய்? என்ன சொல்லுகின்றாய் ஏன் என் தாயாரை சிறைபடுத்தினாய் ? சொல் சீக்கிரம் !

வச. அது என் இஷ்டம் !

அழ. உன் இஷ்டமா ! என்ன சொன்னாய் ?

வச. அடே ! கொலையாட்களே ! உங்கள் வேலையை பார்த்துவிடுங்கள் ! [கொலையாட்கள் கத்தியையோங்கி அழகாநந்தனை கொல்லவருகிறார்கள். அழகாநந்தன் திமிறித்தன்னைக் கட்டிய சங்கிலிகளை யெல்லாம் அறுத்துக்கொண்டு]

அழ. அடே ! அப்படியா சமாசாரம் ! என்னைக் கொல்லவா பார்கின்றீர்கள் ?

எல்லோரும் ஹா ! ஹா ! [ஆரவாரமுண்டாகின்றது]

அழ. அடே ! கொலைபாதகர்களே ! என்ன செய்யத் துணிந்தீர்கள் ? இதோ உம்மிருவரையும் கொன்று பழிவாங்குகின்றேன் !

1,2 கோலே. ஐயோ! ஐயோ! நான் இல்லெ சாமி! [இருவரும் ஓடி விடுகிறார்கள்.]

அழ. ஓடுங்கள் கழுதைகளே! அடே! வசந்தா! என்னையும் கொல்லப்பார்த்தனையா? எடுத்துக் கொள் உனது வாளை. அழகாநந்தனுடைய புயவலிமை இன்றே காண்பாய்! தர்மத்தையும் பாராமல் என் தாயாரை சிறையிலிட்ட உன் தலையை வெட்டி எறிகிறேன்! அடே! காத்துக்கொள் உனது தலையை சௌரியமிருந்தால்! [சிம்மாதனத்தின் மீது பாய்ந்து வாளை யோங்குகின்றான். சபையோருக்குள் பெருங் குழப்பமும் ஆரவாரமுமுண்டாகின்றது.]

எல்லோரும். ஆ! ஆ!! அரசே! பொறும்! பொறும்!!

அழ. தனது தாயினை ஒரு பொருளாக மதிக்கின்றவன் என் எதிரில் நில்லான் இப்பொழுது! [மந்திரி பிரதானிகள் இரண்டு புறமும் பயந்து ஒதுங்கிப் போகின்றனர்.]

வச. அடே! அழகாநந்தா! சுத்த வீரனென்று உலகெலாம்பெயர் பெற்று இப்பொழுது உனக்கா நான் பயந்து பின்வாங்குவேன்? எடு வாளை ஒரு கை பார்ப்போம்.

சத்தியவதி, தாரணி, பிரதாபசந்திரன் வருகின்றார்கள்.

அழ. அடே! என் தாயாரைக் கெடுக்கப் பார்த்தது மன்றி என்னையும் கொல்லப் பார்த்த சண்டாளா! இதோ உன்னை பழி வாங்குகின்றேன் என் தந்தையை கொன்ற திருடா! [ஓங்கி வெட்டுகின்றான்.] [அதை அவன் தடுத்து விட்டு] அடே! இதை தடுத்துக்கொள் பார்ப்போம். [தடுத்துக்கொண்டு வசந்தன் வெட்ட அவன் தடுத்து விடுகின்றான்.]

சத்தி. ஆஹா! குமாரா! சுகீரா!!

தார. ஆ! பிராணநாதா! பத்திரம்!

அழ. அம்மணி! பயப்படாதீர்கள்! இதோ அவன் தலை சாய்ந்து விட்டது! [வசந்தன் கீழே விழுந்து மரணவேதனை]

வச. ஈசனே! இதோ நான் புரிந்த கொடுந்தொழிலின் பயனை க்ஷணத்தில் அநுபவிக்கப் போகின்றேன்.

அழ. என் தந்தைக்குக் கொடுத்த வாக்கை இதோ ஈடேற்றி விட்டேன்.



வச. ஆ! ஈசா! இதோ மாள்கின்றேன்! [மரித்தல்]

சத்தி. நீ செய்த கொடுந்தொழிலுக்குத் தக்கபடி தண்டிக்கப்பட்டனை! யாரங்கே? அவனை எடுத்துச் செல்லுங்கள். எல்லாம் ஈசனது கிருபையால் நன்றாய் முடிந்தன! நமது பிரிய நண்பராகிய தாரா நகரத்து பிரதாபசந்திரமகாராஜரும் தமது பந்து மித்திரர்களுடன் சேர்ந்தனர்!

பிர. சபையோர்களே! என்னை மன்னித்து யான் கூறுவனவற்றைச் சிறிது கவனித்துக் கேட்கவேண்டும். கொலைபாவங்களுக்கஞ்சாத வஞ்சக வசந்தன் வார்த்தையைக்கேட்டு இவரைக்கொல்ல ஒப்புக்கொண்டேன். இதையறிந்து என் புத்திரியே அவரை எங்கள் கையினின்றுங் காப்பாற்றினள்! அவரது மெய்க்காதலையும் பெற்றனள்! அவருக்கும் இவள்மீது காதலுண்டாயிருக்கின்ற தென்றறிந்து ஆநந்தங்கொண்டேன்! — அழகாநந்தரே! நீவிர் செய்த பேருதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்? திருடர்களிடமிருந்து என்னுயிரைக்காப்பாற்றிய வீரசிம்மமே! என் புதல்வியைத் தாம்முன்னமே காந்தர்வத்தினால் மணந்தவராயினும் மறுபடியுமிப்பொழுது நாங்கள் கண்டு களிக்க இவளைப் பாணிக்கிரகணஞ் செய்து எங்களை யனுக்கிரஹிக்கவேண்டும்.

அழ. அப்படியே! மிகவுஞ் சந்தோஷம்.

பிர. நீவிர் இருவரும் நமது பந்து மித்திர களத்திரர்களுடன் நீடூழிகாலம், ராஜாதிராஜராய், உஜ்ஜியனி ராஜ்ஜியத்தையும் தாரா ராஜ்ஜியத்தையும் பரிபாலித்து வருவீரெனப் பிரார்த்திக்கின்றேன்!

அழ. அப்படியே! ஏதோ சிறியேன் என்றுமியன்றமட்டும் நீதி நெறிவழுவாமல் அரசுபுரிகின்றேன்.

சத்தி. பிரதாபசந்திரரே! என் நேசத்திலேயே இவர்களிருவருக்கும் விவாகம் நடத்த விடையளிக்க வேண்டும்.

பிர. உமதிஷ்டம்.

சத்தி. சத்தியசீலரே! என்ன சொல்லுகின்றீர்?

சத். அம்மணி! இனி இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மனமகிழ்ந்திருப்பதைக் காண்பதைவிட எனக்கு வேறென்னவேண்டியது? — சபையோர்களே! யான் கருதியதொன்றுளது!

அதை நீங்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும். அதாவது, இப்பொழுதே இவர்களுக்கு முடி சூட்ட விடைதந்தருளவேண்டும்.

எல்லோரும். அப்படியே ! மிகவுஞ்சந்தோஷம் ! [ எல்லோரும்போகிறார்கள் ]

---

## ACT 4, Scene 3.

இடம் — அரண்மனை.

அழகாநந்தரும், தாரணியும், சிம்மாதனத்தின்மீது வீற்றிருக்கின்றார்கள்.
சூரசேனன், சத்தியசீலர், நீலகண்டர் முதலானோர் நிற்கின்றார்கள்.
சத்தியவதி சிம்மாசனத்தின் அருகாமையிலிருக்கின்றாள்.
பிரதாபசந்திரன் மகுடத்தை அழகாநந்தனுக்கு சூட்டுகின்றான்.

பிர. கடவுள் கிருபை செய்வாராக !

அழ. சந்தோஷம் "என்னைப் பெற்ற தாய் தந்தையன்றி எனக்குப் பிறிதொரு தெய்வமில்லை"

சத்தி. என் பூர்வ புண்ய வசத்தால் எல்லாம் சுகமாய் முடிந்தது. இனிச் சுகமாய் நீ மனைவி மைந்தர்களுடன் நீடூழி காலம் அரசு புரிவாயாக !

அழ. சபையோர்களே ! நான் இவ்வளவு சுகத்தை பெறத் தக்கவனல்லன். ஏதோ என் முன்னோருடைய பூர்வ புண்ய பயனே இது. என் கற்பிற்கரசியாகிய தாரணியை மணம் புரிந்தேன் ! மந்திரிகளுக்கு நடுநாயகம் போன்ற சத்திய சீலரையே எனக்கும் முதன் மந்திரியாயடையப்பெற்றேன் ! சகல நீதிகளையுமறிந்த நீலகண்டரையும் எனது முக்கிய மந்திரியாயடையப்பெற்றேன் ! என் பிராணனைப் பன் முறைக் காப்பாற்றிய என் பிராணநேசன் சூரசேனனையும் எனது முக்கிய சேனாதிபதியாகக் கொண்டேன் ! பிரதாபசந்திர மஹாராஜரது நல்லபிப்பிராயத்தையும் கொண்டேன் ! தங்களது அநுக்கிரகத்தால் இவ்வுஜ்ஜயனீ தேசம் முழுதிற்கும் சக்கிரவர்த்தியானேன் ! இனி இவ்வுலகில் பெறத்தக்கதென்ன இருக்கின்றது? எல்லாம் ஈசனது திருவருளே !

சுபம் ! சுபம் !! சுபம் !!!

நாடகம் முற்றிற்று

---